
உ

# சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வுநூலகம்



## திறப்புவிழாச் சிறப்பு மலர்

07-01-2002

Dr. (Mrs.) S. KANAGASABAI
GOVT. MEDICAL OFFICER
(CMC REG. NO. 6443)

உ

துர்க்காதேவி துணை



# சிவத்தமிழ்ச்செல்வி
# சைவத்தமிழ் ஆய்வு நூலகம்
# திறப்பு விழாச் சிறப்பு மலர்

Dr. (Mrs.) S. KANAGASABAI.
M. B. B. S. (PERADENIYA, S. L.)
MEDICAL OFFICER

Dr S Kanagasabai
PENG (APEO) LMIEEE (USA)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை – இலங்கை
07 - 01 - 2002

*வெளியீடு :*


ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

*பிரதிகள் :*

500

*அச்சு பதிவு :*

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.



திருமுறை மடம்

Dr J K
DENG (SWU
BSC Eng (
PENG (APEO)



துர்க்காபுரம் மகளிர் இல்லம்

DR S. K...sabai
DENG (SWA... ...HAM)
BSC ENG (... ...) (CEY)
PENG (APEO) LMIEEE (USA)

உ

துர்க்காதேவி துணை

# சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்

# திறப்புவிழா – சிறப்புமலர்

**07 - 01 - 2002**

## முன்னுரை

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆண்டுதோறும் அறப்பணிகள் பல நடைபெற்று வருவது வழக்கம். இவற்றில் துர்க்கா புரம் மகளிர் இல்லம், சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம், ஸ்ரீ துர்க்காதேவி அன்னசத்திரம் ஆகியவை கடந்த காலங்களில் நிறை வேற்றப்பட்ட பணிகளாகும். சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பவளவிழாவிலன்று 07-01-2000இல் எடுக்கப் பட்ட தீர்மானத்தின்படி ஆய்வு நூலகம் ஒன்றை அமைக்கும் பணி ஆரம்ப மானது. அதற்கு உந்து சக்தியாக வெளிநாட்டுச் சைவநிறுவனங்கள் பல ஆரம்ப நிதியை அனுப்பிக் கொண்டே இருந்தன. இவற்றில் முதன்மையாக செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் சொற்பொழிவுக்காக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தில் கிடைத்த நிதி ஆய்வு நூலகத்தின் ஆரம்பப் பணிகளிற்குப் பயன்படுத் தப்பட்டது. தேவஸ்தான நிர்வாக சபையின் மூத்த உறுப்பினர் திரு வாளர் ச. ஆறுமுகநாதன் அவர்கள் இத்திருப்பணிக்குப் பொறுப்பாக அமர்த்தப்பட்டார். கட்டட மேற்பார்வையாளர்கள் திரு. ஐ. சிவலோக நாதன் திரு. ஆ. ஜனார்த்தனன் ஆகியோர் இத்திருப்பணியைக் கண் காணிப்பதற்கும், காலத்துக்குக் காலம் ஆலோசனை வழங்குவதற்கும் நியமிக்கப்பட்டனர். மிகத் துரித கதியில் இத்திருப்பணி நிறைவேறியது என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். கோயில் முன்வாயிலில் தெற்குப் புறமாக ஏழுபரப்புக் காணியில் இந்நூலகம் இடம்பெற்றுள்ளது. புதி தாக நிதி சேகரிப்பு எதுவுமின்றி பொருள் உபகாரிகளால் வழங்கப் பட்ட பணத்தை நல்லபடி பயன்படுத்தியும், வங்கிகளிலிருந்து மீளப் பெற்றும் திருப்பணி நிறைவேற்றப்பட்டது. நூலக முன்புறத்தில் அன்னை சரஸ்வதியின் உருவச்சிலை வெண்தாமரைப் பூவிலே அமைக் கப்பட்டுள்ளது புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் திரு. வை. சிவசுப்பிர மணியம் (ரமணி) அவர்கள் இச்சிலையை அமைத்து நூலகத் திருப் பணியை நிறைவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் அலங் கார வேலைகள், நூலக அமைப்பு வேலைகள் ஆகியவற்றுக்கு ஆலோ சனை வழங்கி நிறைவேற்றித்தந்த சிற்பாசாரியார் திரு. வே. பாலேந் திரன் அவர்களின் கைவண்ணமும் கருத்து வண்ணமும் இங்கு இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நமது எண்ணங்களே எம்மை வாழ்விக்கின்றன என்பது பெரியோர் நம்பிக்கை. தேவஸ்தான நிர்வாகசபை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் திருப்பணிகள் அடியார்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன. அதே வரிசையில் இன்று நிறைவேறி இருக்கும் ஆய்வு நூலகத் திருப்பணி முதன்மை பெறுகிறது. இந்நூலகத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இடம்பெறுகின்றன. பண்டைத்தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், பதினெண் புராணங்கள், வரலாற்று நூல்கள், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பிரபந்தங்கள் சிறப்பாக இந்நூலகத்தில் இடம்பெறுகின்றன. அத்துடன் மூவர் தேவாரம், பெரியபுராணம் திரு. சீ. கே. சுப்பிரமணிய முதலியாரின் உரை விளக்கத்துடன் இங்கு இடம்பெற்றிருப்பது கற்றறிந்தோருக்கு மிக மகிழ்ச்சியைத் தருவதாகும். பன்னாலை கதிரிப்பிள்ளை பண்டிதர் அவர்கள் கைவசமிருந்த கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகளும் அவருடைய திருமகனார் பண்டிதர் க. உமாமகேசுவரனால் எமது தேவஸ்தானத்துக்கு அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளது. மேலும் பன்னாலை சைவ சித்தாந்தப் பேரறிஞர் திருவாளர் V. சங்கரப்பிள்ளை அவர்களும் மானிப்பாய் அமரர் வைரமுத்து ஐயா அவர்களும் நாவலர் பாடசாலை அதிபர் திரு. செ. இராசநாயகம் நினைவாக திரு. கா. முத்துக்குமாரசாமி அன்பளிப்புச் செய்த நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. 1954ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரைதமிழகத்திலிருந்து வெளிவந்த ''ஞானசம்பந்தம்'' என்னும் சஞ்சிகை ஆண்டுதோறும் புத்தகமாக உருவாக்கப்பட்டு இங்கு வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று சென்னை சைவசித்தாந்த மன்றத்தினரால் வெளியிடப்பட்ட ''சைவசித்தாந்தம்'' என்ற சஞ்சிகைகள் வருடம் தோறும் திரட்டப்பட்டு புத்தகமாக்கி இங்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் குமரகுருபரன், ஞான பூமி, இராமகிருஷ்ண விஜயம், கோகுலம் ஆகிய தமிழகத்துச் சஞ்சிகைகளும் இந்து சாதனம், கோபுரம், ஞானச்சுடர், சைவநீதி ஆகியவற்றுடன் ஏனைய சில சஞ்சிகைகளும் பேணப்பட்டு இங்கு இடம்பெற்றுள்ளன.

ஈழத்திலும், யாழ்ப்பாணத்திலும் அவ்வப்போது வெளியிடப்பட்ட ஆண்டுவிழா மலர்கள், கும்பாபிஷேக மலர்கள், பரிசளிப்புவிழா மலர்கள், சைவசமூக நிறுவனங்களின் ஆண்டுவிழா மலர்கள் ஆகியனவும் இவ் ஆய்வு நூலகத்தை மதிப்பாக்குகின்றன.

உலகநாடுகளில் தமிழ்பேசும் மக்கள் வெளியிட்டிருக்கும் சிறப்பு மலர்கள் பல இங்கு பேணப்பட்டுள்ளன, அத்துடன் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலர், பாரதி மலர், மீனாட்சி சுந்தரேசர் கும்பாபிஷேக மலர்,

நாவலர் மலர், ஏனைய பிரபல்யம் வாய்ந்த ஆலயங்களின் கும்பாபிஷேக மலர்கள் ஆகியனவும் இவ் ஆய்வு நூலகத்தை அணிசெய்கின்றன.

எங்கள் தேவஸ்தானத்தால் காலத்துக்குக் காலம் வெளியிட்ட நூல்களும், சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களின் ஆக்கங்களும் எங்கள் மண்ணை அணிசெய்யும் அறிஞர்கள் சிலரின் படைப்புகளும் இங்கு இடம்பெற்றிருப்பது கற்றோர் மத்தியில் நல்லவரவேற்பைத் தந்துள்ளது.

''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்'' என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மை ஆகும். அத்துடன் ''கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்'' என்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது. கல்விச் சாலைகளிலே குறிப்பிட்ட ஒரு வகுப்புக்கு ஏற்ற பாடங்களிலே மாத்திரம் படிப்பதும் படிப்பிப்பதும் உண்டு. ஆனால் நூல்நிலையங்களிலே அனைத்து நூல்கள், சஞ்சிகைகள், மலர்கள் என்று பலவகையான வழிகளில் வாசிப்பைப் பெற்று அறிவை விருத்திசெய்து கொள்ளலாம். எங்கள் ஆலயத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளுக்காகவும், தேவஸ்தானத்துக்காகவும் கடந்த இருபது ஆண்டுகளாக ஒரு நூல் நிலையம் தேவஸ்தான நுழைவாயிலுக்குப் பக்கமாக அமைக்கப்பட்டிருந்தது. பாலர் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கற்கின்ற மாணவர்களுக்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட சில நூல்களும் சஞ்சிகைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. காலகதியில் எல்லோருக்கும் பயன்படக் கூடியதாக நூலகப்பணியை விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணம் துர்க்காதேவி தேவஸ்தானத்தினருக்கு ஏற்பட்டது. இந்த எண்ணக்கருவே இன்று சைவத்தமிழ் ஆய்வுநூலகமாகப் பரிணமித்துள்ளது. எமது தேவஸ்தானத்தை நோக்கித்தரப்பட்ட பல சிறந்த தமிழ், ஆங்கிலநூல்கள் வைக்க இடமின்றி ஆங்காங்கு பரவலாகக் குவிக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் ஒரே இடத்தில் இடம்பெறச் செய்து அனைவர்க்கும் பயன்படுத்த வேண்டும் என்பது எமது வேணவா. உயர்தர வகுப்பு மாணவர்கள் பலர் இங்கு வந்து சிலமணி நேரம் தங்கியிருந்து குறிப்பு எடுத்து தமது ஆய்வைச் சமர்ப்பிப்பது வழக்கம். இந்தப் பணியை முழுமையாக வழங்குவதற்கு எமக்கு இடவசதி இல்லாமல் இருந்தது. ஆனால் இன்று அக்குறைபாடு நீங்குகிறது. நூலகர் ஒருவர் நியமிக்கப்பட இருக்கிறார். நூல்களைப் பேணும் இடம், நூல்களை வைத்து வாசிக்குமிடம், நூல்களிலிருந்து ஆராய்ச்சிக் குறிப்பைத் திரட்டிக் கொள்ளும் இடம், நூலகருக்கான தங்குமிடம், வாசகர்கள் ஆய்வுசெய்யும் இடம், என்பன இக்கட்டடத்திலே அமைந்துள்ளன. யாழ்ப்பாண மக்கள் எல்லோருக்கும் ஒரு அறிவுக் களஞ்சியமாக இந் ஆய்வு நூலகம் விளங்க வேண்டும் என்பது தான் எமது தேவஸ்தானத்தின் பெரு விருப்பமாகும். தரமானதும் கிடைத்தற்கு அரியதுமான பல நூல்கள் இங்கு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆ

இத்திறப்பு விழாவில் பங்குபற்றுகின்ற அறிஞர் பெருமக்களையும், ஆன்மீகச் செல்வர்களையும் வரவேற்க வேண்டிய கடமை எமக்குண்டு. கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர் உயர்திரு சி. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் இவ் நூலகத்தைத் திறந்து வைத்து பிரதம விருந்தினர் உரை ஆற்ற இருக்கிறார்கள். அவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றி உரித்தாகுக. யாழ். மேல்நீதிமன்றநீதிபதி உயர்திரு சி.பி.எஸ். வரதராஜா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்ற இருக்கிறார். வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும், வலிகாமம் கல்விவலய உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களும் நிகழ்த்த இருக்கின்றனர். அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக. இவ்விழாவின் சிறப்பு மலரை வெளியிட்டு ஆய்வுரை வழங்க இருப்பவர் கல்வியியல் பேராசிரியர் திரு. சபா. ஜெயராசா அவர்கள். அவருக்கும் எமது தேவஸ்தானத்தின் சார்பில் நன்றி உரித்தாகுக. மாலை நிகழ்ச்சிக்கு தென்மராட்சி கல்விப்பணிப்பாளர் திரு. வ. செல்வராஜா அவர்கள் தலைமை தாங்கி தேவஸ்தானத்தின் பேரில் உயர்வகுப்பு மாணவர்கள் 150 பேருக்கு கல்வி உபகரணத்துக்கான அன்பளிப்பை வழங்க இருக்கிறார். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. க. சிவாஜி அவர்கள் இந் நிகழ்வுக்கான பாராட்டுரையை வழங்க இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இத்திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட இம்மலருக்கு ஆசியுரை, வாழ்த்துரை, கட்டுரை வழங்கிய ஆன்மீகத் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள், பேராசிரியர்கள், வெளிநாட்டுச் சைவ சமூக நிறுவனங்களின் பிரமுகர்கள் யாபேருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக

அத்துடன் இவற்றை எல்லாம் கோவைப்படுத்தி சிறப்பு மலராக வெளிவருவதற்கு ஆவன அனைத்தையும் செய்து தந்த தேவஸ்தான அலுவலகர் மட்டுவில் சைவத்திரு கா. சிவபாலன் அவர்களுக்கும், திருமகள் அழுத்தக முகாமையாளர் திரு. ச. இராசரத்தினம் அவர்களுக்கும், திரு. ச. உமாசுதன் அவர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக. அனைத்து நிகழ்வுகளுக்கும் ஒப்புதல் அளித்து எம்மை ஊக்குவிக்கும் நிர்வாகசபைக்கும் பிறந்தநாள் அறநிதியச் சபையினருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

**துர்க்கா சரணம்! சரணம்!! சரணம்!!!**

இங்ஙனம்

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை.**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
07-01-2002

# பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | |
| ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வாழ்த்துப் பாக்கள் | | |
| நூலக வளர்ச்சியில் ஐரோப்பியப் பாரம்பரியங்களும் தமிழ்ப்பாரம்பரியங்களும் | ... | 1 |
| நூல்நிலையம் | ... | 9 |
| பொது நூலகம் குறைபாடுகளும் தீர்வுகளும் | ... | 16 |
| தீட்சண்யங்களின் திறவுகோல் நூலகம் | ... | 21 |
| நூலகம் சமூகத்தின் மாங்கல்யம் | ... | 25 |
| பாடசாலை நூலகங்களின் அமைப்பும் அதன் வளர்ச்சிப் போக்கும் | ... | 29 |
| இன்று தமிழ்மொழியில் உரைகள் ஒரு நுனித்த நோக்கு | ... | 36 |
| பண்டைய ஈழத்தில் தாய்த்தெய்வவழிபாடு ஒரு வரலாற்று நோக்கு | ... | 46 |
| அநுபந்தம் | ... | 56 |

உ


**தெல்லிங்கர்**

**துர்க்கை அம்பாளுக்கு சமர்ப்பணம்**


மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்துக்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்.



ஆய்வு நூலகக் கட்டட ஒருங்கிணைப்பாளர்
திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள்



முகப்பு முற்றத்தில் சரஸ்வதி
சிலை வடித்த சிற்பக் கலைஞர்
திரு. வை. சிவசுப்பிரமணியம் அவர்கள்
(ரமணி)



நூலகத்தின் அமைப்புக்கும்
அலங்காரத்திற்கும்
முன்னின்று பணிபுரிந்த
சிற்பக்கலைஞர்
திரு. வே. பாலேந்திரன் அவர்கள்

உ

# திரு. சரவணமுத்து ஆறுமுகநாதன் அவர்கள்

திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள் 30-10-1939ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் பிறந்தவர். இவர் ஒரு தலை சிறந்த கட்டிட ஒப்பந்தக்காரர் ஆவார்கள். எங்கள் தேவஸ்தான நிர்வாக சபையின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். கோயிலுடனும், திருப்பணி வேலைகளுடனும் மிகுந்த ஈடுபாடும், தொடர்பும் உடையவர். அண்மைக் காலத்தில் பல வசதியீனங்கள் மலிந்த வேளையில் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்திருப்பணிக்கு முன்னின்று உதவி புரிந்தார். மேலும் ''அன்ன சத்திரம்'' போன்ற பல திருப்பணி வேலைகளுக்கும் பல்வேறு வகைகளில் தமது பணியை ஆற்றினார். இன்று உங்கள் முன் காட்சி அளிக்கும் சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தின் கட்டிடப் பணிகளுக்கு மூலகாரணமாக முன்னின்றவர். தமது பல்வேறு பணிகளுக்கும் மத்தியில் தமது நேரத்தை ஒதுக்கி பகல் இரவு என்று பாராது மிகவும் துரிதமாகச் செயற்பட்டவர். கட்டிடத்துக்கு வேண்டிய மூலப் பொருட்கள் தளபாடங்கள் ஆசாரியார்கள், ஸ்தபதிகளை ஒருங்கிணைத்தல் ஆலோசனைகளைப் பெறல் போன்ற எல்லாவற்றிற்கும் மிகவும் ஆர்வமாகச் செயற்பட்டு நெறிப்படுத்தினார். இவரின் பணிகளைப் பாராட்டி வாழ்த்தி, எமது நன்றியினைத் தெரிவிக்கிறோம்.

உ

# திரு. வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம் (ரமணி) அவர்கள்

*சிற்பக்கலைஞர் திரு. வை. சிவசுப்பிரமணியம் அவர்கள் 03-08-1942ஆம் ஆண்டு அளவெட்டிக்கிராமத்தில் பிறந்தவர். ''ரமணி'' என்னும் புனைபெயருடன் வாழ்ந்து பணிசெய்துவருபவர் இவர் ஈழ நாட்டில் சிறப்புமிக்க சிற்பங்களை சிலை உருவில் வரைந்துள்ளார். தந்தைசெல்வா, சேர். பொன் இராமநாதன் போன்ற பல பெரியார்களின் சிலைகளை வடித்துப் பெருமை சேர்த்துள்ளார்.*

*வடமராட்சிக் கல்வி வலயத்தில் சித்திரம், அழகியற்கல்விப் பாடங்களுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக பணி ஆற்றி வருகிறார். மேலும் சித்திரம் அழகியற்கல்விப் பாடங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராக விரிவுரை செய்து வருகிறார். கொழும்பு நூதனசாலையில் ஒருசில ஆண்டுகள் பணிபுரிந்த பெருமைக்கு உரியவர்.*

*நல்லூரில் நிறுவிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிலையைச் செதுக்கிய இந்தியச் சிற்பி இராவ்பகதூர் நாகப்பரின் மகன் மணிவர்மன் அவர்கள் போன்றோரின் தொடர்பு இவருக்கு உற்சாகத்தை ஊட்டியது. இவர்களுடைய தொடர்பு எங்கள் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட மலரில் இடம்பெற்ற அட்டைப்படம் வரைந்த காலம் முதல் ஏற்பட்டது.*

*இன்று எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி சைவத்மிழ் ஆய்வு நூலக முன்றிலில் அமைந்த ''சரஸ்வதி'' சிலையை மிகவும் கம்பீரமாகவும் கலை அம்சத்துடனும் வடித்து பெருமையைத் தேடித்தந்துள்ளார். அவரை, அவரின் பணிகளை வாழ்த்தி எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.*

உ

# திரு. வேலுப்பிள்ளை பாலேந்திரன் அவர்கள்

திரு. வே. பாலேந்திரன் அவர்கள் 15-04-1965ஆம் ஆண்டு எங்கள் தெல்லிப்பழைக் கிராமத்தில் பிறந்தவர். இவர் ஒரு தலைசிறந்த சிற்பாசாரியார். தனது மதிநுட்பத்தாலும் அதீர முயற்சிகளாலும் பல சிற்ப அம்சங்களை அமைத்துத் தந்துள்ளார். பாடசாலைகள் கோயில்களில் வாயிலில் அமைக்கப் பெற்றுள்ள அலங்கார நுழைவாயில்கள் பல அமைத்துள்ளார். கேடயங்கள் திருவாசி அமைப்புக்கள் போன்ற பலவற்றை தமது நுட்பமான செயற்பாட்டினால் உருவாக்கியுள்ளார். கோயில்களுக்கு தேவையான பீட அமைப்புக்களை எல்லாம் புதுமை புதுமையாக செய்து தரும் திறமை படைத்தவர். எத்துறையிலும் ஆற்றலும், துணிவும், நேர்மையும் கொண்டவராகக் காணப்படுவார். இவர் ''இந்திரன்'' என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுவார்.

எங்கள் தேவஸ்தானத்தின் பல திருப்பணிக்கலை அமைப்புக்கு உதவிவருபவர். சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தின் மண்டபம், தளபாட அமைப்பு, நுழைவாயில் என்பனவற்றின் சிற்ப வேலைகளுக்கும் வர்ணப் பூச்சு வேலைகளுக்கும் சூத்திரதாரியாக முன்னின்று உதவியுள்ளார். இவர் தம்மைக் காட்டிக்கொள்ளாது ஆய்வு நூலகத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. அவரை அவரின் பணிகளை வாழ்த்தி எமது நன்றியினைத் தெரிவிக்கிறோம்.

# நாவலர் நான்காம் பாலபாடம்

தமிழ் கற்கப் புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பால பாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.

நிகண்டு கற்று, அதனுள் அடங்கிய சொற்களையும் அவை களின் பொருள்களையும் அறிந்துகொள்க.

திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலாகிய நீதி நூல் களைப் பதப்பொருளுடனே கற்றறிந்துகொள்க.

சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவர்களுக்கு இன்றி யமையாச் சிறப்பினவாகிய, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும் பழகிக்கொள்க.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

*அறியாமையை அகற்றி அறிவை வளர்க்கும் ஒவ்வொன்றும் அது எதுவாயினும் அது ஞானத்திற்கு இட்டுச் செல்லும் வாயிலாக அமையும். எம் முன்னோர்கள் எண்ணும் எழுத்தும் இரண்டுமே கல்வியை வளர்க்குமென அறியத் தந்துள்ளனர். இயற்கையறிவிற்கேற்றவாறு இரு பிரிவுகளாக எமது முன்னோர் கல்வியறிவை வகுத்தனர்.*

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

*என வெளிப்படுத்தியும் உள்ளனர்.*

*ஒழுக்கமே மனித வாழ்வின் அதியுயர்ந்த சிறப்பு. ஒழுக்க வாழ்விற்கே கல்வியும் உரமூட்டுகிறது. இதற்காகவே பண்டைய சான்றோர் பற்பல நீதி நூல்களை ஏற்படுத்தித் தந்தனர். இந்த நீதி அறிவுரைகள் கொண்டிருந்த நிலையங்கள் உயிருக்கு அமைதியளிக்கும் பிணிதீர் மருத்துவச்சாலை என வசிட்டரிஷி தசரதனுக்கு கூறியுள்ளார். இத்தகைய அறிவுறுத்தல்கள் ஆதியில் குறியீடுகளாலும் சப்தங்களாலும் வேறுபல வழிகளாலும் ஆவணப்படுத்தியும் உள்ளனர். தஞ்சை சரஸ்வதி மஹாலில் இருக்கு வேதம் உட்பட மரப்பட்டைகளில் ஆவணப் படுத்தியவற்றை இன்றும் அங்கு காணமுடிகிறது.*

*ஆதியில் உலக அறிவைப் புகட்டக் கூடிய பதினாலு நூல்களும் சமய அறிவை புகட்டக்கூடிய பதினொரு நூல்களும் மண்ணால் ஆக்கப்பட்ட தகடுகளில் குறிக்கப்பட்டு பலகாலமாக இருந்தன என்று* W. C. *பிறிக்ஸேயர்ஸ்* (W. C. Brick Sayers) *என்ற அறிஞர் நூல் நிலைய வகுப்பு* (Library Classifications) *எனும் நூலின் முகவுரையில் அறியத் தந்துள்ளார். இதே போன்று சுடுமண் தகடுகளில் எழுந்த ஞான நூல்களை சேமித்து வைக்க வேண்டுமெனக் கருதி அஸிபிரிய நாட்டரசனும் பிரசைகளது நல்வாழ்விற்கு பாடுபட்டவனுமான 'அசர்ப்பானிப்பால்'* (Assurbanipal) *மண்ணால் செய்யப்பட்ட பெட்டகங்களில் களஞ்சியப் படுத்தி வைத்தான் என்ற தகவல்களுமுண்டு. இதுவே அக்கால நூல் நிலையங்களாக இருந்தன.*

இந்தியாவில் தக்ஷசீலம், நாளந்தா, உஞ்ஞயனி எனும் அக்கால பல்கலைக்கழகங்களில் சேகரம் செய்யப்பட்ட காய்ந்த கெட்டியான இலைகளிலும் ஓலைகளிலும், கற்படிமங்களிலும், சுடுமண் தகடுகளிலும் குறித்து வைக்கப்பட்டிருந்த வாக்கியங்களும், செய்திகளும் அறிவுறுத் தல்களும் கல்வியறிவை ஊட்டி ஞானமார்க்கத்தில் இட்டுச்செல்ல உறு துணை கொடுத்தன என்று சேர்ஜோன் மார்ஷல் (Sir John Marshal) ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்து அவை அனேகமாக சமயச் சார் போடு வாழ ஏற்றங் கொண்டதாக அமைந்தது எனவும் கூறியுள்ளார். இவ்வாறு சேமித்து வைக்கப்பட்ட பகுதியை 'இரத்தினஸாகரம்' என்ற ழைத்தனர். இந்த இரத்தினஸாகரங்களில் சேமித்து வைக்கப்பட்ட சாதனங்கள் காலத்திற்குக் காலம் எழுந்த அரசு மாற்றங்களால் பிற நாட்டினர் தமது நாட்டிற்கு இவற்றை அகற்றினர். அவ்வாறு அகற்றிய செய்கையில் ஈடுபட்டிருந்த இட்ஸிங் (Itsingh) என்பவர் முதன் முறை யாகவே ஐந்நூறு சாதனங்களைச் சீனாவுக்கு அனுப்பினார் என சான்றுகளுண்டு. அண்மையில்சேர். பி. இராமநாதனது பரமேஸ்வராக் கல்லூரியில் சேமித்து வைத்த அரும்பெரும் நூல்கள் அது பல்கலைக் கழகமான போது அங்குள்ள நூல்கள் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரி பல்கலைக் கழக அந்தஸ்த்தை இழந்த போது அங்கு எடுத்து வைக்கப்பட்ட நூல்கள் திரும்ப யாழ். வளாகத்திற்கு வந்தபோது இவற்றில் ஏராளமான பெறு மதி வாய்ந்த நூல்கள் இருந்தன.

நைமிஸாரணிய வனத்தில் குறியீடுகளாக அமைந்த ஆதாரத் தடயங்கள் அனைத்தும் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் சேமிக்கப் பட்டு அதன் மூலம் பயன் அடைந்த ரிஷி சமூகத்தினர், அவற்றையே நூல் நிலையமாகக் கருதி தத்தமது அறிவை வளர்த்தும் வளர்ச்சிபெறச் செய்தும் உள்ளனர் என்பதை சமயபுராணங்கள் மூலம் அறிய முடி கிறது. பிருகு, சூதர் எனும் முனிசிரேட்டர்கள் இதற்கு முன்னோடியாக விளங்கினர். இந்த வகையில் எழுந்தவையே காலஞ்செல்லச் செல்ல, மாறுதல்கள் பெற்று பிருதுவி பலகைகளிலும் முதிரைக் கற்களிலும் தகவல்கள் பதியப்பட்டு அவ்வாறு பதிந்து சேகரம் செய்த நிலை யத்தை ''மந்ரகிருஹம்'' என்றும் '' மத்ரமஹால் '' என்றும் அழைத் தனர். காலஞ் செல்லச் செல்ல யாத்ரீகர்களும் நாடுபிடித்து தமது ஆசைகளை நிலைநிறுத்த முனைந்தவர்களும் தத்தமது பேராசைகளை நிறைவுசெய்ய ஆவணப்படுத்த வேண்டிய அவசியதர்மங்கள் எழுந்த போது, நூற்சேலைகளில் இலைகளின் சாற்றால் எழுந்த சாறுகளி னால் விஷயங்களை பதிந்து வைத்த செய்திகளும் உண்டு. பின் தாளம் இலை, பனையோலை, பலாசமிலை இவற்றில் பன்றிமுள்ளால் பதிந்து கொண்ட ஆவணங்கள் தோன்றின. இவ்வாறான ஆவணங் களைச் சேகரித்து வைத்த இடத்தை ''ஸ்ரீ நிலையம்'' என அழைக்க லானார். இதே போன்ற வரிசையில் தான் சுவடிச்சாலை, படிகமன்றம், சரஸ்வதி மந்திர் என்றெல்லாம் பரந்து விளங்கி, இக்

காலங்களில் 'நூலகம்' என்று நூல்கள் சேகரம் செய்த நிலையம் வழங்கப்பட்டது. காலத்தால் அழியாது கண்ணுங் கருத்துமாகக் காத்துவரப்பட்ட நூல் சேகரஞ் செய்யும் புனிதத் தொண்டை ஆதியில் ஆரம்பித்து வைத்த பெருமை நைமிசாரண்ய ரிஷ சமூகத்தையே சாரும்.

ஆனால் தற்காலங்களில் உலகின் விருத்தியில் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட காகிதாதிகளில் தகவல்கள் பதியப்பட்டு, அவை சேகரஞ் செய்து களஞ்சியப் படுத்திய நிலையத்தை மக்கள் 'நூலகம்' என்றழைக்கலாயினர். ஆதியிலிருந்து ஏதோவோர் வகையில் தொடர்ச்சியாக ஞான வழிக்கு உதவக் கூடியவற்றைச் சேகரஞ் செய்யும் வழமையை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தபெருமை ரிஷி சமூகத்தினரையேசாரும். இந்தப் பழமையை மறந்து நவீன உலோகாயத மக்கள் புதுமைகளால் எழுந்த செயற்பாடுகளை முன்னெடுத்து நூலக உருவாக்கல்களுக்கு மூலகாரண கர்த்தாக்கள் மேற்கத்திய அறிஞர்களே என கூறுகின்றனர். அண்மையில் யாழ் நூலக அழிப்பின் போது இத்தகைய செய்திகளைச் சிலர் பரப்பினர்.

மனித குலம் நல்லொழுக்கங்களோடு வாழ்ந்து தெய்வீக ரசனைகளால் மனதைப் பக்குவப்படுத்தி, அந்த சுமனஸால் நல்லறிவைப் பெற்று, ஞானம் பெற்று கற்றோனாக வாழவேண்டும் என்பதே பிறப்பின் நியதி. இதனை அடிக்கடி சூத முனிவர் புராணங்கள் வாயிலாகத் தெளிவுபடுத்தியுள்ளார். சங்க காலங்களிலும், நாயன்மார்கள் காலங்களிலும் இச்செய்திதான் முதன்மைப் படுத்தப்பட்டது. இவற்றிற்கு உறுதுணை தரவல்ல குறியீடுகளும், ஆவணங்களும் சப்தசங்கிதகங்களும் சேகரங்கொண்ட களஞ்சியசாலையை ''ஞானசாகரம்'' என்றழைத்தனர். இவ்வாறு உருவங்கொண்ட ஞான ஸாகர நிலையங்கள் தான் குருகுலங்கள் தோன்ற உதவியதென ஆராய்ச்சியாளர்களது கருத்துமாகும். தெய்வீகச் சூழலிற்குள் பெறப்படும் அறிவுதான் ஒழுக்க வாழ்வின் உயர்ச்சிக்கும் கடமைகளில் புனிதத் தன்மைகளையும், எண்ணங்களில் தூய்மையையும் செயற்பாடுகளில் புனிதமும், கிரியைகளில் நல்லறமும் இவற்றினால் மனிதன் பக்குவங்கண்டு ஞானமார்க்கத்தில் ஈர்க்கப்பட்டு நல்லதோர் மனித சமுதாயத்தை ஏற்படுத்த இயலுமென வியாசமுனிவர் பஞ்சபாண்டவர்களுக்கு உபதேசித்துள்ளார்.

ஆன்மாவை லயப்படுத்தும் இடம் ஆலயம் ஆகிறது. அதேபோன்றுதான் ஆன்மாவைப் பக்குவப்படுத்துமிடமும் ஆலயமாகிறது. நூலகம் என்பதை நூல்கள் மூலம் பெற்ற அறிவை அகத்துள் பதியப் படுவதால் அது நூலகமானது என வித்துவான் வேந்தனாரது கணிப்பு. எனவே நூலகங்களும் ஓர் ஆலயமாகவே பேணப்படல் வேண்டும். விஜயதசமி சரஸ்வதி பூசையின் போது நூல்களிற்கு விசேட பூசை ஆராதனைகளுமுண்டு.

இக்காலங்களில் உலோகாயதம் நாளும் பொழுதும் வளர்ச்சி கொள்வதை நாம் காண்கிறோம். மனித சமூகம் சகல மார்க்கங்களிலும் தடுமாறி நிற்கிறது. கல்வி நிலையங்கள் கூட உத்தியோகப் பற்று வழியில்தான் ஏற்றங்கொள்கிறது. கலாசாரங்களும் தாம்தாம் நினைத்தவாறு மாற்றப்பட்டு புனிதங்கெட்டு வாழ்வையே பாழாக்குகிறது. இந்த நெருக்கடியான வேளையில் தெல்லிப்பழை துர்க்கையம்பாள் ஆலய முன்றிலில் 'ஞானஸாகரம்' என்ற நூலகம் பிறப்பெடுக்க எல்லாம் வல்ல துர்க்கை அம்பாள் அருள்பாலித்திருப்பது இந்த உலகினர் பெற்ற பேரருளாக அமைகிறது. ஆதியிலிருந்து உருவங்கொண்ட அரும்பெரும் நூல்கள் இங்கு சேகரங்கொள்ள வேண்டும் எனவும் யானும் அம்பாளை நினைந்து பிரார்த்திக்கிறேன். தக்கசமயத்தில், தக்கதோர் செயற்பாட்டினை, தக்க சான்றோடு தகுந்த வகையில் உருவாக்க உடல் பொருள் ஆவி அத்தனையாலும் சிவார்ப்பணஞ் செய்து மனித சமூகத்தை நல்ல வழியில் இட்டுச் செல்ல உதவிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நீடூழி வாழ்ந்து சப்த கன்னியர்களது அருளாசிக்கு ஆளாகி நீவிர் இன்புற்று வாழ்க வாழ்க என எப்போதும் யான் வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன். வாழ்த்துவதால் யானும் பூரிப்படைகின்றேன்.

கந்தசுவாமி கோயில்,
மாவிட்டபுரம்.

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**
மாவை ஆதீனகர்த்தா

உ

அம்பாள் துணை

கிரியாமணி வாமதேவ சிவாச்சாரியார்

**சிவ ஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

**"கர்மண்யே வா அதிகாரஸ்தே
மா பலேசு கதாசன"**

என்று பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் கூறியிருக்கிறார். ஒரு கர்மத்தை செய்யுமதிகாரம் உன்னிடம் இருக்கிறது. ஆனால், அதன்பலனை அடைவதற்குரிய முழு அதிகாரமும் உன்னிடம் இல்லை. கர்மத்தை செய்வது உன்னை பொறுத்தது. கர்மத்தினால் கிடைக்கும் பலனைப் பெறுவது உன்னை மட்டும் பொறுத்ததல்ல. உன்னைச் சுற்றியுள்ளவர்கள், அவர்களைச் சுற்றியுள்ள சூழ்நிலை, காலபலன் ஆகியவைகளைப் பொறுத்தது. எனவே, உன் அதிகாரத்திற்கு உட்பட்ட கர்மத்தை தவறாமல் செய்துவிடு. பலன் எதுவானாலும் இருக்கட்டும் என்று பகவான் கீதையில் வலியுறுத்தி சொல்லியுள்ளார். 'கர்மம்' என்றவார்த்தைக்கு 'நல்லசெயல்கள்' என்றுதான் பொருள். ஆகவே, ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்ட நல்ல செயல்களைக் கடமையாகக் கருதிச் செய்யவேண்டியது நமது தர்மத்தின் கட்டளையாகின்றது. பெற்றோருக்குச் செய்யும் கடமை, ஆசானுக்குச் செய்யும் கடமை, ஆகியவற்றின் அடிப்படையில் நாம் செய்யவேண்டிய கர்மங்களும், நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் பல இருக்கின்றன.

உயிர்களிடத்து அன்பு, பரோபகார சிந்தனை, சேவைசெய்யும் மனப்பான்மை, உயர்ந்த நற்பண்புகள், பொய்மையில்லாத ஒழுக்கம் ஆகியவையே தூயபத்திக்கு ஆதாரம்! அத்தகைய பத்தியால்தான் பகவானை அடையலாம்! இது ஸ்ரீலஸ்ரீ ஜெயேந்திரர் கூற்று.

இவ்வகையில் கடந்த முப்பது (30) ஆண்டுகளுக்கு மேலாக துர்க்கா தேவஸ்தானத்தின் தலைவியாக இருந்து பற்பல பணிகளை ஆற்றி வருகின்றதுர்க்கா துர்ந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது சீரிய நேர்பார்வையில் நீண்ட நோக்கில் அளப்பரிய சமுகப்பணிகளை ஆற்றி வருகின்றார்கள். அவர்களின் இப்பணிக்கு சிகரம் வைத்தாற்போல ஞானம் என்னும் அறிவுச் சுடரை ஏற்றவல்ல சைவ ஆய்வு நூலகத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்ற சிந்தனையை அம்மையார் அவர்களின் இந்தப் பணியும், இனி வரும் காலத்தில் ஆற்றுகின்ற நற்பணிகளும் மேலோங்கி வளர துர்க்காதேவியின் கமல பாதங்களைப் பணிந்து நல்வாழ்த்துக்களை தெரிவித்து அமைகின்றேன்.

**சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**
பிரதம சிவாச்சாரியார்

ஸ்ரீ துர்க்காதேவி, தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

உ

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
## இரண்டாவது குருமஹாசந்நிதானம்
வழங்கிய

# அருளாசிச் செய்தி

**அன்புள்ளவர்களுக்கு,**

*சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாளை சிறப்புச் செய்யும் முகமாக நூல்நிலையம் அமைத்து திறப்புவிழா செய்வதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். கற்பதனால் மனிதன் பூரணமடைகின்றான். மனித வாழ்வை மேம்படச் செய்வது கல்வியாகும். கற்றலோடு வாசிப்பதையும் மனிதன் கைக்கொள்ளும் பொழுது நிறைவான அறிவைப் பெறுகின்றான். துர்க்கையம்மன் தேவஸ்தானத்தால் மக்களின் தேவையை அறப்பணி மூலமாக நிறைவு செய்யும் நிர்வாகம் இளைய தலைமுறையினரிடையே வாசிக்கும் பழக் கத்தை ஊக்குவிக்கும் நிலையமாக நூல்நிலையம் அமைந்திருப்பது எல் லோருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. மங்கையற்கு வாழ்வின்பொருளை எடுத்தியம்பும் முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவத்தமிழ்செல்வி யவர்கள் நிறைவான கல்வியாளராக ஆசிரியப்பணியாற்றி சிவத்தமிழ் செல்வியாக சமயச்சொற்பொழிவாற்றி துர்க்காதுரந்தரியாக ஆலய நிர்வாகத்தை நடாத்தி கலாநிதியாக பல நூல்களை எழுதி இந்நாட்டி னுடைய சமய தமிழ் கலாசாரத்தின் ஒளிவிளக்காக வாழ்ந்து கொண் டிருக்கிறார். அம்மையாரது பிறந்தநாளை எல்லோருடைய நெஞ்சிலும் நிலையாக நிற்குமாறு ஆய்வுநூலகம் அமைத்து மக்களினுடைய தேவையைபூர்த்திசெய்யும் பிறந்தநாள் அறநிதிய சபையினரைவாழ்த்து கின்றோம். நூல்நிலையத்தை மக்கள் யாவரும் பயன்படுத்தி அறி வுள்ளவர்களாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ இறைவன் அருள்புரிவாராக.*

*''என்றும் வேண்டும் இன்ப அன்பு''*

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

கனடா

## சைவ சித்தாந்த மன்றம்

வழங்கிய

# வாழ்த்துரை

''சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்'' அமைப்பதற்கான வேலைகள் அன்னை கலாநிதி துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி துவிஞோத்தமி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பவளவிழாவுடன் ஆரம்பித்து அவரின் எழுபத்தேழாவது அகவைநிறைவெய்தி பிறந்தநாள் கொண்டாடும்வேளையில் அருள்மிகு துர்க்கா ஆலய முன்றிலில் அறுபது இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பெற்று திறக்கப்பட இருப்பதை அறியும்பொழுது பூரிப்பும் மகிழ்ச்சியும், மன நிறைவும் அடைகிறோம். இந்நிகழ்வு அருள்மிகு துர்க்காதேவி ஆலய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திரம் படைக்கும் நிகழ்வாகும்.

இந்த ஆய்வு நூலகத்தை அமைப்பதற்கு நிதி உதவி செய்து ஆதரவு நல்கிய அனைவரையும் போற்றி வணங்குகின்றோம்.

இந்நூலகத்தில் ஆகமங்கள், பன்னிரு திருமுறைகள், பதினான்கு சைவசித்தாந்த சாத்திரநூல்கள், அவற்றின் உரைகள், திறனாய்வுக் கட்டுரை நூல்கள் என்பனவும், அருளாளர்களின் இறை அருள் பெற்ற பாடல்களும் உரைகளும் திறனாய்வுக் கட்டுரைகளும், நூல்களும், புராணங்கள், இதிகாசங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், தொல்காப்பியம், நிகண்டு என்பனவும் திருக்குறள் மூலமும் உரையும் திறனாய்வு நூல்களும். நாயன்மார்கள், சந்தான சாரியார்கள் மற்றும் அருளாளர்களின் வரலாறுகள், அவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் சைவ ஆதீனங்கள், சபைகள், மன்றங்கள், தமிழ்ச் சங்கங்கள் போன்றனவற்றின் வெளியீடுகள், சஞ்சிகைகள் என்பன போன்ற இன்னோரன்ன அரிய நூல்கள் வைப்புச் செய்ய வேண்டும்.

நூல்களை வகைப்படுத்தி ஒழுங்கு படுத்துவதோடு கணனி முறை மூலம் நவீனமயப் படுத்தவும் வேண்டும். கணனி இணைய வலையத் தளம் அமைக்கப்பட வேண்டும். ஆயின் எதிர்காலத்தில் இந்நூலகம் உலகம் பூராவும் வாழும் சைவத் தமிழ் மக்களின் சைவத் தமிழ் ஆய்வு மையமாக மிளிரும். உலகெங்கும் வாழும் மக்கள்

அரிய சைவ, தமிழ் நூல்கள், மொழி, சமயம் பற்றிய தமிழ் ஆங்கில நூல்களையும், ''ஆடியோ'', ''விடியோ'' நாடாக்களையும் சி. டி (C D) டிவிடி (DVD) மின்கணனி (Computer) என்பன போன்ற வற்றை அனுப்பி உதவ வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் சமய, மொழி ஆர்வலர்கள் போன்றோர் இந்நூலகத்தினால் பெரும் பயன் பெற்று, சமுகத்துக்கு ஆக்கப் படைப்புகள் தரவேண்டும்.

> ''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு'' (396)

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கேற்ப மக்கள் இந்நூலக நூல்களைக் கற்று நிரம்பிய அறிவு படைத்தவர்களாக வளர வேண்டும். ''சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம்'' அறிவாலய மாக விளங்கி உலகெங்கும் அறிவொளிபரப்ப சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்குகிறோம்.

ஒவ்வோராண்டும் தம் பிறந்த நாளில், அறநிலையங்கள் உருவாக்கி, அறப்பணிகள் சிறந்து விளங்க இறைவனின் பெருங் கருணையைப் பெற்று விளங்கும் அன்னை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நலமுடன் நீடுவாழ நடராசப் பெருமான் திருவருளை வேண்டி வணங்கி உளமார வாழ்த்துகிறோம்.

ஆய்வு நூலகத் திறப்பு விழா இனிதே நிறைவு பெறவும் திறப்பு விழாக் குறித்து வெளிவரும் சிறப்பு மலர் சிறந்து மலரவும் திரு வருளை வேண்டி வாழ்த்தி, இவற்றிற்காக அரிய பணி ஆற்றும் பிறந்தநாள் அறநிதியச் சபையினரைப் பாராட்டி போற்றி வணங்கி அமைகின்றேன்.

அன்பே சிவம்

சைவ சித்தாந்த மன்றம்,
கனடா.

தி. விசுவலிங்கம்
தலைவர்

உ

## சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

துர்க்காபுரம் உறைகுடைப் பதி ஸ்ரீ துர்க்காதேவியின் பாதார விந்தங்களை இறுகப்பற்றி சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகப் பணிக்கும் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டு இருக்கின்ற எமது மதிப்பார்ந்த அம்மா கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் தமது 77ஆவது பிறந்த தின அறக்கொடை விழாவில் அறநிதியச் சபையினூடாக எல்லா மக்களுக்கும் பயன் பெற அவசியமானதாகவும் மிகப்பெரிய பொக்கிஷமானதாகவும் அமைந்தது தான் ஆய்வு நூலகம்.

எம் போன்றோர் வேத, ஆகமங்களோடு நின்று விடாமல் புராணம், இதிகாசம் என்னும் பல அறிவினைப் பெற்று சமூக மேம்பாட்டிற்கு உதவக் கூடிய வகையில் இந் நூலகம் திகழ்கிறது.

அன்னை அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து பல பணிகள் செய்து என்றும் எமது தாயாக வாழ ஆதி சக்தியாம் ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருள் துணை நிற்பதாக.

சுபமஸ்து

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்**

உ

**அருட்கவி சீ. விநாசித்தம்பி, M. A. அவர்கள்**

வழங்கிய

# அரும்பணி விளக்காய் வாழி

ஆலகத் தமர்ந்த ஈசன்
ஆய்ந்துணர் அமுத ஞானம்
மேலக முனிவருக்கு
விளம்பிய தொக்க, துர்க்கா
நூலகம் உலக முய்யும்
நுண்புலன் அறிவுக்கல்விப்
பாலக மாய்ச் சிறந்து
பல்லாண்டு வாழிவாழி

பற்பல மகான்கள் தேடிப்
பயின்றுணர்ந் துலக முய்யச்
சொற்பயில் நூல்களாக்கிச்
சுரந்தபொக் கிஷங்கள் தம்மை
அற்புத மாகக் காட்டும்
ஆய்வுநூ லகம், விளங்கும்
சிற்பரை துர்க்காதேவி
திருவருட் செல்வமாகும்.

முன்னிய இலக்கணங்கள்
முதுசுவை இலக்கியங்கள்
பொன்னுயர் கலை யாராய்ச்சி
பொருந்திய தமிழ்வளர்க்கும்
மன்னுநூ லகம் கற்போர்க்கு
மாநிலக் கற்பகம் போல்
அன்னைதங் கம்மா வின்நல்
லரும்பணி விளக்காய் வாழி

நாகேஸ்வரம்,
அளவெட்டி.

**அருட்கவி சீ. விநாசித்தம்பி, M. A.**

பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தானத்தில் ஓர் ஆராய்ச்சி நூலகம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 77வது வயது நிறைவை ஒட்டி அமைக்கப்பட விருக்கின்றது என்று அறிந்து பெருமகிழ்ச்சி யடைந்தேன்.

அறிவு வளர்ச்சிக்கு நூலகத்தைப் போல் சிறந்த சாதனம் கிடை யாது.

தமஸ் கார்லைல் என்ற அறிஞர்

''தற்காலத்திலே உண்மையான பல்கலைக்
கழகம் என்றால் அது ஒரு நூல்நிலையந்தான்''

என்று குறிப்பிட்டுள்ளார்.

அறிஞர் அண்ணா தமிழகத்தின் தாழ்வுக்கே நூல்நிலையங்களின் பற்றாக்குறைதான் காரணம் என்றார்.

''எப்படித்தாழ்ந்தனையோ தமிழா'' என்று ஒருவர் இங்கு பாடிய தனைக் கேட்டோம். அதற்குப் பதில் அறிவு தாழ்ந்து விட்டது'' என்றுதான் சொல்லவேண்டும். இந்தத் தாழ்ந்த மனப்பான்மை மக்கள் மனதை முடமாக்குகின்றது. வேறு இனத்தாருடைய தாக்கு தல்கள் தழுவல்கள் நம்மிடையே வந்து புகுந்தன. வந்த அறிவு தேக்கமடைகின்றது''

1983ஆம் ஆண்டுவரை நமது பிரதேசத்தில் எத்தனையோ நூல் நிலையங்கள் இருந்தன. பல வீடுகளிலே அருமையான நூல்கள் காப்பாற்றப்பட்டுவந்தன. இந்த நூல் நிலையங்களுக்கெல்லாம் கொடு முடியாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணப் பொது நூலகமாகும். 1981ஆம் ஆண்டு ஒரு லட்சம் நூல்களைக் கொண்டிருந்த இந்த நூலகம் எரித்து நாசமாக்கப்பட்டது. மக்கள் வீடுகளில் இருந்த நூல் நிலையங்களும் அடிக்கடி ஏற்பட்ட இடப் பெயர்வுகளினாலும், புலம் பெயர்வுகளினா லும் கைவிடப்பட்டன. 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வினால் எனது சொந்த நூல் தொகுதியும் சீரழிந்தது. இவற்றைக் குறித்து நாம் வேதனைப்பட்டுக்கொண்டிருக்காமல் புதிய நூலகங்களை அமைப் பதும் அரிய நூல்களை கொண்டுவந்து சேர்ப்பதும் நமது இன்றைய கடமையாகும்.

*இந்த வகையில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்த நாள் அறநிதியச்சபை நம்மெல்லாருக்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றது. அவர்கள் அமைக்கவிருக்கும் ஆய்வு நூலகம் நமது நாட்டிற்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தையும் பண்பாட்டையும் சமயத்தையும் அறிந்துகொள்ள விரும்புபவர்கட்கு இந்த நூல் நிலையம் அருந்துணையாக அமையும் என்பது திண்ணம்.*

*நாட்டிலே சமாதானம் ஏற்பட்ட பின்னர் உலகின்பல பாகங்களிலிருந்தும் அறிஞர்கள் வந்து ஆராய்ச்சி செய்வார்கள் என்று திடமாக நம்புகின்றேன்.*

*77 வது வயதைப் பூர்த்தி செய்யும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எனது மனமுவந்த பிறந்தநாள் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு"

— தமிழ் முறை

வட்டுக்கோட்டை

**எஸ். ஜெபநேசன்**
பேராயர் தென்னிந்திய திருச்சபை

### இலண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளை
### ஸ்தாபகர், தலைவர்
### திரு. பொன். தெய்வேந்திரம் அவர்கள்
### வழங்கிய

# வாழ்த்துரை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாகசபை ஆரம்பிக்கப்பட்டு இப்போது முப்பத்தைந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன என்பதை அறியும் போது அளவில்லா ஆனந்தம் அடைகின்றேன். அம்மனின் அருள் பெறவரும் அடியார்கள் அள்ளி வழங்கும் பெருநிதியை சிறிதேனும் சிந்தாது பாதுகாத்து அளப்பரிய சேவை செய்துவரும் நிர்வாக சபையின் பணிகள் பாராட்டுக்குரியவை. துர்க்கா தேவியின் வழிபாட்டுடன் நேரடியாகத் தொடர்புடைய பல சமூகப் பணிகளை நிர்வாக சபை ஆற்றுகின்றது.

பணிகள் செய்வதையே தனது வாழ்வாகக் கொண்டிருக்கும் நிர்வாகசபைத் தலைவர் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் தலைமையில் இயங்கும் இந்த நிர்வாக சபை தமிழுக்கும், சைவத்திற்கும், இளம் பெண் சமூகத்தினருக்கும் இடைவிடாது செய்து வரும் பணிகளைக் கண்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று தனது எழுபத்து ஏழாவது வயதை அடைந்திருக்கும் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆலய முன்றிலில் ஆய்வு நூலகம் அமைப்பது சாலச் சிறந்ததொன்றாகும். கிடைத்தற்கரிய அறிவுச் செல்வத்தை அள்ளி வழங்கும் இந்த ஆய்வு நூலகம் ஆண்டுகள் பலவாக யாவருக்கும் அரும்பணி ஆற்றும் என்பது வெள்ளிடைமலை.

பிறந்தநாள் காணும் பொன்மனச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களும், இப் பிறந்த நாளில் திறக்கும் இந்நூலகமும் இன்னும் பல ஆண்டுகள் அரும்பணிகள் ஆற்ற இறைவனை வேண்டுவதோடு இலண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட்டளையின் சார்பில் எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

இலண்டன்

பொன். தெய்வேந்திரம்

உ
அம்பாள் துணை

# எமது நோக்கம்

இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மேலும் ஒரு பொன் எழுத்துக்களால் குறிக்கப்பட வேண்டிய நன்நாளாகும்.

சைவத்துக்கும் தமிழுக்கும் எமது சமுதாயத்தின் மேம்பாட்டிற்காகவும் பணி புரிந்து வரும் எமது தேவஸ்தானம் இன்று ''சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்'' என்னும் ஒரு ஆராய்ச்சி மையத்தை எமது சமுகத்திற்கு அர்ப்பணிக்கிறது. இந்த ஆராய்ச்சி நூலகம் எமது தேவஸ்தானத்தின் தலைவரும், உலகறிந்த சைவப் பெரியாரும் சமூகத் தொண்டருமான சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 77ஆவது பிறந்த தினமான இன்று, திறந்து வைக்கப்படுவது ஒரு சிறந்த அம்சமாகும்.

இந்த சிறந்த ஒரு சேவையை அன்னை அவர்களது பிறந்த நாள் அறநிதியச் சபை அவர்களது 75ஆவது பிறந்த நாளை கொண்டாடும் முகமாக அமைக்கப்பட்ட விசேட குழுமுன் இந்த ஆராய்ச்சி மையத்தின் அத்தியாவசியம் பற்றி முன்வைத்த போது இக்குழு இதனை முழு மனதுடன் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு இப்பணியை அன்றே ஆரம்பித்தது. எல்லாம் வல்ல எமது துர்க்கை அம்பாளின் ஆசிர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பணி சிறப்பாகக் கைகூடி இன்று இந்த ஆராய்ச்சி நூலகம் எம் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்துவிடப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் இன்னமும் போர் மேகங்கள் கலையாத கட்டத்தில் இவ்வாறே ஆராய்ச்சி நிலையம் தேவைதானா என்கிற கேள்வி பலரது மனங்களில் எழலாம். இது ஒரு தேவையற்ற பயம். இது தொடர்பாக பரந்த நோக்கில் நாம் சிந்திக்கும் போது குடாநாட்டில் அரும்பெரும் பொக்கிஷமாக யாழ். நகரிலே கெம்பீரமாக பல அரிய ஏட்டுச் சுவடிகள், சிறந்த நூல்கள் ஆகியவற்றுடன் ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பிரதானமாக எம் அனைவருக்கும் பிரயோசனப்படக்கூடிய வகையில் அமைந்திருந்த எமது பொது நூலகம் அரசியல் விஷமிகளால் தீயிட்டு சாம்பராக்கப்பட்டது உலகறிந்த உண்மை. இதன் பின்னர் பிரதானமாக சைவத்திற்கும் தமிழிற்கும் சேவையாற்றக் கூடியதும் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உதவக் கூடியதுமான ஒரு நூல் நிலையம் எமது நாட்டிலும் பிரதானமாக யாழ். குடாநாட்டில் இல்லாதது ஒரு பெரும் குறையாக இருந்து வந்தது. இந்த வெற்றிடத்தை நிறைவு செய்ய வேண்டும் என்கிற ஒரே ஒரு

குறிக்கோளுடன் தான் பல கஷ்டங்களின் மத்தியில் இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு இன்று இப்பணி ஓரளவு பூர்த்தியாகிறது. இந்த ஆராய்ச்சி மையத்தின் வளர்ச்சி நாம் எம் மக்களுக்கு ஆற்ற இருக்கும் சேவையிலும் பொது மக்களிடமும் அறிஞர்களிடமும் இருந்து வரும் ஆதரவின் மூலமுமே அமைய இருக்கிறது.

இந்த நூலகத்தின் வளர்ச்சி கருதி பல அன்பர்கள் எமக்கு தம்வசம் இருந்த தம்மால் பாதுகாத்து வரப்பட்ட பல அரிய நூல்களை எம்மிடம் கையளித்துள்ளனர். இவ்வாறு மேன்மேலும் இந்த நூலகம் வளர்ச்சி அடையவும் பொது மக்களின் பயன்பாடு கருதியும் ஏனைய அன்பர்களும், ஸ்தாபனங்களும தம் வசம் இருக்கும் அரிய தமிழ், சைவ நூல்களை எம்மிடம் கையளித்தால் அவை உரியவாறு பேணப்பட்டு அனைவருக்கும் பயன்படக் கூடிய வகையில் நாம் சேவையாற்ற முடியும் என்பது எமது நம்பிக்கை.

இறுதியாக, எமது இந்த சிறந்த சேவைக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் நம் அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்றவரும் சைவத்திலும் தமிழிலும் சிறந்த ஆர்வமும் தேர்ச்சியுமுள்ள நீதியரசர் க. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் தமது வேலைப் பழுவின் மத்தியிலும் கொழும்பில் இருந்து இங்கு வந்து இன்றைய நிகழ்வுகளில் பிரதம அதிதியாகப் பங்கேற்கவும் இந்த ஆராய்ச்சி நூலகத்தை திறந்து வைக்கவும் தனது சம்மதத்தை தெரிவித்து இன்று கலந்து கொள்வதில் நாம் பெருமைப்படுவதோடு அவருக்கு எம் அனைவரினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

''நம் கடன் பணிசெய்து கிடப்பதே''

**''தாம்இன்புறுவது உலகு இன்புறக் கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார் ''**

— குறள் 399

உப-தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

**மு. சபாநாதன்,** J. A. U. M.
சட்டத்தரணியும், நொத்தாரிசும்

உ

ஈழத்துச் சிதம்பரம்

சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

மக்களுட் சிலர் சமயத் தொண்டினை மட்டுமே செய்து வருகின்றனர். வேறுசிலர் தமிழ்த் தொண்டுடன் மூலையில் ஒதுங்கி விடுகின்றனர். மற்றுஞ் சிலர் சமூகத் தொண்டில் மாத்திரம் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர். ஆனால், இந்த மூன்று தொண்டுகளையும் ஒருங்கே செய்துகொண்டு, இன்பங்கண்டு மனநிறைவுடன் வாழ்ந்து வருபவர் கலாநிதி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களே என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட முடிபாகும்.

''வாசிப்பே ஒருவனைப் பூரண மனிதனாக்கும்'' என்றான் மேலைத்தேச அறிஞன் ஒருவன். ''நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும்'' என்பது 'றிச்சேட் டி. பியூறி' என்னும் அறிஞனின் அமுதவாக்கு. இவைகளை நன்கு அறிந்திருந்த அம்மையார் தமது தமிழ்த்தொண்டின் ஓர் அங்கமாக ஆய்வு நூலகத்தை அமைத்தது ஒரு பெரிய சாதனையாகும்.

அவர், தாம் அரிதின் முயன்று தேடி வைத்திருந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சைவசமய, தத்துவ, புராண, இதிகாச, இலக்கிய இலக்கண, தருக்க, சோதிட, சிற்ப நூல்களை ஆய்வு நூலகத்துக்கு வழங்கியமை மிகமிக வியந்து பாராட்டப்படுகிறது, தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் நூல்களை எடுப்பித்தமை அவருடை ஆளுமைக்கு தக்க சான்றாகும். ஆய்வு செய்வோர் வேறு நூலகங்களுக்கு ஓடிச் செல்ல வேண்டிய நிலை இனி ஏற்படாதென்பது அறிஞர்களின் கருத்தாகும்.

ஆய்வு நூலகம் என்றும் நின்று நிலவ வேண்டுமென ஆசிகூறி, அம்மையாருக்கு என் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

ஈழத்துச்சிதம்பரம்,
காரைநகர்.

**க. வைத்தீசுவரக் குருக்கள்**

உ

## சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# வாழ்த்துப்பா

கல்விநிறை செந்தமிழ்ச் செல்வி யான
கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி
நல்லுலகில் உதித்திட்ட திருநன் னாளில்
நலம்புரியும் அறநிதியக் களஞ்சி யத்தை
வல்லபெரும் நிதிசேர்த்து வாழ்வி னிலே
வளர்கல்வி உயர்ந்திடவே வழங்கி எங்கள்
கல்வியின், அழகுதான் அழகு என்ற
கவின்பொருள் உணர்த்தும் அற நிதியம் வாழி!

என்றென்றும் அழியாத செல்வ மான
எழிலோங்கும் கல்வியையே வளர்க வென்றே
மன்றத்தில் ஆடியநகு லேஸ்வ ரனும்
மாதாவாம் ஸ்ரீ துர்க்கை அருள்பொ ழிய
நின்றுமுகில் பெய்யுதுளி வெள்ளம் போல
நிதிபெருகித் தங்கம்மா அப்பாக் குட்டி
நன்றுதித்த திருநாளில் அவத ரித்த
நறுநிதிய மானஅற நிதியம் வாழி!

செந்தமிழ்க் கல்விகலை செழிக்க வேண்டும்
செழுந்தமிழ்நூல் பல்துறையில் உதிக்க வேண்டும்
அந்தமிலா அருங்கல்வி ஆய்வு நூல்கள்
ஆயிரம் ஆயிரம் தோன்ற வேண்டும்
பந்தமுடன் வெளிநாட்டார் நூல்க ளெல்லாம்
பைந்தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்நூ லாக்கி
நந்தமிழ்க் கல்விகலை அழகு பொங்க
நகுலேஸ் வரனருளும் பொழிய ஆசி

''சுபம்''

நகுலேஸ்வரம்,
கீரிமலை.

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், J. P.
ஆதீனகர்த்தா

உ

சைவசித்தாந்த கலாநிதி

இலக்கிய கலாநிதி டி. என். இராமச்சந்திரன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

சைவச் செல்வியார் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களை, நான் பெரியபுராணப் பெண்மணிகளுள் ஒருவராகவே காண்கிறேன். திருமுறையும் மெய்கண்ட சாத்திரமும் அவருடைய மூச்சுக் காற்று. எம் இறைக்கும், சைவ அடியார்களுக்கும் பணி செய்யவே அவருக்குக் கருவி கரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இச் சூழலிலும் இறைபணி இயற்றிவரும் அவருக்கு நீண்ட ஆரோக்கிய மங்களகரமான வாழ்வை அம்மையப்பர் அருள வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

5 D, செல்வம் நகர்,
தஞ்சாவூர் - 7 ( 613007 ),
இந்தியா,
25 - 11 - 2001.

தங்கள் பெருவாழ்வைப் போற்றும்
அன்பன்
**திரு. டி. என். இராமச்சந்திரன்**

உ

துணைவேந்தர்
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
அவர்கள்
வழங்கிய

# ஆசியுரை

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் எழுபத்தேழாவது பிறந்த நாளன்று நடைபெறும் 'சிவத்தமிழ்ச்செல்வி சைவ-தமிழ் ஆய்வகம்' திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

அன்னையவர்களின் சமய சமூகப் பணிகள் யாவரும் அறிந்ததே. சமயப்பணி புரியும் ஆன்மீகவாதியாகவும், ஆதரவற்றோருக்கும், அல்லற்பட்டோருக்கும் கருணைமிகு அன்னையாகவும், சமூக நலத்திட்டங்களுக்கு உதவும் வள்ளலாகவும் விளங்கும் அன்னையவர்களின் பவளவிழா ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட ஆய்வகத்தின் திறப்புவிழா இந்நன்னாளில் நடைபெறுவது சாலப்பொருந்தும்.

தமிழும், சைவமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. இவை இன்று எழுச்சியையும், உயர்ச்சியையும், பாதுகாப்பையும் வேண்டி நிற்கின்றன. இந்நிலையில் இவற்றின் பெருமைகளையும், உண்மைகளையும், தத்துவங்களையும் அறிந்து நாம் செயற்படுவதற்கு இந்நூலகம் பெருந்துணையாக அமையும் எனலாம். ஆராய்ச்சியாளர்களும், கல்விமான்களும், பல்கலைக்கழக, பாடசாலை உயர்வகுப்பு மாணவர்களும் இந்நூலகத்தால் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. பொது நூலகம், பாடசாலை நூலகங்கள் பல அழிந்துள்ள நிலையில் இந்நூலகம் காலத்தின் தேவையாகும்.

இத்தகைய சிறந்த செற்பாடுகளுக்கு அருந்துணையாக விளங்கும் அன்னையவர்கள் நீண்ட காலம் உடல் நலத்துடன் வாழ்ந்து, எமது சமயத்திற்கும் சமூகத்திற்கும் பெரும்பணியாற்ற துர்க்கை அம்மன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இம்மலர் சிறப்புற வெளிவருவதற்கு உதவிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணை வேந்தர்

உ
சிவமயம்

புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள்
வழங்கிய

## வாழ்த்துப்பா

# சிவத்தமிழ்ச்செல்வி வாழிய நீடே

எண்ணரிய இறைப்பணியும் இவ்வுலகப்
பொதுப் பணியும் மகிழ்ந்தே ஆற்றிப்
புண்ணியத்தின் வடிவமென விளங்கு சிவத்
தமிழ்ச் செல்வி, துர்க்காதேவி
தண்ணருளாற் பல்லாண்டு தக்கநலத்
துடன் ''வாழ்க வாழ்க'' என்றே
எண்ணமுற வாழ்த்திடுவோம் அவர்பணிகள்
என்றென்றும் சிறக்க நன்றே.

எது தர்மம் எதுதர்மம் என அறியும்
ஆர்வத்தோர் தங்கட்கெல்லாம்
இது தர்மம் இதுதர்மம் எனத் தமது
சொற்பொழிவால் வாழ் வாற்காட்டிப்
பொது வாழ்வில் தனிவாழ்வில் தர்மத்தை
என்றென்றும் விளக்கி நிற்கும்
அதி உயர்ந்த சிந்தனை சேர் சிவத்தமிழின்
செல்விபுகழ் வாழ்க நீடே.

சங்க முதல் இன்றுவரை தாமெழுந்த
தமிழ் நூலின் பரப்பை ஆய்ந்தும்
எங்குமுளோர் போற்றுகின்ற சித்தாந்தச்
சாத்திரத்தின் சிறப்பை ஆய்ந்தும்
இங்குபல பிரசங்கம் நிகழ்த்தியுமே
உலகு பயன் அடைதல் வேண்டித்
துங்கமுறு தமிழகத்தும் பிரசங்கம்
நிகழ்த்தினார் வாழ்க நீடே.

ஆலயத்தின் பணிபுரிந்தும் அருந்தமிழின்
பணிபுரிந்தும் ஆரும் இல்லாப்
பாலகரை வாழ் வித்தும் பலநூல்கள்
பதிப்பித்தும் பாரோர் போற்ற
ஞாலமெங்கும் பிரசங்கமழை பொழிந்தும்
பலர் போற்ற நடுவூரின் கண்
கோலமுறு கனிநல்கும் தருவாக
விளங்கு செல்வி வாழ்க நீடே.

புலவர் ம. பார்வதிநாதசிவம்

உ

முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம் அவர்களது

# வாழ்த்துரைப் பாடல்

### விநாயகப் பெருமான்

திங்களும் நதியுந் கொன்றைச்
சிவபிரா னுமையி னோடு
எங்கணு மிடர்கள் துன்ப
மேகிட நோக்க வந்த
ஐங்கரன் திருத்தாள் தன்னை
அன்புடன் போற்றி னேனே
பங்கயச் செல்வி தங்கப்
பாவையைக் காக்க வென்றே.

### சிவபெருமான்

ஒன்றுமாய்ப் பலவு மாகி
உலகெலாம் படைத்துக் காக்கும்
பொன் திகள் கங்கை வேணிப்
புராணனை ஏத்தினேனே
நன்றிசே ருலக முய்ய
நல்லபல் தருமஞ் செய்யும்
குன்றுநேர் புகழ்சேர் கொற்றக்
குமாரியைக் காக்க வென்றே.

### திருவருட் சக்தி

காலமுங் கால மல்லா
ஞாலமும் வானும் எங்குஞ்
சாலவே தானாய் நிற்குஞ்
சக்தியைப் போற்றி னேனே
ஏலவே அப்பாக் குட்டி
இனியதாய் தையற் பிள்ளை
சீலமாய்ப் பெற்ற மேலாஞ்
செல்வியைக் காக்க வென்றே

### திருமால்

செந்திரு மறுமார் புள்ள
    தேவனாய் உலகங் காக்கும்
அந்திவான் நீல வண்ணன்
    ஐயனை யேத்தி னேனே
சிந்தனை முழுதுந் தேவி
    துர்க்கை பால் வைத்திருக்கும்
வந்தனைக் குரிய தங்கம்
    மா தனைக் காக்க வென்றே.

### பிரம தேவர்

கலைமகள் தொழுந னாகிக்
    கலந்துல கம் படைக்கும்
தலைமைசேர் திசை முகன்றன்
    தாள் மல ரேத்தி னேனே
நிலையெலா முலகம் நோக்கி
    நினைத்திட வாழ்ந்து காட்டும்
குலமகள் தங்கம் அப்பாக்
    குட்டியைக் காக்க வென்றே.

### வைரவ மூர்த்தி

பிரமனார் தலையைக் கிள்ளிப்
    பிறங்குமுச் சூல மேந்தும்
பரமனாம் வைரவன் றன்
    பதமலர் போற்றி னேனே
உரமுற சிவத்தைச் சக்தி
    குமரரை உள்ளத் தேத்தும்
தரமுயர் தங்கம் மாவாம்
    தாய் தன்னைக் காக்க வென்றே.

### முருக மூர்த்தி

பாலொழு கும்மு கத்தின்
    பாலனை முருகன் தன்னை
வேலினை ஏந்தி னான் தன்
    விரைமலர்த் தாள் பணிந்தேன்
கோலமாய் வாணா ளெல்லாங்
    கும்பிட்டுத் துர்க்கா கோயில்
சாலவே நடைபெ றச்செய்
    தையலைக் காக்க வென்றே.

### துர்க்காதேவி

வேதவா கமத்துக் கேற்ப
    விளங்கிடும் கோயில் தன்னில்
சோதியாய் மூலம் வைகுந்
    துர்க்கையைத் தொழுது நின்றேன்
நீதியால் ஔவை யீந்த
    நெல்லியங் கனியுய்த் தென்றும்
ஓது துர்க் காது ரந்த
    ரிதனைக் காக்க வென்றே.

### இலட்சுமி தேவி

செங்கம லத்தி லன்றிச்
    சீருறும் யாவைக் கண்ணும்
தங்குபாற் கடல்மால் மார்பூர்
    தாயினைப் போற்றி னேனே
கங்குலும் பகலு மெல்லாக்
    காலத்துஞ் சேவை செய்யுந்
தங்கம்மா அப்பாக் குட்டி
    தையலைக் காக்க வென்றே.

### ஐயனார், இந்திரன், தேவர் சப்தமாதர், ஏனையோர்

ஐயனா ரமரர் கோமான்
    அருஞ்சப்த மாத ரோடு
தெய்வமுப் பதுமுக் கோடி
    தேவரைப் போற்றி னேனே
உய்வகை யன்ன தானம்
    உயர் கல்வி சமயந் தர்மம்
மெய்வகை போற்றுந் துர்க்கா
    துரந்தரி தன்னைக் காத் தற்கே.

### கலைமகள் தேவி

வேதங்கள் திரு முறைகள்
    மிகுகல்விக் கருவூ லங்கள்
போதஞ்செய் புலவர் நாவில்
    புகலும்வா ணியைப் பணிந்தேன்
பேதமில் பெண்ணில் மேலாய்ப்
    பேசிடுந் தெய்வ மாகிச்
சாதனை புரியு பொன்னைத்
    தையலைக் காத்தி டென்றே.

### சமயகுரவர் சந்தானகுரவர் சண்டேசுரர்

நீற்றொடைந் தெழுத்து மென்றும்
 நிலவச்செய் குரவர் தம்மை
சாற்றுசந் தானா சாரி
 யார்களை வணங்கி மேலும்
போற்றுசண் டீசர் தன்னை
 பொன்னடி தொழுதே னேத்தி
தோற்றுந்தங் கம்மா வென்னுந்
 தோகையைக் காப்பி ரென்றே.

### பல்லாண்டு வாழ்த்து

உலகெலாந் தானாய் நிற்போன்
 என்தன துள்ளக் கோயில்
நிலவிடும் வகையா லிந்த
 நீள் சுடர்ச் செய்யுள் மாலை
குலவிடும் வகையாற் பாடிக்
 கும்பிட்டே னதனா லன்னை
வலமுறப் பலத்தின் மேவி
 வாழும்பல் லாண்டு தானே.

### வள்ளுவம்

நிலையிற் பிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

அளவெட்டி. புலவர் வை. க. சிற்றம்பலம்

உ
சிவமயம்

கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர்
கௌரவ சி. வி. விக்கினேஸ்வரன் அவர்கள்
வழங்கிய

# செய்தி

# சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்

சைவமும் தமிழும் எங்கள் இரு கண்கள். கிறீஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதங்களாலும் இலங்கைத் தமிழரின் பாரம்பரியம் வளம் படுத்தப்பட்ட தெனினும் அப்பாரம்பரியத்தின் ஆணிவேர் சைவமாகும். தமிழுக்கு உரம் ஊட்டியது சைவம். சைவத்திற்கு மெருகூட்டியது தமிழ். ''அன்பே சிவம்'' எனும்போது சைவத்தின் பண்பும் தமிழின் இன்பும் மிளிர்கின்றன. ஆதித் தத்துவ, கோட்பாட்டு வேற்றுமைகளை யும், விவரண வித்தியாசங்களையும் முரண்பாடுகளையும் அனுசரித்து, அரவணைத்து, அதே நேரத்தில் தனது தனித்துவத்தையும் தயங்காது தரணி அறியத் தந்துதவியதே சைவத்தின் சிறப்பியல்பு. திருமூலர், திருநாயன்மார்கள் யாவரும் தமது திருவாய் மலர்ந்ததால் வளர்ந்த மொழி தமிழ் மொழி. அவர்கள் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளும் உவகைகளும் தமிழ்மொழியில் வெளிவந்ததில் தமிழ்மொழியானது தெய்விக அந்தஸ்தைப் பெற்றது. திருமூலர் தமிழ்வாக்கை தமிழ் மந் திரமென்றே அழைத்தார்கள்.

அப்பேர்ப்பட்ட தமிழும் சைவமும் இன்று போதிய அளவு பேணப் படாது இருப்பது எங்கள் துர்அதிர்ஷ்டமே. பேணப்படாது விட்டிருந்தா லும் பாதகமில்லை. ஆனால் அண்மைக்காலங்களில் தமிழுக்கும் சைவத் திற்கும் இழுக்கும் இடர்ப்பாடும் தரப்பட்டுள்ளன. யாழ் நூலக எரிப்பு, திருக்கோயில்கள் பல கேட்பாரற்றுக் கிடக்குந் துர்நிலை, நனையும் ஆடுகளைக் கண்டு கதறி அழும் ஓநாய்க் கூட்டங்களின் அட்டகாசம் என்பன இவற்றுள் சில. அவற்றைவிடப் போரானது பெண்களையும், குழந்தைகளையும், வயோதிபர்களையும் வெகுவாக வாட்டி வதைத்து இம்சித்துள்ளது. தமிழ்மொழிக்கும் சமய அறிவுக்கும், சமய வாழ்வுக்கும், சமூக வாழ்வுக்கும் பெருத்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கும் அண்மைய காலத்தில் எங்களுக்கெல்லாம் திலகவதியார் போன்று எம்மை சைவத் தின் பால் ஈர்க்கவும், எம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சிவத்தமிழ்ச் செல்வியார் அரும்பாடுபட்டு வந்துள்ளார்கள். இடர்பட்ட இம் மக்கள் சேவையே இறைவனின் சேவை என்ற பண்டைய பண் பாட்டின் வழிநின்று பல அருஞ்சேவைகள் அண்மைக்காலமாகச் செய்து வருகிறார். அவற்றுள் சில பின்வருமாறு,

உ
சிவமயம்

கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர்
கௌரவ சி. வி. விக்கினேஸ்வரன் அவர்கள்
வழங்கிய

# செய்தி

# சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்

சைவமும் தமிழும் எங்கள் இரு கண்கள். கிறீஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதங்களாலும் இலங்கைத் தமிழரின் பாரம்பரியம் வளம் படுத்தப்பட்டதெனினும் அப்பாரம்பரியத்தின் ஆணிவேர் சைவமாகும். தமிழுக்கு உரம் ஊட்டியது சைவம். சைவத்திற்கு மெருகூட்டியது தமிழ். ''அன்பே சிவம்'' எனும்போது சைவத்தின் பண்பும் தமிழின் இன்பும் மிளிர்கின்றன. ஆதித் தத்துவ, கோட்பாட்டு வேற்றுமைகளையும், விவரண வித்தியாசங்களையும் முரண்பாடுகளையும் அனுசரித்து, அரவணைத்து, அதே நேரத்தில் தனது தனித்துவத்தையும் தயங்காது தரணி அறியத் தந்துதவியதே சைவத்தின் சிறப்பியல்பு. திருமூலர், திருநாயன்மார்கள் யாவரும் தமது திருவாய் மலர்ந்ததால் வளர்ந்த மொழி தமிழ் மொழி. அவர்கள் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளும் உவகைகளும் தமிழ்மொழியில் வெளிவந்ததில் தமிழ்மொழியானது தெய்விக அந்தஸ்தைப் பெற்றது. திருமூலர் தமிழ்வாக்கை தமிழ் மந்திரமென்றே அழைத்தார்கள்.

அப்பேர்ப்பட்ட தமிழும் சைவமும் இன்று போதிய அளவு பேணப் படாது இருப்பது எங்கள் துர்அதிர்ஷ்டமே. பேணப்படாது விட்டிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் அண்மைக்காலங்களில் தமிழுக்கும் சைவத்திற்கும் இழுக்கும் இடர்ப்பாடும் தரப்பட்டுள்ளன. யாழ் நூலக எரிப்பு, திருக்கோயில்கள் பல கேட்பாரற்றுக் கிடக்குந் துர்நிலை, நனையும் ஆடுகளைக் கண்டு கதறி அழும் ஓநாய்க் கூட்டங்களின் அட்டகாசம் என்பன இவற்றுள் சில. அவற்றைவிடப் போரானது பெண்களையும், குழந்தைகளையும், வயோதிபர்களையும் வெகுவாக வாட்டி வதைத்து இம்சித்துள்ளது. தமிழ்மொழிக்கும் சமய அறிவுக்கும், சமய வாழ்வுக்கும், சமூக வாழ்வுக்கும் பெருத்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கும் அண்மைய காலத்தில் எங்களுக்கெல்லாம் திலகவதியார் போன்று எம்மை சைவத்தின் பால் ஈர்க்கவும், எம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சிவத்தமிழ்ச் செல்வியார் அரும்பாடுபட்டு வந்துள்ளார்கள். இடர்பட்ட இம் மக்கள் சேவையே இறைவனின் சேவை என்ற பண்டைய பண்பாட்டின் வழிநின்று பல அருஞ்சேவைகள் அண்மைக்காலமாகச் செய்து வருகிறார். அவற்றுள் சில பின்வருமாறு,

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம்,
அன்னசத்திரம்,
நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம்,
பக்தர் விடுதி,
அறநெறிப் பாடசாலை.

அவர் இப்புவிதனில் பிறந்து எழுபத்துஎழு ஆண்டுகள் பூர்த்தியாகுந் தருணத்தில் எமது அறிவை விருத்தியடையச் செய்யவும் அழகிய கைங்கரியம் ஒன்றினைச் செய்யவுள்ளார். அதுதான் அவர் பிரயத்தனத்தினால் அவர் பெயர் சூட்டித் திறக்கப்படப் போகும் தெல்லிப்பழை சிவத்தமிழ்ச் செல்வி சைவத் தமிழ் ஆய்வு நூலகம்.

அண்மையில் இங்கிலாந்தில் என் பழைய மாணவர்களையும் மற்றவர்களையுஞ் சந்தித்தபோது தம் பிறந்த மண்ணோடு அவர்கள் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தி மூன்று காரியங்களிலாவது அவர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஒன்று, அகதிகள் என்ற நாமத்தைச் சுமந்து நாதியற்று நட்டாற்றில் நலிந்து தவிக்கும் தமியரை ஈடேற்ற ஆவன செய்ய வேண்டும் என்றேன். அடுத்து இங்கிலாந்தில் வாழும் அவர்தம் மக்களுக்கு குழந்தைகளுக்கு, தமிழைப் புகட்டவேண்டும், இந்துக்களெனில் சைவத்தை அவர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும் என்றேன். மூன்றாவதாக ஈழத்தில் எழுதப்பெற்ற நூல்களை, நூற்சுவடிகளை, சைவப் பிரதிகளை, ஓலைச்சுவடிகளைச் சேகரிக்கவும். அவற்றை அச்சேற்றவும், பழைய ஈழத்து நூல்களை புது மெருகேற்றி அச்சேற்றி வெளியிடவும் ஈழத்து மக்களின் மொழி, மதம், கலாசாரம், வாழ்க்கை முறை பற்றி ஆய்வுகள் நடத்தி அறிக்கைகள், ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றை வெளியிடவும் ஆவன செய்யவேண்டும் என்றேன்.

கொழும்பு வந்ததும் கொக்குவில் சபாரத்தின முதலியார் அவர்கள் 1920ஆம் ஆண்டில் எழுதிய ''திருஞானசம்பந்தரின் வாழ்க்கை'' என்ற ஆங்கில நூலின் மறுபதிப்பு பற்றிய விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அதே போன்று ஜனவரி மாதம் ஏழாந் திகதி தெல்லிப்பழையில் திறக்கப் படப்போகும் சைவத்தமிழ் ஆய்வு நூலகத் திறப்பு விழாவிலும் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்துள்ளது.

ஈழத்துத் தமிழ் மக்களின் பாரம்பரியங்கள், நுண்கலைகள், இலக்கியம், தொல்பொருளியல், சரித்திரம், சமயம், சட்டங்கள், சமூக வழமைகள் போன்ற பலவற்றைப் பற்றியும், ஏன் புவியியல், மண்ணியல் போன்றவற்றைப் பற்றியும், நாங்கள் போதிய ஆராய்ச்சிகள்

நடத்தி எமது பரம்பரை பற்றிய தனித்துவத்தை உலகறியச் செய்யும் கடப்பாடு உடையவர்களாக இன்று நாங்கள் இருக்கிறோம். இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு.

நேற்று வந்த புல்லுருவிகள் சிலர் நெஞ்சறிந்து பொய்சொல்லி ஈழத்தமிழர் சரித்திரத்தையே திசைதிருப்பி மாற்றியெழுதப் புறப்பட்டுள்ளனர். ''ஐயிலண்ட்'' போன்ற தினசரி ஆங்கிலப் பத்திரிகை படிப்பவர்களுக்கு நான் கூறுவது புரியும். இது ஒரு சதி. இந்தச் சதியை முறியடிக்க எங்கள் தலைமுறை தயாராகாது விட்டால் வெளிநாட்டில் வாழும் எங்கள் தமிழர்களும் ஏன் உள்நாட்டவர்களும் கூட காலக் கிரமத்தில் தமிழையுந், தமிழ்ப் பாரம்பரியங்களையும், அவர்கள் தம் சமயத்தையும் அவர்கள் தம் சரித்திரத்தையும் மறந்து போகக் கூடிய ஒரு காலகட்டம் வந்து கொண்டிருக்கிறது. மறக்காது விட்டாலும் விபரீதத்திரிபுகளுடன் தம் மொழியையும் வரலாற்றையும் புரிந்து கொள்ளும் சூழல் உருவாகி வருகிறது. நாளாந்த வாழ்க்கையே ஒரு போராக இருக்கும் போது கலைகள் பற்றியும் இலக்கியம் பற்றியுஞ் சிந்திக்க எங்களுக்கு காலம் போதாமல் இருக்கிறது. போதிய நூல்களைச் சேகரித்து அறிஞர்களைத் தொடர்பு கொண்டு ஒரு ஆராய்ச்சிக் கூடம் அமைக்கப்பட்டால் எங்கள் இளைஞர்கள் நாங்கள் இருக்கும் காலத்திலேயே போதிய ஆராய்ச்சிகள் செய்து எங்கள் தனித்துவத்தை வெளியிட வழிவகுப்பார்கள் என்று நம்பியே சிவத்தமிழ்ச் செல்வியார் இந்த சிறந்த கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார் என்று நம்புகிறேன்.

சிவத்தமிழ்ச் செல்வியார் பெயரில் திறக்கப்படப்போகும் தெல்லிப்பழை சைவத்தமிழ் ஆய்வு நூலகம் ஈழத்தமிழர் வாழ்வில் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமையும் என்பதில் எனக்கு எதுவித சந்தேகமுமில்லை.

ஆய்வு நூலகம் அநேக நூல்களைத் தன்னுள் அடக்கி போதிய ஆராய்ச்சிக்கு வழியமைக்கட்டும்! தமிழையும் சைவத்தையும் இந்நூலகம் தளராது வளர்க்கட்டும்! செல்வியார் அவர்கள் நூறாண்டு காலம் மேனி நுடங்காது எம்மோடு இருந்து அரும்பணியாற்ற வேண்டும் என்று துர்க்கா பரமேஸ்வரி அன்னையிடம் அடிபணிந்து வேண்டுகிறேன்.

அன்புடன்

சி. வி. விக்கினேஸ்வரன்

# நூலக வளர்ச்சியில் ஐரோப்பியப் பாரம்பரியங்களும் தமிழ்ப் பாரம்பரியங்களும்

பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள்

முறைசார்ந்த கல்வியின் வளர்ச்சியோடு இணைந்த அறிவுக்கையளிப்பு நிறுவனங்களாக நூலகங்கள் தோன்றியமை உலகக்கல்வி வரலாற்றிலே காணப்படும் பொதுப்பண்பாகும். எழுத்துக் கலையின் வளர்ச்சியும் அறிவை எழுத்து வடிவிலே தேக்கிவைத்தலும் நூல்களின் ஆக்கத்துக்குரிய பின்புல அமைப்பினைக் கொடுத்தன. இந்நிலையில் ''உளவழி'' அறிவைத் தேக்கி வழங்கும் பழைய முறைமையோடு ''நூல்வழி'' அறிவைக் கையளிக்கும் மாற்று வகை முறைமையும் சமாந்தரமாக வளரலாயின. உளவழி முறைமையிலும் நூல்வழி முறைமையே படிப்படியாக மேலோங்கலாயிற்று.

மிகவும் தொன்மையான நூல்கள் களிமண் தகடுகளிலே ஆக்கப்பெற்றன. தமிழகத்தில் கபாடபுரம், தென்மதுரை, தகடூர் முதலியவிடங்களில் களிமண் தகடுகளிலே எழுதப்பெற்ற நூல்கள் இருந்தமை செவிவழிச் செய்திகளால் குறிப்பிடப்படுதல் உண்டு. அசிறியாவில் உள்ள தொன்மையான சுவடிக்கூடத்தில் (கி. மு 668—627) 25,000 களிமண் தகடுகளைக் கொண்ட நூற்றொகுதி இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

தொல்சீனம், கிரேக்கம் முதலியவற்றிலும் இவ்வகையில் பூர்வீக நூலகங்கள் காணப்பெற்றன. பண்டைய கிரேக்க ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் நூலகங்கள் இருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. அரிஸ்ரோட்டில் என்ற கிரேக்கப் பேரறிஞர் தமக்குச் சொந்தமான பெரும் நூலகத்தை வைத்திருந்தார் எனக் கிரேக்கப்பண்பாட்டு ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். நூல்களைத் தொன்மையான அறிவியற் சிந்தனைகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வைக்கும் கலையையும் அரிஸ்ரோட்டில் அறிமுகம் செய்தார் என்பதும் அறியக்கிடக்கின்றது. ஆனால் அவர்கள் பைபிரஸ் (Papyrus) புல் இதழ்களிலே நூல்களை ஆக்கியமையால் அவற்றை நீண்டகாலம் பாதுகாத்து வைப்பதிலே இடர்கள் தோன்றின. உலகக் கல்வி வரலாற்றிலும் நூல்கள் வரலாற்றிலும் அரிஸ்ரோட்டிலின் நூலகமே ஆரம்ப நிலையிலே சுட்டிக் காட்டப்படத்தக்க தனித்துவமான நூலகம் என்பது ஆய்வாளர்களின் முடிவு.

அரிஸ்ரோட்டிலது நூலகத்தைத் தொடர்ந்து பேர்காமும் (Pergamum) நகரில் கி. மு. 197 அளவில் ஒரு பெரும் நூலகம் அமைக்கப்பட்டது.

கி. மு. இரண்டாம், முதலாம் நூற்றாண்டளவில் ரோமாபுரியின் நிலைமையை விளக்கும் கல்வியியலாளர்களும், அகழ்வாராய்ச்சிவல்லாரும் அங்கு வீடுகளோடு இணைந்த நூலகங்கள் இருந்தமைக்குப் பரவலான சான்றுகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நூலகம் இல்லாத இல்லங்கள் ''குறைபாடுடைய'' இல்லங்களாகவே கருதப்பட்டன.

இதே காலப்பகுதியில் தமிழகத்தை நோக்கினால் ''சங்கம்'' என்ற அமைப்பு உயர்கல்விப்பீடமாக இருந்ததுடன் நூற்பண்பாடுபற்றிய அறிவுவிரவிய அமைப்பா

கவும் இருந்தமைக்கு இலக்கியவழிச் சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. நூல்களின் தரத்தைக் கணிப்பீடு செய்யும் எண்ணக்கரு நிலவியமைக்கு ''சங்கப்பலகை'' என்ற தொடர் சான்றாகவுள்ளது. தமிழகத்தில் அரசர்களே புலவர்களையும், நூல்களையும் ஆதரித்துப் போற்றுவோராய் இருந்தமை போன்று மேலைப்புலத்திலும் சமாந்தரமான ஒப்புமைகளைக் காணலாம். மன்னர் யூலியசீசர் மிகப்பெரும் பொது நூலகம் ஒன்றை அமைக்கவெண்ணி அக்காலத்தில் வாழ்ந்த நூலகவியலாளராகிய மார்க்கஸ் றெறன்றியஸ் வார்ரோ (Marcus Terenious Varro) என்பவரைநாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்று குறிப்பிடப்படுகின்றது. நூல்கள் வழியாக நிரப்பப்பட்டுள்ள சான்றோர்களின் திறன்மிகு சிந்தனைகளை பொது நூலகங்கள் வழியாக பொதுமக்களின் நுகர்ச்சிக்கு வழங்கும் நடவடிக்கை மேலை நாடுகளில் வளர்ச்சியுற்றமைக்கு அங்கு மலர்ச்சிகொண்ட மானிடவாதம், தராண்மைவாதம், சமயங்கள் வழியாக எழுந்த மனிதப்பண்புகள் பின்புலவிசைகளாக அமைந்தன.

நூல் நிலையங்கள், நூலகப்பண்பாடு முதலியவற்றை பாதுகாத்த உலக நகரங்கள் வரிசையில் கொன்ஸ்தாந்திநோபிள் தனிச்சிறப்பு வாய்ந்தது. சமயம், தொல்சீர் இலக்கியங்கள், மருத்துவம், வான நூல், தருக்கம், மெய்யியல் சார்ந்த பலவகையான நூல்களைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்கென வழங்கிய சிறப்பார்ந்த நூலகங்கள் கொன்ஸ்தாந்திநோபினிள் காணப்பட்டன. ஐரோப்பாவின் தொன்மையான பல்கலைக்கழகங்கள் கொன்ஸ்தாந்திநோபினிள் இருந்த நூலகங்களைத் தமது தேவைகளுக்கெனப் பயன்படுத்திக் கொண்டன.

கி. பி ஒன்பதாம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவின் புகழ்பூத்த நகரங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய உயர்கல்விப் பீடங்களையும், பல்கலைக்கழகங்களையும், உயர்கல்விக்கும் பொதுமக்கள் கல்விக்குமான நூலகங்களைக் கொண்டிருந்தன. இதே காலப்பகுதியில் தமிழகத்தின் கல்வியையும் நூலக வளர்ச்சியையும் நோக்கும்பொழுது மேலைத்தேயங்களோடு ஒத்த பண்புகளையும், தமிழகத்துக்குரிய தனித்துவமான பண்புகளையும் கண்டுகொள்ள முடியும்.

அரசுகளின் வளர்ச்சியும், பக்திநெறியின் வளர்ச்சியும் வடபாரதத்தின் செல்வாக்குகளும் வடமொழியின் செல்வாக்குகளும் விரவிய காலப்பகுதியாக கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகம் விளங்கியது. கோவில்களை நிலைக்களமாகக் கொண்ட நகரங்கள் வளரலாயின. வரன்முறையான கல்வி கோவில்களுக்கு அணித்தாக நிலைபேறுகொண்டு வளரலாயிற்று. தெய்விக வாழ்வுக்கும், வளத்துக்கும் நூல்களின் இன்றியமையாமை உணரப்பட்டது. மெய்ம்மையை நிறுவுவதற்குத் தமிழர்களின் பண்பாட்டில் நூல்கள் பயன்படுத்தப்பட்டன. சைவசமயத்தின் மேன்மையை நிறுவுவதற்கு ஆற்றின் ஓட்டத்துக்கு எதிர்த்திசையில் ஏட்டினை மிதக்கச் செய்த சமயவரலாற்று நிகழ்ச்சிகளும் உள்ளன. கலைகளின் காவலனாகவும் ஏடுசுமக்கும் பெருமானாகவும் சிவபிரானை அடியவர்கள் தரிசித்தனர்.

மத்தியகால ஐரோப்பாவில் சமயத்துறவிகள் தாம் வசித்து வந்த மடாலயங்களில் நூல்களைச் சேமித்தும் பாதுகாத்தும், பிரதியெடுத்தும் வந்தனர். சிறப்பாக பெனடிக்ரைன் பிரிவைச் சேர்ந்த (Benedictine Order) துறவிகள் இப்பணிகளில் சிறப்பாக ஈடுபட்டனர். சமயநூல்கள், சமயத்துறவிகளின் எழுத்தாக்கங்கள், வரலாற்று எழுத்தாக்கங்கள் சமயநூல்களின் திறனாய்வுக் குறிப்புக்கள், மெய்யியல் எழுத்தாக்கங்கள் முதலியவை அவர்களது நூலகங்களிலே பரவலாகக்காணப்பட்டன. தாம் பயன்படுத்துவதோடு பொது மக்களின் பாவனைக்கும் அவர்கள் தமதுநூலகங்களை வழங்கினர்.

கி. பி. பதினோராம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஐரோப்பியப் பல்கலைக்கழகக் கட்டமைப்பு மேலும் வலிமைகொண்டு வளர

லாயிற்று. புதிய புதிய பாடநெறிகள் அறிமுகமாயின. சட்டம், மெய்யியல், தருக்கம், இசை, புவியியல், இலக்கியம், மருத்துவம் முதலியதுறைகளில் தீவிர வளர்ச்சிகள் ஏற்பட புதிய நூலாக்கங்களின் மலர்ச்சி மேலோங்கியது. நூல்களின் உள்ளடக்கம் விரிவடையத் தொடங்கியது. நூல்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இதேகாலப் பகுதியில் தமிழகத்தின் நிலையை ஒப்புநோக்கும் பொழுது சோழப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும் கல்வியிலும், நூற்பண்பாட்டிலும் பெரும் அபிவிருத்திகளை ஏற்படுத்தியமையைக் காணலாம். இக்காலத்தில் நிகழ்ந்த பெருங்காவியங்களின் ஆக்கம், உயர்நிலையான கல்விச் செயற்பாடுகள் தமிழகத்தில் நிலவியமைக்குச் சான்றாகவுள்ளது. இலக்கண நூல்களின் ஆக்கம் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றது. அதாவது, உயர்கல்வி வளர்ச்சிக்கும் இலக்கண நூலாக்கங்களின் வளர்ச்சிக்கும் நேரடியான இணைப்புக் காணப்படுதல் கல்வியியலாளரால் முன்வைக்கப்படும் ஒரு சிறப்பார்ந்த கருத்தாகும். பெரும் ஆலயங்கள், கலைவண்ணங் கொண்ட சிற்பங்கள், மாளிகைகள், அரங்குகள், நூலகங்கள் முதலியவை சோழப் பெருமன்னர் ஆட்சிக்காலத்திலே கட்டியெழுப்பப் பெற்றன. சமயம், இலக்கியம், முதலாம் நூல்களுடன் ஆடல், பாடல் மருத்துவம், சோதிடம் முதலாம்துறைகள் சார்ந்த நூலாக்கங்களும் சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்திலே எழுதப் பெற்றன. ஏடுகளைப் படியெடுத்துப்பாதுகாக்கும் முறையும் வளரலாயிற்று. பனை ஓலை ஏடுகளின் நீடித்தவாழ்வு போதாதிருந்தமையால் செப்பேடுகளில் நூல்களைப் பிரதிசெய்து பாதுகாத்தலும் இக்காலத்தில் வழக்கில் இருந்தன. சோழப் பெருமன்னர்கள் சில சிறப்பு வாய்ந்த செய்யுள்களையும், குறிப்புக்களையும் கற்சாசனங்களிலும் பொறித்து வைத்தனர்.

ஐரோப்பாவில் நிகழ்ந்த பல்வேறு கல்விச் செயற்பாடுகளும் சமயபண்பாட்டு விளைவுகளும் ''புதியகற்றல்'' (New Learning) என்ற இயக்கத்தை உருவாக்கின. ஐரோப்பாவிலே விசை கொண்டு எழுந்த சமய சீர்திருத்த இயக்கம், கல்வி மறுமலர்ச்சி இயக்கம், இத்தாலியில் வளர்ச்சியுற்ற மானிடப்பண்பு இயக்கம், அச்சுஎழுத்துக்கள் மீது காகிதத்தாள்களை அழுத்திப் பிரதி செய்து நூல்களை ஆக்கும் முறைமை பொதுமக்களின் எழுத்தறிவு வளர்ச்சி முதலியவற்றின் ஒன்றிணைந்த விளைவாக ''புதியகற்றல்'' இயக்கம் மலர்ச்சியுற்றது.

பிரான்ஸ் நாட்டில் நான்காம் லூயி மன்னரும், ஐந்தாம் சார்ள்ஸ் மன்னரும் உருவாக்கிய ''அரசரின் நூலகம்'' (Kings Library) பின்னர் பொதுமக்கள் பாவனைக்குரிய தேசிய நூலகமாக வளர்ச்சியுற்றது. ஐரோப்பாவில் விரிவடைந்த பரந்த வர்த்தக வளர்ச்சியும், கடல் வர்த்தக முன்னேற்றமும், கல்விப்பரவலும், நூலாக்கங்களின் வளர்ச்சிக்கும், நூல்நிலையங்களின் வளர்ச்சிக்கும் மேலும் தூண்டுதல்கள் அளித்தன. மத்தியகால வர்த்தகத்திலேசிறப்புப்பெற்று விளங்கிய வெனிஸ் நகரம் நூலகத்துறையிலும் புகழ்பெற்ற நகரமாக வளர்ச்சியுற்றது. 1571ஆம் ஆண்டில் வெனிஸ் நகரத்தில் அழகும் வனப்பும் அதிகப்படியான நூல்களும் கொண்ட மிகப்பெரும் நூலகம் ஒன்று திறக்கப்பட்டது. அந்நூலக்கட்டடம் உலகப்புகழ்பெற்ற ஓவியரும் சிற்பியுமாகிய மைகலஞ்சலோ அவர்களால் வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கிலாந்தில் ஏற்பட்ட சமயச்சீர்திருத்த நடவடிக்கைகள் துறவிமாடங்களில் அமைக்கப்பட்டிருந்த நூலகங்களை நிலைகுலையச் செய்தன. எட்டாவது ஹென்றி மன்னர் துறவிமாடங்களுக்கு எதிரான பல சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தார். கற்றலிலும், நூல்களைத் திரட்டிச் சேர்ப்பதிலும் புதிய அணுகு முறைகள் சமயச்சீர்திருத்த காலங்களிலேதோன்றின.

தமிழகத்தில் அகச்சமயங்களுக்கும் புறச்சமயங்களுக்குமிடையே போட்டிகளும் வாதிடல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அவற்றின் விளைவாகப் பல்வேறு நூலாக்கங்களும் தோன்றின. ஒவ்வொரு சமயத்தினரும் தத்தமது சமய நூல்களைப்பொன்

போலப் பாதுகாக்கவும், படிகள் எடுத்து வழங்கவும் முயன்றனர். சைவத்திருமுறைகளைத் தொகுக்கும் முயற்சியும் பாதுகாக்கும் முயற்சியும் வளரலாயிற்று. நம்பியாண்டார் நம்பியின் நற்பணிகள் சைவர்களால் தொடர்ந்து பின்பற்றப்படலாயின. சைவ நூல்களை வரன்முறைப்படுத்தியமை போன்று வைணவ நூல்களையும் பாசுரங்களையும் நிரற்படுத்திப் பாதுகாக்கும்பணிகள் வைணவர்களிடையே வளரலாயின.

தமிழ்நூல்களைப்படியெடுக்கும் செயற்பாடுகள் பெரும்பாலும் கார்காலங்களிலேயே நிகழ்ந்தன. கழனிகளில் வெள்ளம் நிறைந்து பயிர் செய்வோர் ஓய்வுகொண்டு அமர்ந்திருந்த கார்த்திகை, மார்கழி முதலாம் மாதங்களில் கற்றோர் இல்லங்களிலே தனித்திருந்து நூல்களைப்படியெடுத்தனர். இவ்வாறு படியெடுக்கும் பொழுது தமது ஆக்கத்திறன்களையும் உட்புகுத்தி ''இடையிற் பெய்து'' எழுதுவோரும் இருந்தனர்,

ஜேர்மனியில் நிகழ்ந்த முப்பது ஆண்டுக்கால யுத்தம் நூல்நிலையங்களின் செயற்பாடுகளைப் பெருமளவிலே பாதித்தன. ஜேர்மனியின் புகழ்பூத்த பல்கலைக்கழகமாகிய கைடில் பேர்கின் (Heidelberg) நூலகம் யுத்தத்தினால் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாயிற்று. இக்காலாட்டத்தில் ஜேர்மனியில் இருந்த பல நூல்கள் வடக்கு நோக்கி சுவீடன் பிரதேசத்துக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. 1620ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சுவீடன் நாட்டின் உப்சலா (Uppsala) பல்கலைக்கழக நூலகம் ஒருவகையில் இதனால் வளம்பெற்றதென்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக தமிழகத்து நிலவரங்களை நோக்கும் பொழுது தமிழகம் அனுபவித்த முகலாயர்களின் படையெடுப்புக்கள் தமிழக நூலகங்களின் சிதைவுக்கு வழிகோலியது. தமிழறிஞர்கள் சைவநூற் பிரதிகளைப் பாதுகாப்பான மறைவிடங்களில் ஒழித்து வைத்தனர்.

ஐரோப்பாவிலே பரவலாக வளர்ச்சியுற்ற கைத்தொழிற்புரட்சி, திருத்தமான அச்சுப் பொறிகளின் கண்டுபிடிப்பு, திருச்சபைகளின் பரந்துபட்ட கல்வி நடவடிக்கைகள், பல்கலைக்கழகங்களின் வளர்ச்சி, வாசகர்களின் தொடர்ச்சியான பெருக்கம், முதலியவை நூல்களுக்கும், நூல்நிலையங்களுக்குமான தேவைகளை அதிகரிக்கச் செய்தன. இங்கிலாந்தில் ஒவ்வொருகோவில் பற்றிலும் நூலகங்கள் (Parish Libraries) ஆரம்பிக்கப்பட்டன. ஜேர்மனி, ஒல்லாந்து முதலிய நாடுகளிலும் இவ்வகையான வளர்ச்சி காணப்பட்டது.

உலக நிலவரங்களைப் போன்று இலங்கையின் நூலக வளர்ச்சியும் சமயச்சார்புடையனவாகக் காணப்பெற்றன. மகாவிகாரை, அபயகிரிவிகாரைமுதலாம் துறவிமாடங்களில் பௌத்த சமய சம்பந்தமான நூல்கள் சேமித்து வைக்கப்பட்டன. நூல்களைப் பிரதிபண்ணும் வழக்கமும் பௌத்த துறவிகளிடத்துக் காணப்பட்டது.

இலங்கையில், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், நகுலேஸ்வரம், வல்லிபுரம் முதலாம் ஆலயங்களோடு இணைந்த மடங்களில் நூலகங்கள் நிலைத்திருந்தன. நூல்களைப் பாதுகாப்போர் ''சான்றோர்'', ''ஏட்டுடையார்'', ''நூலாச்சியர்'', ''கற்பகத்தார்'' முதலாம் பெயர்களால் அழைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்து அரசர் காலத்தில் நல்லூரில் மிகப்பெரும் நூலகம் ஒன்று காணப்பட்டமை முதலியார் இராசநாயகம், பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், முதலியோரது ஆய்வுகளிலே குறிப்பிடப்பட்டுள்ளன. பரராசசேகரம், செகராசசேகரம் முதலிய பெரும்நூல்கள் யாழ்ப்பாணத்து அரசர் காலத்தில் எழுதப்பெற்றன. நூல்களின் நலன் ஆயும் தமிழ்ச்சங்கம் ஒன்றும் அங்கு இடம்பெற்றிருந்தது.

கல்வி வரலாறு, நூலக வரலாறு முதலியவற்றின் வளர்ச்சியில் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படத்தக்க ஒரு நிகழ்ச்சி பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்திலும் ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் வாழ்ந்த மெய்யியலாளராகிய லெய்பின்ஸ் (G. W Leibniz) என்பார். தேசியநூற்பட்டி

யல் ஒழுங்கமைப்பை (National Bibilorgraphical Organization) ஏற்படுத்தினார். குறிப்பிட்டபாடத்தில் எழுதப்பெற்ற நூல்கள் அனைத்தையும் பட்டியலிட்டுத் தொகுத்துக்கூறும் அந்த முறைமையானது வரன்முறையான ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் துணை செய்தது.

இலங்கைத்தீவு, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்கு உட்பட்டவேளை அவர்களின் கல்வி முறைமையும், நூலக முறைமையும் இங்கு பரவி வளரலாயிற்று, பள்ளிக்கூட நூலகம், கோவிற்பற்று நூலகம், செமினறி நூலகம் என்றவாறு நூலக வளர்ச்சி இந்நாட்டில் ஏற்படலாயிற்று.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பல்கலைக்கழக நூலகம், பொதுநூலகம் என்ற அமைப்புக்களும் வளரலாயிற்று. அமெரிக்க மிசனெறிமார் வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, உடுவில், உடுப்பிட்டி ஆகிய இடங்களில் பொதுக்கல்வியையும் உயர்கல்வியையும் வளம்படுத்துவதற்குரிய நூலகங்களை நிறுவினர். கத்தோலிக்க திருச்சபையினர் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, ஊர்காவற்றுறை, இளவாலை, பருத்தித்துறை முதலாம் இடங்களில் கல்விக்குரிய நூலகங்களை அமைத்தனர்.

அங்கிளிங்கன் திருச்சபையினர் சுண்டிக்குளியிலும், மெதடிஸ்த திருச்சபையினர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் மாணவர்களுக்குப் பயன் தரவல்ல நூலகங்களை அமைத்திருந்தனர். சைவத்தமிழ்ப்பாரம்பரியத்தில் நூலாக்கப்பணியையும், நூலகப் பணியையும் ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் அவர்கள் முன்னெடுத்தார்கள்.

தெளிவான வசனநடை, ஆழ்ந்தகருத்துக்கள், வழுவற்ற பதிப்புக்கள் கொண்ட நூலாக்கங்களை வெளியிட்டநாவலர் அவர்கள் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையோடு இணைந்த நூலகத்தை அமைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்பெறுமாறு செய்தார். அழுக்கான கைகளோடு நூல்களைத் தொடுதல், வெண்ணீறு பூணாது நூல்களைப்பகுத்தல் நூல்களின் உள்ளே பிறபொருள்களைச் சொருகி வைத்தல், நூல்களின் பக்கங்களை மடித்துவைத்தல் முதலியவை ஆறுமுகநாவலரால் தடைசெய்யப்பட்ட நூற்பழக்கங்களாக இருந்தன என்று கூறப்படுகின்றது தூய உடம்பினராக நூல்களைப்படித்தல் வேண்டும் என்றும் தூயசிந்தனைகளோடு படிக்கவேண்டும் என்றும், படிக்கும்பொழுது வீண்வார்த்தைகள் பேசலாகாதென்றும், போசனம் செய்தவாறு நூல்களைப் படிக்கலாகாது என்றும் அவரால் வற்புறுத்தப்பட்டன. சைவவினா விடையில் அவரால் வலியுறுத்தப்பட்ட ஒழுக்கங்கள் நூலகப் பண்பாட்டுக்கும் உபயோகமானவையாயிருந்தன.

ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து வளர்ச்சியுற்ற இந்துக்கல்வி இயக்கங்கள் நூலகப்பணியிலும் கலைத்திட்ட மேம்பாட்டிலே நூலகங்களைப் பயன்படுத்துவதிலும் தீவிர விருப்புடையனவாயிருந்தன. சைவவித்தியா விருத்திச்சங்கத்தினர் தாம் அமைத்த பெரிய பாடசாலைகளிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும் நூலகங்களை அமைத்தனர். இந்துக் கல்லூரிச்சபையினரும் தமது கல்லூரிகளிலே நூலகங்களை அமைத்து ஆங்கில நூல்களையும் தமிழ் நூல்களையும் சேமித்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும், பயன்படுமாறு வழங்கினர். நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மாணவரிடையே தூண்டுவதில் அக்காலத்தைய ஆசிரியர்கள் பெரும்பங்கு வகித்தனர்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக்கல்லூரியிலும், இராமநாதன்

கல்லூரியிலும் முறையே ஆண்மாணவர்களுக்கும், பெண் மாணவிகளுக்குமெனத் தனித்தனி நூலகங்களை அமைத்தார். முதன்முதலில் சைவப்பெண்கள் கற்பதற்கென தனியான நூலகம் இராமநாதன் கல்லூரியிலே அமைக்கப்பட்டது. இராமநாதன் கல்லூரியை அடியொற்றிச் சைவப் பெண்கள் மத்தியிலே வாசிப்புப்பழக்கம் விரிவடையத் தொடங்கியது. அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக ஆனந்த விகடன், கல்கி, கலைமகள் முதலாம் சஞ்சிகைகளை விரும்பிப்படிக்கும் பெண்வாசகர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கத்தொடங்கியது. கோதைநாயகி அம்மாள், திரிபுரசுந்தரி (லக்ஷமி) போன்ற பெண் எழுத்தாளர்கள் யாழ்ப்பாணத்துப் பெண் வாசகர்கள் மத்தியில் புகழ்பெறத் தொடங்கினர். சேர்.பொன். இராமநாதன் அவர்களைத் தொடர்ந்து திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் இந்தியாவில் இருந்தும், இங்கிலாந்தில் இருந்தும் நூல்களை வரவழைத்து மேற்கூறிய இருநூல் நிலையங்களையும் மேலும் வளமுள்ளதாக மாற்றியமைத்தார்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் கல்விவளர்ச்சியை ஒன்றிணைந்த பல்வேறு நடவடிக்கைகள் மேம்படுத்தின.

அவைவருமாறு :

1. தாய்மொழிகள் கல்வி மொழியாக வளர்ச்சியுற்றமை.
2. இலவசக் கல்வியை விரிவு படுத்தும் செயற்பாடுகள் தீவிரம் பெற்றமை.
3. நூல் நிலையங்கள், மற்றும் ஆய்வு கூட வசதிகளுடன் இணைந்த மத்திய மகா வித்தியாலயங்கள் திறக்கப்பட்டமை
4. ஆசிரியர் கல்வியை மேம்படுத்தும் நடவடிக்கைகள் விரிவடைந்தமை.
5. உயர் கல்விவாய்ப்புக்கள் விரிவு பெற்றமை.
6. பெண்களின் கல்வி ஈடுபாடுகளில் மேம்பாடுகள் ஏற்பட்டமை.
7. நூலாக்கங்களின் வளர்ச்சி ஏற்பட்டமை.
8. கல்வி வாயிலாக நிமிர் நிலையான சமூக அசைவியத்தை (Upward Socia Mobility) ஈட்டக் கூடியதாக இருந்தமை.

மேற்கூறியவற்றின் பின்னணியில் பின் வரும் நூலக வகைகள் இலங்கையிலும், தமிழ்ப் பிரதேசங்களிலும் வளரலாயின.

### தேசிய நூலகங்கள் :

தேசிய நூலகம் பற்றிய எண்ணக்கரு இலங்கையில் வளர்ச்சியுற்றாலும், எடுத்துக்காட்டாகக் குறிப்பிடக் கூடிய ஒரு தேசிய நூலகம் முழுமையாக இலங்கையில் இன்னமும் உருவாகவில்லை என்பதை திறனாய்வு நோக்கில் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஒரு நாட்டில் வெளிவருகின்ற அனைத்து நூலாக்கங்களையும் அனைத்துப் படைப்புக்களையும், தேசிய நூற்பட்டியலையும் பேணிப்பாதுகாத்து அறிவு நுகர்வோருக்கு வழங்கவேண்டிய தொழிற்பாடு தேசிய நூலகங்களுக்கு உண்டு.

### இனக்குழும நூலகங்ள் ( Ethnic Libraries )

இனக்குழுமங்களின் தனித்துவங்களையும், நூலாக்கங்களையும், பேணிப்பாதுகாத்து கற்பவர்களுக்கும் ஆய்வு செய்பவர்களுக்கும் வழங்கும் நூலகங்களாக இவை அமையும், இலங்கையின் தமிழ் எழுத்தாக்கங்கள் அனைத்தையும் தொகுத்துப் பாதுகாக்கும் ஒரு நூலகம் இன்னமும் உருவாகவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

தேசிய நூலகப்பண்பு, இனக்குழும நூலகப் பண்பு இரண்டும் இணைந்த வகையில் யாழ்ப்பாணப் பொது நூலகம் வளர்ச்சியுற்று வந்தாலும் அது எரிக்கப்பட்டமை அறிஞர்கள் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் பெரும் துயரத்தை ஏற்படுத்தியது. தாவீது அடிகளார் அத் துயரச் செய்தியைக் கேட்டு இறந்தார். மறைந்த பீட்டர் கெனமன் அவர்கள் தமது சொந்த நூல்கள் அனைத்தையும் யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு வழங்குவதாக உயில் எழுதிவைத்தார்.

**பல்கலைக் கழக நூலகங்கள் :**

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் வளர்ச்சி பெற்ற நூலகங்களுள் விதந்து குறிப்பிடத்தக்கவை பல்கலைக்கழக நூலகங்களாகும். உயர்கல்விக்கும், ஆராய்ச்சிக்குமுரிய நூல்களை வழங்குவதில் இவை சிறப்பாகப் பணியாற்றுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிறப்பார்ந்த நூலகப்பணி சுட்டிக்காட்டப்படத்தக்கது. பல்கலைக்கழக நூலக சேவைகளை நிறைவேற்றும் அதே வேளை தமிழியல், தமிழ் அறிவியல், எழுத்தாக்கங்கள் அனைத்தையும் திரட்டி வைக்கும் நூலகமாக இது அமைந்துள்ளது. பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், முதலியோர் தாம் சேமித்து வைத்த அரிய நூல்கள் அனைத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகத்துக்கு வழங்கியுள்ளனர்.

**சிறப்பு நூலகங்கள் :**

பல்கலைக் கழக நூலகங்கள் ஒருவகையில் சிறப்பு நூலகங்களாகவே கருதப்படுகின்றன. அவைதவிர்ந்த சட்ட நூலகம், மருத்துவ நூலகம், முதலிய சிறப்பார்ந்த நூலகங்களும் இலங்கையிலே காணப்படுகின்றன.

**சமய நூலகங்கள் :**

சிறப்பு நூலகங்களின் வரிசையில் சமய நூலகங்கள் உள்ளடங்கினாலும், நூலக வரலாற்றிலும் கல்விவரலாற்றிலும் சமய நூலகங்கள் தனித்துவம் வாய்ந்தவையாக இயங்கி வந்துள்ளன. பௌத்த சமயத்தை அடியொற்றிய பல சமய நூலகங்கள் தென்-இலங்கையிலே காணப்படுகின்றன. கொழும்பு, யாழ்ப்பாணம், பிலிமத்தலாவ, அம்பிட்டியா போன்ற இடங்களில் கிறிஸ்தவ சமயம் சார்ந்த நூலகங்கள் இயங்கி வருகின்றன.

சைவசமயத்துக்குரிய வளமான, தனியான நூலகம் இதுவரை இந்நாட்டில் உருவாகவில்லை. இந்தக்குறைபாட்டினைத் துர்க்கா நூலகம் நிறைவேற்றி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பள்ளிக்கூட நூலகங்கள் :**

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் பள்ளிக்கூட நூலகங்களைப் பொறுத்தவரை வளர்ச்சியும் அபிவிருத்தியும் காணப்பட்டு வருகின்றதாயும், அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழ் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்வதையே காட்டுகின்றன. இதனால் தமிழ் மாணவர்கள் மத்தியில் பொது அறிவு வீழ்ச்சியடைந்து கொண்டு வருவதுடன், பொதுப் போட்டிப் பரீட்சைகளில் கூடிய புள்ளிகளை அவர்களாற் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் தோன்றிவருகின்றது.

**தனியார் நூலகங்கள் :**

இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகிவரும் இந்நூலகங்கள் எமது பிரதேசங்களிலே பரவலாகக் காணப்பட்டாலும், உள்நாட்டு யுத்தங்களினால் இவை பெருமளவு தாக்கங்களை அனுபவித்து வருகின்றன. எனினும் தங்கம், பாத்திரங்கள், ஆடை அணிகலன்கள், எலத்திரன் கருவிகள், வாகனங்கள் முதலியவற்றை வாங்குவதில் அக்கறை செலுத்துமளவுக்கு நூல்களை வாங்குவதில் தமிழ் மக்கள் அக்கறையும் விருப்பும் காட்டுவதில்லை என்பதையும் அவதானிப்புக்கள் தெரியப்படுத்துகின்றன.

**சிறார் நூலகங்கள் :**

இலங்கையின் சிறப்பார்ந்த பொது நூலகங்களிலே சிறார்க்கென தனியான பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன வாயினும், தமிழ்ச் சிறார்களுக்கெனத் தனித்துவமான சிறார் நூலகம் இதுவரை இந்நாட்டில் வளமுற உருவாக்கப்படவில்லை என்ற இடை வெளியையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

நூலகங்களின் வளர்ச்சியோடு நூலகக் கட்டடக்கலை என்ற தொழில் நுட்பமும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. நவீன நூலகக் கட்டடங்கள் ''இதவடிவ அமைப்பை'' (Modular System of Building) கொண்டவையாக இருத்தலே சிறந்த தென

ஆய்வு முடிவுகள் வலியுறுத்துகின்றன. இதன் விளக்கத்தைச் சுருக்கமாகக் கூறுவதானால் கட்டத்தின் உட்பகுதியின் நெடும்பரப்பு தேவைக்கேற்றபடி சுருக்கப்படவோ விரிவாக்கப்படவோ கூடிய நெகிழ்ச்சி கொண்டதாக இருத்தல் வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கட்டடம் ஒரு வகையில் இதவடிவ அமைப்பைக் கொண்டிருத்தலைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

நவீன கல்வியுலகின் அறிவுப்பரவலில் நூலகங்கள் பாரம்பரியமான பணிகளோடு பாரம்பரியமற்ற செயற்பாடுகளையும் (Non Traditional Activities) மேற்கொள்ள வேண்டியுள்ளன. நூலகர்கள் புடைபெயர்ந்த ஆசிரியர்களாகவும் (Loco-Teachers) ஆராய்ச்சியாளர்களாகவும் செயற்பட வேண்டியுள்ளனர். பாரம்பரியமான நூல்களுடன் எலத்திரன் நூல்களையும் சேமித்து வழங்கவேண்டியுள்ளது. கருத்தரங்குகள் ஆய்வரங்குகள் முதலியவற்றை நூலகங்களை அடியொற்றித் தொடர்ச்சியாக அமைக்கவேண்டியுள்ளன. வகுப்பறைகளிலும், விரிவுரை மண்டபங்களிலும் ஆய்வுகூடங்களிலும் கிடைக்கப் பெறாத மாற்றுவகையான அறிவுக்கையளிப்பை நூலகங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இன்று உலகெங்கிலும் வளர்ச்சியுற்றுவரும் "கற்பதற்காகக் கற்றல்" (Learn to Learn) "மேற்றொடர்கல்வி" (Continuing Education) முதலிய செயற்பாடுகளை இயக்கமுறச் செய்வதில் நூல் நிலையங்கள் விசை கொண்டு செயற்பட வேண்டியுள்ளன.

அறிவுத்துறைகளில் உடனுக்குடன் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களைத் தாமதம் இன்றி உணர்த்தும், "உடனடி விழிப்புணர்வுச் சேவைகளை" (Current Awareness Service) வழங்கும் உன்னதமான பொறுப்பும் நூலகங்களிடமே விடப்பட்டுள்ளன.

இவ்வாறாக வளர்ச்சியுற்று வரும் நூலக சேவைகளைப் பயன்படுத்தி கல்வியிலும், விழிப்புணர்விலும், செயலாற்றுகைகளிலும், நற்பண்புகளிலும், அனைத்து மக்களையும் மேம்படவைக்க வேண்டிய பணிகள் காத்திருக்கின்றன.

---

**உசாத்துணை நூல்கள் :**


1. D. N. Marshall,
   **History of Libraries**,
   London, 1983.

2. Karl Christ,
   **The Hand Book of Medieval Library**
   London, 1984

3. Ronald Charles Benge
   **Cultural Crisis and Libraries in the Third World**
   London, 1979.

4. James Thompson
   **An Introduction to University Library Administration**,
   London, 1979.

5. சபா, ஜெயராசா
   **தமிழர் உளவியலும் கல்வியும்**
   யாழ்ப்பாணம், 2001.

உ

# நூல் நிலையம்

பல்வேறு நூல்களும் சஞ்சிகைகளும் முறைப்படி சேகரித்து ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவுக்களஞ்சியங்கள் நூல் நிலையங்கள் எனப்படும்.

பண்டைக்காலத்தில் இந்தியாவில் சமணர்களும் பௌத்தர்களும் கல்வியை வளர்த்து வந்தனர். அவர்கள் தங்கள் பள்ளிகள் என்னும் மடங்களில் ஏட்டுச் சுவடிகள் பலசேர்த்து வைத்திருந்தனர். பின்னர் சைவ மடங்களிலும் ஏராளமான சுவடிகள் சேகரித்துப் பாதுகாக்கப் பட்டன என்று தெரிகிறது. அரசர்கள் அரண்மனைகளில் நூல்களைச் சேர்த்து வைத்திருந்தனர். தஞ்சையில் உள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையம் அண்மைக்காலத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

மிகப்பழைய காலத்தில் முதன்முதல் எழுந்த நூல்நிலையம் பாபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட களிமண் பலகைகள் (Clay Tablets) ஆகும். இவையே பாபிலோனிய நாகரிக மக்களின் நூல்கள். இவற்றின் காலம் சுமார் கி. மு. 2000. அசீரிய மன்னர் ஆசுர்பானீ - பால் (Assurbani-pal கி. மு. 600) என்பவருடைய நூல்நிலையம் மிகப்பழமையானது. இவர் நினிவே (Nineveh) என்னும் தம் தலைநகரிலிருந்த அரண்மனையில் சேர்த்து வைத்திருந்த ஏராளமான நூல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 22 களிமண் பலகைகள் இப்போது இலண்டன் நகரத்திலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. இவை வரலாறு, வானவியல், கணிதம் போன்ற இக்காலத்து அறிவுத்துறைகள் பற்றியனவாம். இந்த நூல்கள் பொருள் வாரியாகப் பிரிக்கப்பட்டு ஒழுங்கான முறையில் அடுக்கப்பட்டிருப்பதால் அக்காலத்திலேயே நூல்நிலைய விஞ்ஞான அறிவு தோன்றியிருந்தது என்று கூறலாம். இந்த நூல்களைக் கவனிப்பவர் 'எழுதிய பலகையர்' (Men of written tablets) என்று அழைக்கப்பட்டார். இது நூல்நிலையம் ( Librarian ) என்று இப்போது வழங்கும் சொல்லை ஒத்ததாகும். இந்தப் பதவியை முதன்முதல் உலகத்தில் வகித்தவர் அமில் ஆனு (Amil Anu) என்னும் பாபிலோனியராவர்.

பண்டை எகிப்து நாட்டு நூல்நிலையங்களும் மிகப் பழமையானவையே. தீப்ஸ் (Thebes) என்ற நகரிலிருந்த கார்னாக் என்னும் கோயிலில் நூலகம் (House of books) என்ற பெயருடைய கல்வெட்டும், இட்பூ (Idfu) என்னும் ஊரில் பாப்பைரஸ் அகம் (The house of papyrus) என்ற கட்டடமும் தோண்டிக் காணப்பட்டுள்ளன. இந்தக் கட்டடத்தின் கற்சுவர்களில் வரலாறு முதலிய பல துறை நூல்கள் உள்ளனவாக வெட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை கி. மு. 300க்குப் பின்னரே சிறப்பு

டையனவாக இருந்தன. அந்த நாட்டில் முதன்முதல் நிறுவப்பட்ட பெரிய நூல்நிலையங்கள் அலெக்சாந்திரியா நகரத்தில் கி. மு. 300இல் முதலாம் டாலமி என்னும் கிரேக்க மன்னன் நிறுவிய இரண்டு நூல்நிலையங்களாகும். அவற்றில் சுமார் ஏழு இலட்சம் சுவடிகள் இருந்தன. எகிப்தியருக்கும்ரோமானியர்க்கும் போர் நிகழ்ந்தபோது ஜூலியஸ்சீசர் என்னும் ரோமானிய அரசர் இந்த நூல்நிலையங்களில் ஒரு பகுதியை அழித்து விட்டார்.

டாலமிக்கு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அட்டாலஸ் என்பவர் ஆசியா மைனரிலுள்ள பர்கமம் (Pergamum) என்னும் இடத்தில் ஒரு நூல் நிலையம் கண்டார். இந்த நிலையத்து மார்க் அன்ரனி (Mark Antony) என்ற ரோமானிய வீரர் இரண்டு இலட்சம் நூல்களை அளித்தார். கிரீசில் பண்டைக்காலத்தில் (கி. மு. நாலாம் நூற்றாண்டில்) அறிஞர்களும் செல்வர்களும் நூல்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உடையவராயிருந்தனர். மிகப்புகழ் வாய்ந்த அறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் என்பவர்களிடம் பெரிய தொகுதிகள் இருந்தன. கிரீசிலிருந்த நகர இராச்சியங்களே உலகில் முதன்முதலாகப் பொதுமக்களுக்கான நூல்நிலையங்களை நிறுவின.

ரோமாபுரியில் நூல்நிலையம் முதன்முதல் தோன்றியது கி. மு. 150 லாகும். வெளிநாடுகளை வென்று அங்கிருந்து கொண்டு வந்த நூல்களைக் கொண்டே இந்த நூல்நிலையம் நிறுவப்பட்டது. பாலஸ் என்பவர் மாசிடோனியா அரசரான பர்சியஸின் நூலகத்திலிருந்த நூல்களையும் சல்லா (Sulla) என்பவர் ஆதன்ஸ் நகர இராச்சியத்தை வென்று அரிஷ்டோட்டிலின் நூலகத்திலிருந்த நூல்களையும் ரோமாபுரிக்குக் கொண்டு வந்தனர். ரோமாபுரியில் முதன் முதலாகத் தோன்றிய பொது நூலகம் அகஸ்ட்டஸ் காலத்தில் கி. மு 37இல் ஆசினியஸ் பாலியோ (Asinius pollio) என்பவர் நிறுவியதாகும். ரோமாபுரியில் மிக்க பேர் பெற்றதாக இருந்தது அல்ப்பீயன் நூலகம் (Ulpian Library) என்பதாகும். கி. பி. 300இல் ரோமாபுரியில் பொதுமக்களுக்கான நூல்நிலையங்கள் சுமார் 30 இருந்தன. இவை பெரும்பாலும் கோயில்களிலேயே இருந்து வந்தன. தனிப்பட்டவர்களும் பல நூல் நிலையங்கள் வைத்திருந்தனர். இந்த நூல் நிலையங்களிற் பல ரோமானிய சாம்ராச்சியத்தின் மீது படையெடுத்து வந்த நாகரிகமற்ற (Barbarian) மக்களால் அழிக்கப்பட்டன. மதவெறியர்களும் பலவற்றை அழித்தார்கள். ஆயினும் அறிஞர்கள் நாட்டை விட்டு ஓடியபோது பல அரிய நூல்களைக் கைக்கொண்டு போய்ப் பாதுகாத்தனர். ஐரோப்பாவில் ரோம சாம்ராச்சியம் அழிந்த பின்னர் துறவிகள் மட்டுமே கல்வியிலும் நூல்களிலும் அக்கறையுடையவராயிருந்தனர். பெனடிக்ட்டைன் துறவிகள் (Benedictine monks) கி. பி. 530இல் இத்தாலியில் மான்டி கிறிஸ்ட்டோ ஆபி (Monte Cristo Abbey) என்ற மாதா கோயிலில் முதல் மடநூல் நிலையத்தை நிறுவினர். பின்னர் ஒவ்வொரு மடத்திலும் நூல்நிலையம் அமைக்கப்பட்டது.

இங்கிலாந்தில் முதன்முதல் நூல்நிலையம் நிறுவியவர்களும் இத் துறவிகளே. இவர்கள் 596இல் காண்டம்பரி (Canterbury) என்ற ஊரில் நூல்நிலையத்தைக் கண்டனர். ஆக்ஸ்போர்டிலுள்ள புகழ்பெற்ற நூல் நிலையம் பிரான்சிஸ்கன் துறவிகளால் உண்டாக்கப்பட்டது. இந்தமட நூல்நிலையங்கள் சிறியனவேயாயினும் அரிய நூல்களைப் பாதுகாத் துத் தந்த பெருமையுடையன.

ஐரோப்பாவில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றிய பின்னர் ஐரோப் பிய நாடுகளில் அரசர்களும் மக்களும் பல நூல்நிலையங்களை நிறுவ லாயினர். அச்சுமுறை கண்டுபிடிக்கப்பட்டதும் நூல்நிலையங்கள் பெரு குவதற்குக் காரணமாயிற்று. ஆயினும் புதிய நூல்நிலைய முறை கடந்த நூற்றாண்டில் தான் வளர்ச்சி அடையத் தொடங்கியது. பாராளு மன்றத்தினால் 1850இல் ஏற்படுத்தப்பட்ட முதல் பொது நூல்நிலையச் சட்டத்தினால் பிரிட்டனில் நூல்நிலைய இயக்கம் உண்டாகியது. இதே காலத்தில் அமெரிக்காவிலும் நூல்நிலைய இயக்கம் தொடங்கியது. இவ்விரு நாடுகளிலும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நூல்நிலையக் காப்பாளருக்கான பயிற்சியைப் பல்கலைக்கழகங்கள் அளிக்கத்தொடங் கின.

பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலை நூல்நிலையம் உலகில் உயரியது. ஸ்லோன் என்பவருடைய நன்கொடையால் 1753ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. 32,00,000 அச்சுப் பிரதிகளும் 56000 கையெழுத்துப் பிரதி களும், ஆயிரக்கணக்கான நாள், வார, திங்களிதழ்களும் கொண்டது. இங்கிலாந்தில் வெளியிடப்படும் நூல்கள் ஒவ்வொன்றும் இந்நூல் நிலையத்திற்கு அனுப்பப்படவேண்டும். இந்நிலையத்திலுள்ள புத்தகப் பேழைகள் வரிசையாக நிறுத்தப்பட்டால் 55 மைல்கள் வரை நீண்டிருக் குமாம்.

இந்தியா சுதந்திரம் அடையுமுன் இந்திய மந்திரியின் அலுவலகம் இந்திய அலுவலகம் எனப்படும். அதிலுள்ள நூல்நிலையம் லண்டனில் அமைந்துள்ளது. இது கிழக்கிந்தியக் கம்பெனியாரிற் கீழ்க்கண்ட சில ரால் வளர்ச்சி பெற்றது திருவிதாங்கூரில் பிறந்து, இங்கிலாந்தில் கல்வி பயின்று கல்கத்தாவில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிழக் கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய ராபர்ட் ஆர்ம் (1728-1801) என்பவர் 51 அச்சிட்ட நூல்கள், தம்மால் தொகுக்கப்பட்ட 231 கை யெழுத்துப் பிரதிகள், பூகோளப் படங்கள் ஆகிய அரிய நூல்களை நன்கொடையாக அளித்தார்.

1782இல் தம் 17ஆம் வயதில் கிழக்கிந்தியக் கம்பெனி குமாஸ்தா வாக அமர்ந்து, பின்னர் வில்லியம் கோட்டைக் கல்லூரியில் வட மொழி இந்துமதச் சட்டப் போதகாசிரியரும் வடமொழி வல்லுனருமான முதல் ஆங்கிலேயர் ஹென்றிதாமஸ் கோல்புருக் தாம் தொகுத்த 2000 வடமொழிக் கையெழுத்துப் பிரதிகளை நூல் நிலையத்திற்கு அளித்தார்.

கர்னல் காலின்ஸ்மெக்கன்சி (1753-1821) மதுரையம்பதி அறிஞர் ஒத்துழைப்பால் சேகரித்த பண்டைய இந்தியாவைப் பற்றிய இலக்கியங்களை இந்திய அலுவலக நூல்நிலையத்திற்கு அளித்தார். இந்திய அலுவலக கூல்நிலையத்தில் 20000 கையெழுத்துப் பிரதிகளும் 230000 அச்சுப்பிரதிகளும் உள்ளன. உலகில் வேறெங்கும் பெறுதற்கரிய பல நாட்டு மொழிக் கையெழுத்துப் பிரதிகள் உள்ளன.

இங்கிலாந்தில் ஒவ்வொரு கௌன்டியிலும் ஒரு நூல்நிலையம் இருக்கிறது. 1602இல் நிறுவப்பெற்ற ஆக்ஸ்போர்டு பாட்லீயன் (Bodlean) நூல்நிலையம் இங்கிலாந்துப் பல்கலைக்கழக நூல்நிலையங்களுள் பெயர் போனது. பொதுமக்களுக்காகச் சிறியகிளை நூல்நிலையங்களும் இருக்கின்றன. நூல்நிலைய வசதியற்ற இடங்களுக்கு மோட்டார் வண்டிகளில் கொண்டு சென்று ஒரு வாரம் வரை வைத்துக்கொள்ள புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன. இலண்டனில் கட்புலனற்றவர்க்கென 1882ம் ஆண்டு ஒரு நூல்நிலையமும், 1920ஆம் ஆண்டு மான்செஸ்ட்டர் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாகச் செவிப்புலனற்றவர்க்கென ஒரு நூல்நிலையமும் நிறுவப்பட்டன. மருத்துவசாலையில் இருந்து சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கும், தாதியர்களுக்குமெனத் தனியே 1921இல் தாதியர் கல்லூரியில் ஒரு நூல்நிலையம் நிறுவப்பட்டது.

பிரான்ஸ் நாட்டு நூல்நிலையங்களில் மொத்தம் சுமார் மூன்று கோடி நூல்கள் உள்ளன என்று கணக்கிட்டுள்ளனர். சிறந்த உலக நூல்நிலையங்களுள் ஒன்றான பாரிஸ் 'பீப்ளியோத்தெக் நாசியானால்' (Bibliotheque Naticnale) நிலையத்தில் 4400,000க்கு மேற்பட்ட அச்சுப்பிரதிகளும் 122000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. கலை விஞ்ஞானத் துறைகளில் ஆராய்ச்சி செய்வோர் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இந்த நூல்நிலையத்துக்கு வந்து செல்கின்றனர்.

ஜெர்மனியில் லைப்சிக் என்னுமிடத்து நூல்நிலையத்தில் 1928இல் 675000 அச்சுப்பிரதிகள் இருந்தன. ஜெர்மனியின் மொத்த நூல்நிலையங்கள் 395இல் 410,00,000 பிரதிகள் இருந்தனவாகப் புள்ளி விபரம் அறிவிக்கிறது. பெர்லின் நகரிலுள்ள 268க்கு மேலான நூல் நிலையங்களில் மொத்தம் 50 இலட்சம் புத்தகங்களும் 56810 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

ரஷ்யாவில் உள்ள உலகிலேயே மிகப்பெரிய லெனின் கிராடு நகர நூல்நிலையத்தில் 4566,645 அச்சுப் பிரதிகளும் 240,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. மாஸ்கோவில் உள்ள லெனின் ஞாபகார்த்த நூல்நிலையம் ரஷ்யாவில் இரண்டாவது பெரிய நூல்நிலையம். இங்கு 120 இலட்சத்துக்கு மேலான நூல்கள் உள்ளன. மாஸ்கோ பல்கலைக்கழக நூல்நிலையத்தில் 3.10,000 புத்தகங்கள் உள்ளன. பொதுமக்களுக்காகவும் நூல்நிலையங்கள் உள்ளன. இத்தாலியில் வாட்டிக்கன்

நகரத்தில் (Vatican City) 1447இல் ரோமன் கத்தோலிக்கப் போப்பாண்டவர் ஒரு நூல்நிலையம் நிறுவினார். அது அரிய நூல்களின் கருவூலமாக இருந்து வருகிறது. அங்கே 31 ஆயிரம் பழைய லத்தீன் கையெழுத்தும் பிரதிகளும், 4 ஆயிரம் பழைய கையெழுத்துப் பிரதிகளும், 40 ஆயிரம் அச்சு நூல்களும் உள்ளன. பிளாரன்ஸ் (Florence) லாரென்ஷியன் நூல்நிலையத்தில் (Laurentian Library) கையெழுத்துப் பிரதிகள் மிகவும் அரியன. அதனால் அவை ஒவ்வொன்றும் படிக்கும் மேசையுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கின்றது.

சீனாவில் 1927இல் 503 நூல்நிலையங்கள் இருந்தன. அவற்றுள் பீக்கிங் (Pekink) நகர நூல்நிலையமே பெரிது. மாகாணத் தலைமை நூல்நிலையங்களும், பல்கலைக்கழக நூல்நிலையங்களும் உண்டு. சீன நாட்டு நூல்நிலையங்கள் பதினைந்து நூற்றாண்டுகளாகக் கையாண்ட புத்தகப் பாகுபாடு முறைகளை விடுத்து, இப்பொழுது 'டூயி' (Dewey) முறையையும் அமெரிக்க காங்கிரஸ் நூல்நிலையத் திட்டத்தையும் அனுசரிக்கின்றன.

நூல்நிலைய இயக்கத்தில் ஜப்பான் மிக முன்னேற்றம் பெற்றிருக்கிறது. டோக்கியோ நகர நூல்நிலையத்திலும், தீயடோ பல்கலைக்கழக நூல்நிலையத்திலும் முறையே 5,07,600 ; 6,50,000 நூல்கள் உள்ளன. ஜப்பானில் நகராட்சி நூல்நிலையங்கள் ஏராளமாக இருக்கின்றன.

அமெரிக்கா சிறந்த நூல்நிலைய இயக்க முன்னணி நாடு. நாட்டுச் செல்வர் நூல்நிலையங்களுக்கு நிதி அளிக்கின்றனர். அன்னாருள் சிறந்தவரான ஆண்டுரு கார்னெகி நூல்நிலைய ஆக்கத்திற்காக அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் 4,36,6500 டாலர்கள் நன்கொடை அளித்திருக்கிறார். நியூயார்க்குப் பொதுமக்கள் நூல்நிலையத்தில் 29,71,209 நூல்கள் இருக்கின்றன. பல்கலைக்கழக நூல்நிலையங்களுள் புகழ் பெற்றவை முறையே ஹார்வர்டு ( 26,22,400 ) யேல் ( 18,38,099 ), கொலம்பியா ( 1092,343 ) காலிபோர்னியா ( 665 680 ) சிக்காக்கோ ( 768 554 ) கார்னெல் ( 787,127 ) இல்லினாய்ஸ் ( 708850 ) மிக்சிகன் ( 649.912 ) மினரோட்டா ( 501,507 ) பென்சில்வேனியா ( 635 070 ) பிரின்ஸ்ட்டன் ( 594 195 ) ஆகும்.

1800ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 1897ஆம் ஆண்டு தற்போதைய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட அமெரிக்க காங்கிரஸ் நூல்நிலையம் தேசிய நூல்நிலையமாகப் பணியாற்றுகிறது. நூல்நிலையக் கட்டடம் மிகுந்த பரப்புடையதாய் அழகாகவும் பெரியதாகவும் உள்ளது. உலகில் சிறந்த மூன்றாவதாக எண்ணப்படும் இதில் 35, 56, 767 பிரதிகள் உள்ளன. இந்த நூல் நிலையத்தில் தான் உலகத்திலேயே ஆகாயவிமானத்துறை பற்றிய நூல்கள் மிகுதியாக உள்ளன. நாட்டிலுள்ள 700 நூல் நிலையங்களிலுள்ள நூல்களின் பட்டிச்சீட்டுக்களும் (Cards) இங்கு உள்ளன.

இங்குள்ள மொத்தச்சீட்டுக்கள் ஒருகோடி ஆகும். இப்பொழுது அமெரிக்காவில் 6000 பொதுமக்கள் நூல்நிலையங்கள் உள்ளன. நியூயார்க்கில் 1885இல் குழந்தைகளுக்கு நூல்நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. பொதுமக்கள் நூல்நிலையங்களிலும் குழந்தைகள் பகுதி காணப்படுகின்றது. மோட்டாரில் புத்தகங்கள் கொண்டு சென்று உட்பகுதியினருக்கு வழங்கும் ஏற்பாடு 1892இல் ஆரம்பமாயிற்று. நூல்நிலைய இயக்கம் பரவுவதற்கும் மக்கள் பயன்படுத்துவதற்கும் 1876இல் தோற்றுவிக்கப்பட்ட அமெரிக்க நூல்நிலையச்சங்கத்தில் 1927இல் 10000 அங்கத்தினர் இருந்தனர்.

இந்தியாவிலுள்ள நூல்நிலையங்களுள் கல்கத்தா தேசிய நூல்நிலையம் தலையாயது. அதில் 4,52,000 பிரதிகளும் கல்கத்தா வடமொழிக் கல்லூரியில் 1652 அச்சுப்பிரதிகளும் 4000 கையெழுத்துப் பிரதிகளும் 1784இல் நிறுவிய 'ஏஷ்யாட்டிக் சொசைட்டி' நிலையத்தில் 35000, 20,000 அச்சு, கையெழுத்துப் பிரதிகளும் 'புவியியல் சர்வே' நிலையத்தில் 50000 பிரதிகளும் உள்ளன.

பம்பாயில் 1804இல் நிறுவிய ஏஷ்யாடிக் சொசைட்டி கிளை நூல் நிலையத்தில் 100,000 அச்சுப்பிரதிகளும் 2000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. 1864இல் நிறுவப்பட்ட பம்பாய் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் 35000 அச்சிட்ட பிரதிகள் உள்ளன.

சென்னையில் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் அது நிறுவியுள்ள நூல்நிலையம் இருக்கின்றது. இதிலுள்ள நூல்களும் பத்திரிகைகளும் மொத்தம் 182000 ஆகக் காணப்படுகின்றது.

சென்னையில் 1847இல் நிறுவப்பட்ட 'அரசாங்க கீழ்த்திசைமொழிக் கையெழுத்துச் சுவடி நூல்நிலையம் முதலில் அரசாங்கப் பொருட்காட்சிச் சாலைக் கட்டடத்தில் இருந்து பின்னர் பல்கலைக்கழக நூல்நிலையக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலையத்துக் கையெழுத்துச் சுவடிகளுள் சில கூடுமான விளக்கங்களுடன் ஆண்டுதோறும் பதிப்பிக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன.

1896இல் தற்போதைய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட கன்னிமாரா நூல்நிலையத்தில் சுமார் 1,00,000 நூல்களும் சஞ்சிகைகளும் உள்ளன. 1930லிருந்து புத்தகம் வாங்க அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களுக்குப் புத்தகங்கள் கொடுத்துவாங்கப்படுகின்றன. கன்னிமாரா நூல்நிலையம் பொதுமக்கள் நூல்நிலையமாக்கப்பட்டு, இராச்சியப் பிரசுரங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

சென்னை அரசாங்கம் சென்னைப் பொதுநூல் நிலையங்களின் சட்டத்தை 1948இல் இயற்றி 1950இல் ஏப்ரல் மாதம் செயல்முறைக்குக் கொணர்ந்தது. இச்சட்டம் சென்னை நகரமும் மற்றைய மாவட்டங்க

ளும், நகராண்மைக் கழகங்கள், பஞ்சாயத்துக்கள் விதிக்கும் சொத்து வரியில் ரூபாய்க்கு 6 பை வீதம் நூல்நிலைய செஸ் வரியாக வசூலிக்க அதிகாரமளிக்கின்றது. சட்டப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் நூல்நிலையங்கள் நிறுவப்பெற்று, நூல்நிலைய டைரக்டர் ஒருவர் பொறுப்பில் இருக்கும். இப்போது இப்பொறுப்பேற்பவர் சென்னைக் கல்வி இலாக்கா டைரக்டர்.

இந்தியாவிலேயே முதலாவதான குழந்தை நூல்நிலையம் ஒன்று சென்னை கல்வி இலாக்கா டைரக்டர் அலுவலகக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தஞ்சையில் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய சரஸ்வதி மகால் நூல்நிலையம் தஞ்சை மன்னர்களால் வளர்க்கப்பட்டது. இதில் தேவநாகரி, நந்திநாகரி, தமிழ், காச்மீரம், ஒரியா ஆகிய பல மொழிகளில் 16000 கையெழுத்துப் பிரதிகளும் 8000 ஏட்டுப் பிரதிகளும் உள்ளன.

'சென்னை நூல்நிலையச்சங்கம்' சென்னையில் பல நாட்களாகத் தொண்டாற்றி வருகிறது. நூல்நிலையம் பற்றிய நூல்கள் பலவற்றை இச்சங்கம் வெளியிட்டிருக்கிறது. 1923இல் அகில இந்திய பொதுமக்கள் நூல்நிலையச் சங்கம் தோன்றி மாகாணச் சங்கங்கள் மூலம் நூல்நிலைய இயக்கத்தைப் பரப்புகிறது. ஆண்டு தோறும் மாநாடுகளும் கூட்டப்படுகின்றன.

**நன்றி — கலைக் களஞ்சியம்**

---

★ ★ ★

உண்மையில் நம்முடைய செயல் ஒவ்வொன்றிலும் மதம் இடம்பெற வேண்டும்.

ஒரே இலக்கில் வந்து சேர்கின்ற பல்வேறு சாலைகளே மதங்கள். கடவுளிடம் நம்பிக்கை என்பதுதான் எல்லா மதங்களுக்கும் கடைக்கால்.

ஒரு மனிதனை இன்னொருவனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்து வைப்பதுதான் அவற்றின் நோக்கம்.

— மகாத்மாகாந்தி

உ

# பொதுநூலகம் குறைபாடுகளும் தீர்வுகளும்

திருமதி இராஜேஸ்வரி கருணானந்தராஜா அவர்கள்
சிரேஷ்ட உதவி நூலகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

பல்வேறு சமூகசேவைகளில் பொது நூலக சேவையும் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித குலத்தால் சேகரிக்கப்பட்ட அறிவுச் சாதனங்களை எத்தகைய கட்டுப்பாடுகளோ, வேறுபாடுகளோ இன்றி மக்களுக்கு வழங்க வேண்டியதாக நூலகம் உள்ளது. அத்துடன்சமூகத்திற்கோ தனிநபருக்கோ எளிதில் கிடைக்கக்கூடியதான முறையில் நூல்களை ஒழுங்கமைத்து வைத்திருப்பதும் அவசியமாகின்றது. நூலகவியல் தொடர்பான சிந்தனைகள் மிகப் பழமையானவை. மனிதகுலம் அச்சுக் கலையை அறிந்துகொள்ளும் முன்னரே நூலகங்கள் தமது சேவையை ஆரம்பித்துவிட்டன என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. அரண்மனைகளிலும் கோவில்களிலும், மடாலயங்களிலும் நூலகங்கள் இயங்கி வந்துள்ளன. அன்று பொதுநூலகச் சிந்தனை உருவாகியிராமையால் புராதன நூலகங்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்தினருக்கே தம் சேவையை வழங்கி வந்துள்ளன. அரண்மனை நூலகங்கள் மன்னர் மந்திரிகளுக்கு மட்டும் பயன்பட்டன. குடிமக்கள் நூலகங்களை நாட அனுமதியளிக்கப்படவில்லை. மடாலயங்களிலும் கோவில்களிலும் காணப்பட்ட நூலகங்கள் ஆவணக் காப்பகங்களாகவும் மடாலயக் குருக்களுக்கு உதவும் வகையில் உசாத்துணை நூலகங்களாகவும் இயங்கி வந்துள்ளன. நூலகங்களின் பயன்பாடு உயர்குடியினருக்கு மட்டுமே என்ற கோட்பாடு காலக்கிரமத்தில் மாறுவதாயிற்று.

அச்சுக் கலையின் தோற்றம் காரணமாக ஏற்பட்ட புதிய மறுமலர்ச்சியினால் நூலகங்கள் அறிவைத்தேடும் மக்களுக்குப் பயனளிக்க வேண்டியன என்ற கருத்து உருவாகியது. இது காலக்கிரமத்தில் பொதுசன நூலக இயக்கம் உருவாகக் காரணமாயிற்று. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நகரை அண்டிய இடங்களிலேயே நூலகங்கள் அமைக்கப்பட்டு வந்துள்ளன. இலவசக் கல்வி வசதி வேண்டும் என்ற கோஷம் சர்வதேச ரீதியில் எழுப்பப்பட்டதையடுத்து நூலகசேவை பொதுநூலக சேவையாகப் படிப்படியாக மாற்றமடைந்து பின்னர் எழுத்தறிவுள்ளஎவர்க்கும் பயன்தரும்முறையில் நூலகசேவை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டது.

பொது நூலகம் என்ற கருத்து வலுவடைந்த போதும் கிராம மட்டத்தில் அதன் செல்வாக்கு 20ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியிலேயே பரவலாயிற்று. ஆயினும் இன்றுவரை பெரும்பாலான நூலகங்கள் நகரை அண்டியே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கிராமங்களில் காணப்படும் நூலகங்கள்கூட நகர நூலகங்களின் கிளை நூலகங்களாக காணப்படுகின்றனவே தவிர முழுமையான அவற்றின் எச்ச சொச்ச சாதனங்கள் கொண்ட நூலகங்களாகக் காணப்படவில்லை. இது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய குறைபாடாகும். காரணம் நூற்றாண்டின் அறிவு வேகத்திற்கு இத்தகைய சாதனங்களால் ஈடுகொடுக்க முடியாதிருப்பது பெரும் குறையாகும்.

இலவசமாக அல்லது மிகக் குறுகிய கட்டணத்துடன் ஒரு சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் மக்களுக்குச் சேவை செய்யும் நூலகங்கள் பொது நூலகங்கள் எனப்படும். இத்தகைய நூலகங்கள் பொதுமக்களுக்கு அல்லது சிறுவர்கள், நோயாளிகள், கைதிகள், தொழிலாளர்கள் போன்ற விசேட பிரிவுகளுக்கும் சேவை வழங்குகிறது. சுருங்கக்கூறின் பொது நூலகங்கள் சமூகத்திலுள்ள பொதுமக்களுக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட விசேட பிரிவினருக்குச் சேவைபுரிகின்றதெனலாம். நூலகமொன்றைப் பாவிப்பதற்கு அருகதையுள்ள சகலருக்கும் பொதுநூலகம் சேவை செய்கின்றது என்னும் இவ் அம்சம் ஒன்றே ஏனைய நூலகங்களிலிருந்து பொது நூலகத்தை வேறுபடுத்துகின்றது. தகவல், கல்வி, பொழுது போக்கு, விளையாட்டு, ஆத்மீக உணர்வு போன்ற பல்வேறு துறைகளிலும் தாராளமான விரிவான சேவையை அளிப்பதனாலும் பொதுநூலகம் ஏனைய நூலகங்களிலிருந்து வேறுபடுகின்றது. இன்றைய சமுதாயத்தில் தகவல் ஒரு தேசிய மூலமாகக் கொள்ளப்படுகிறது. இது மனிதனின் சகல நடவடிக்கைகளிலும் பங்கு கொள்கிறது. தகவல்கள் தவிர்க்கமுடியாதவை. சமூகத்தின்சேவைக்கும் இவை அத்தியாவசியமானவை. கட்டணங்களெதுவுமின்றி ஆவணங்களையும் தகவல்களையும் அளிப்பதன் மூலம் பொதுநூலகம் இன்றைய சமூகத்தின் நலனிற்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது. இதன்மூலம் பொதுநூலகம் இன்றைய சமூகத்தின் நலனிற்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது. இதன்மூலம் பொதுநூலகம் ஒரு சமூக உந்து சக்தியாக இன்றைய உலகில் மாறியுள்ளது. ஆகவே ஒரு சமூகம் தழுவிய நோக்கில் சகலரது அறிவுசார் தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டிய ஒரு நிலையில் பொதுசன நூலகங்கள் இருப்பதால் அவை வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களையும் ஒழுங்கமைப்பையும் நிர்வாகத்தையும் கொண்டு விளங்குதல் இன்றியமையாதது.

நூலகத்தின் முக்கியத்துவத்தை யுனஸ்கோ நூலகப்பிரிவின் முன்னைநாள் இயக்குனர் திரு. சி. சி. பொன் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். தேசிய பல்கலைக்கழக நூலகங்கள் ஒரு நாட்டின் புலமைக்கு அளவுகோல் ஆயின் பொதுநூலகங்கள் அதன் பொதுவான பண்பாட்டிற்கு அளவுகோல் என்றார். உலகில் காணப்படும் மக்கள் அனைவருக்கும் இன, மத, மொழி பிரதேச வேறுபாடுகளின்றி எல்லா வகைக் கல்வியையும் உச்ச நிலையில் வாழ் நாள் முழுவதும் அளிக்கவல்லன பொதுநூலகங்களே. மாணவர் மத்தியில் மறைமுகமாக ஒழுங்குகள், பழக்க வழக்கங்கள், வாசிப்புத் திறன்கள், சிந்தனை வெளிப்பாடுகள், தர்க்கிக்கும் திறன் போன்றவற்றை வரிவடையச் செய்யவல்லனவும் அவையே. நல்ல கருத்துக்களையும் அறிவுரைகளையும் பெரியார்களின் பேச்சுக்களிலிருந்து பெறப்பட்ட அரிய பெரிய கருத்துக்களையும் தொகுத்து வைத்திருக்கும் நூற்களஞ்சியமான பொது நூலகம் அறிவு வளர்ச்சியையும் நாட்டுக்கேற்ற சுயாதீனமான கல்விக்கொள்கைகளையும் அடித்தளமாகக் கொண்டு வளர்ச்சியடையும் நாடுகளில் யாவர்க்கும்கைகொடுக்கும் நல்லதொரு நிறுவனமாக அமைந்துள்ளன.

பொதுநூலகங்கள் கல்வி ரீதியாகவும், சமூகவியலின் அடிப்படைகளின் ஊடாகவும் மக்களது கலாசாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் நேரடியாகவும் நெருக்கமாகவும் தொடர்புபட்டுள்ளன. பல்வேறு தரப்பட்ட சமூகத்தினரின் வாழ்க்கையில் அறிவாற்றலைப் பரிமாறிக் கொள்ளும் முக்கிய அம்சம் என்ற நிலையில் நாளாந்தம் பொதுசன உணர்வுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் சிறந்த பங்காளியாகவும் இயங்குகிறது. இதனாலேயே கலாநிதி எஸ். ஆர். இரங்கநாதன் நூலகங்களை வெறுமனே சேகரிப்பு மையங்கள் அல்ல. அவை பரந்த துறைகளான கல்வி, கலாசாரங்கட்கு அறிவியல் என்னும் நீரினைப் பாய்ச்சும் நீரூற்றுக்களாக அமைகின்றன எனக்குறிப்பிட்டார். பொதுவாக தனக்கென சில கட்டுக்கோப்பான பண்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நிறுவனம் தனது இலட்சியங்களை நிறைவேற்றும் சக்தியையும் கொண்டிருக்கும். அந்த வகையில் பொதுநூலகம் அறிவு ஆற்

றல், மனப்பாங்கு, திறன் எனப் பல்வேறு தன்மைகொண்ட மனித சமூகத்தின் தேவைகள் அனைத்தையும் ஏதோ ஒரு வகையில் நிறைவு செய்யுமிடமாக அமைகிறது.

உலக சனத்தொகையில் மூன்றில் இரு பங்கு கிராமங்களிலேயே உள்ளன. நகரங்கள்கூட உணவு முதலிய அத்தியாவசிய தேவைக்கு கிராமங்களில் தங்கி உள்ளன. ஆரம்பகாலங்களில் காணப்பட்ட எழுத்தறிவின்மை வீதாசாரம் இன்று கிராமங்களில் குறைந்து காணப்படுகிறது, முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி என்பன இன்று விருத்தி பெற்றுக் காணப்படுவதால் பொது நூலகங்களின் பங்கும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் இன்றியமையாதுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக கிராமப்புற மக்களுக்கு தகவல்களைத்தேடும் ஆர்வமும் வளர்ந்து வருகிறது.

வானொலி தொலைத்தொடர்பு சாதனங்களின் ஊடுருவல் காரணமாக கிராமங்களில் மக்கள் தம் அறிவை மேலும் விருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டு வருகிறது. தொலைக்காட்சியில் தாம் காணும் ஒரு காட்சியுடன் அது தொடர்பான மேலதிக தகவல்களை அவர்கள் நாடுகின்றனர். அத்தகவல்களை இலகுவில் பெற நூலகங்களை நாடவேண்டிய தேவை அவர்களுக்கு இயல்பாகவே ஏற்படுகின்றது. கிராமங்களிலிருந்து தொழில் வாய்ப்புக்களுக்காக அயல்நாடு செல்பவர்களின் எண்ணிக்கையும் இன்று அதிகரித்துச் செல்கின்றது. தனது மகன் சென்ற நாட்டைப் பற்றிய தகவல்களைப் பெற ஒரு அன்னை முயல்வது இயல்பு. வெளிநாடு சென்றவர்கள் நாள்தோறும் எழுதும் கடிதங்களில் பல புதுத்தகவல்கள் புதைந்து கிடக்கும். இவற்றை விளங்கிக் கொள்ளும் ஆர்வத்திலும் மக்கள் பொது நூலகத்தை நாடிச் செல்கிறார்கள்.

அரசின் அபிவிருத்தித்திட்டங்கள் கூட இன்று கிராமிய மட்டத்தில் செயற்படுவதாக உள்ளது. விவசாயம், கைத்தொழில் கிராமிய தொழில்நுட்பம் போன்ற துறைகளில் புதுப்புது தகவல்கள் தேடப்படுகின்றன. இந்நிலை காரணமாக பொதுநூலக சேவை கிராமமட்டங்களில் கூடுதலாக உணரப்பட்டு வருகின்றது. இத்தகைய மாற்றத்தை உணர்ந்து புதிய தகவல்களை கொண்ட நூல்களைச் சேகரிக்கும் பணியில் நூலகம் ஈடுபடவேண்டும். அத்துடன் நூலகத்தின் அமைவிடம் சகலரும் அணுகக் கூடியதாய் அமைதல் வேண்டும், காற்றோட்டமுள்ளதாகவும் நகரங்களின், கிராமங்களின் மத்தியில் இடம் அமைந்ததாகவும் இருத்தல் வேண்டும். நூற்கொள்வனவு கிராம நூலகங்களை பொறுத்தவரை தாய் நூலகமான பொது நூலகத்தினாலேயே செய்யப்படுகின்றது. அவர்கள் கொள்வனவு செய்யும் நூற்தொகுயின் ஒரு பகுதியே கிராம நூலகங்கட்கு கிடைக்கின்றன. இவை கிராமத்தின் வரலாறு கலாசார பின்னணி, புவியியல் காரணிகள், மக்கள் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட சாதனங்களாக இருக்க முடியாது. இவை வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாய் அமையமுடியாது. இந்நிலை மாறவேண்டும். சுயமாக நூற்கொள்வனவு மேற்கொள்வதற்கேற்ற நிதிவசதிகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அன்றேல் நூலகம் தானமைந்த கிராமத்தின், நகரத்தின் தேவை, அத்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நூலகத்தின் சேவை பற்றிய உணர்வும் நம்பிக்கையும் கொண்ட அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பைத் தேடிக் கொள்ள வேண்டும். இப்பின்னணியில் கொள்வனவு செய்யப்படும் சாதனங்களே கிராமத்தின் தகவல் தேவையை இலகுவில் பூர்த்தி செய்வனவாயமையலாம்.

பொது நூலகங்கள் கிராமத்தின் தகவல் நிலையமாகவும் அறிவு சாதனங்களின் களஞ்சியமாகவும் செயற்படும் ஒரு அமைப்பாகும். இங்கு நூல்களும் ஏனைய அறிவுச் சாதனங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டு வைக்கப்பட்டிருத்தல் அவசியம். தேவையைக் கருதி அச்சாதனங்களிலிருந்து இலகுவான முறையில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கேற்ப ஒரு பகுப்புமுறையினை அடிப்

படையாகக் கொண்டு அவை வகைப்படுத்தப்பட வேண்டும். தகவலை நாடிவரும் வாசகர் இலகுவானமுறையில் தகவலைப் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட வேண்டும்.

ஒரு கிராம மட்டத்திலான பொது நூலகத்தை நிர்வகிக்கவும் தேவைப்படும் தகவல்களை தன் சேகரிப்பிலிருந்து தேடி எடுத்துக் கொடுக்கவும் இல்லாத தகவல்களைப் பெற்றுக்கொள்ள வாசகர்களுக்கு வழிகாட்டவும் பயிற்றப்பட்ட ஊழியர்கள் இருந்தாலும் கூடவே சிறந்த நூற்சேர்க்கை அவசியம்.

பொது நூலகங்களில் குறிப்பாக கிராமிய மட்டங்களில் நூற்தேர்வு செய்யும் போது உதவும் நூல் விபரப்பட்டியல்கள் வழிகாட்டி நூல்கள் போன்றவை அந்நூலகங்களில் கிடைக்காது போகலாம். நூலகர் கடினமுயற்சியில் ஈடுபட்டு ஏனைய நூலகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி தேவைப்படும் தகவல்களைப்பெற்று அதன் உதவியுடன் நூல்தேர்வு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். கிராமிய வாசகரின் நூற்தேர்வில் முதல்நிலை வசிப்பது ஜனரஞ்சக நூல்களாகும். இவை ஒரு சில அசாதாரண வாசகர்களை திருப்திப்படுத்தத் தவறிவிடுகின்றன. நகர நூலகத்துடன் ஒப்பிடும் போது கிராம நூலகரின் நூலக அறிவு குறைவாகவே காணப்படும் சாத்தியமுள்ளது. விசேட நூலகர்களது தொடர் சேவையைப் பெறும் சக்தி கிராமங்களிலுள்ள பொது நூலகங்கட்குக் கிடைப்பது அரிது. கிராம நூலகரின் சேவைப்பரப்பின் விகிதமும் குறைவாயிருப்பதால் இக்கிராம நூலகம் குறுகிய வட்டத்துள் இயங்க வேண்டிய கட்டாயமுண்டு. இந்நிலை முற்றாக மாறவேண்டும்.

கிராமங்களில் உள்ள பொது நூலகங்கள் நகரில் உள்ள பொது நூலகத்திற்கோ, பாடசாலை நூலகத்திற்கோ போட்டியாக நிர்வகிக்கப்பட வேண்டியதன்று. கிராம மக்களை அறிவாளிகளாக்குவதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொள்வதே இந் நூலகத்தின் அடிப்படை நோக்கம். கிராமத்திலுள்ள ஒரு குடிமகனைத் தட்டியெழுப்பி அவனுக்கு அறிவின் பால் நாட்டத்தை உண்டாக்கி அதைத்தேடிச் செல்லும் ஆர்வத்தை ஏற்படுத்துவதே ஒரு கிராம நூலகத்தின் கடமையாகும்.

கிராம நூலகங்களில் விசேட நூலகர்களின் சேவை பெறுவது கடினம். பகுப்பாக்கம் பட்டியலாக்கம் போன்ற விஞ்ஞான ரீதியிலான வேலைகளை பயிற்சி பெற்ற நூலகர்களாலேயே செய்யமுடியும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொது நூலக சேவை வித்தியாசமான பரிமாணத்தினைப் பெற்றுள்ளதைக் காணலாம். பொது நூலகங்கள் வெறும் பொழுது போக்கு மையங்களாக மட்டுமிராது கலாசார நிலையங்களாகவும் தகவல் மையங்களாகவும் மாறிவர வேண்டும். அரசின் அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பான மக்கள் தொடர்பகமாக பொது நூலகங்கள் கிராம மட்டத்திலும் இயங்கவேண்டும். நூலக சேவை ஒரு கிராமத்தின் இதயமாக தொழிற்படுவதை பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணமுடிகிறது.

பொது நூலகங்களில் சிறுவர்க்கான பிரிவும் அமைதல் வேண்டும். சிறுவர் நூலகங்களின் அடிப்படை நோக்கம் நல்ல வாசகர்களை உருவாக்கலும் அதற்கான வழிகாட்டலும் ஆகும். நல்ல நூல்களைக் கொள்வனவு செய்து வழங்கி அவர்களுக்கு வாசிப்பின்பால் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தி விட்டால் சிறுவர்கள் தமக்கு தேவையானதைப் பெற்றுக்கொள்வர். குழந்தைகளின் வாசிப்பினை நெறிப்படுத்தலில் நூலகர் கவனம் செலுத்த வேண்டும். பருவத்தை இனங்கண்டு அதற்கேற்ற நூல்களை வழங்க வேண்டும். ஒருவருக்குச் சிறுவயதில் நூலகங்களின்பால் ஏற்படும் ஈடுபாடு அவருக்கு வாழ்நாள் முழுவதும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும்.

கிராமங்களில் இயற்கையெய்தியவர்களின் பெயரால் வெளியிடப்படும் மலர்கள் சேகரிக்கப்பட்டு அவர்களது பெயர் அகர வரிசை ஒழுங்கில் அடுக்கி வைக்கலாம்.

கிராமம் பற்றி அல்லது கிராமத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றி வெளிவரும் புதினப் பத்திரிகைச் செய்திகளை கத்தரித்துத் தனியாக ஒரு பதிவேட்டில் ஒட்டிச் சேகரித்துப் பேணலாம். இத்தகைய பத்திரிகைச் செய்திகள் எப்போ எந்தப் பத்திரிகையில், எந்தப் பக்கத்தில் வெளிவந்தது என்பதற்கான குறிப்பும் காணப்படுவது அவசியம்.

சனசமூக நிலையங்களின் உதவியுடன் பாலகர்களுக்கான கதைநேரம் ஒன்றை நூலகத்தில் விடுமுறை நாட்களில் நடத்தலாம். கிராமத்து இளைஞர்களின் உதவியுடன் இக் கதை நேரத்தை ஒழுங்கு செய்வதன்மூலம் சிறுவர்களையும் நூல்களையும் இணைத்து வைக்கலாம். வாசகர் வட்டம் போன்ற அமைப்புக்களை நூலக அங்கத்தவர்களிடையே ஏற்படுத்திப் பழைய புதிய நூல்கள் தொடர்பான விமர்சன கருத்தரங்குகளை நடத்தலாம். கிராமத்திலுள்ள படித்த வாலிபர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் போன்றோரின் உதவிகளை இதற்கெனப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே நூலகத்தின் தரம் அதன் அழகான கலையம்சம்மிக்க கட்டிட அமைப்பிலும் கவர்ச்சிகரமான தளபாடங்களின் வடிவமைப்பிலும் மட்டும் தங்கியிருப்பதில்லை. தன்னை நாடிவரும் வாசகருக்கு வழங்கக் கூடிய நூல்களின் தரத்திலேயே நூலகத்தின் தரம் தங்கியுள்ளது, மேலும் ஒரு நூலகத்தில் எத்தனை நூல்கள், சஞ்சிகைகள் உள்ளன என்பது முக்கியமல்ல. அவை எத்தனை வாசகர்களின் தகவல் தேவையைப்பூர்த்தி செய்கின்றன என்பது தான் முக்கியம். நூல்களின் எண்ணிக்கை அதிகரிப்பை மட்டும் கருத்தில் கொள்ளாது பொதுமக்களுக்கு உரிய சேவையினை சிறப்பாக வழங்குவதையே நூலகம் கருத்தில் கொள்ள வேண்டும்.

---

★ ★ ★

மதத்துக்கும் அரசியலுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று கூறுவோருக்கு மதத்தின் பொருள் விளங்கவில்லை என்று சிறிதும் தயக்கமின்றி, ஆனால் மிகுந்த பணிவுடன் நான் சொல்வேன்.

பாவங்கள் எல்லாம் ரகசியமாகச் செய்யப்படுகின்றன. தம்முடைய எண்ணங்களைக் கூடக் கடவுள் அறிவார் என்பதை நாம் உணர்ந்து விட்டால் அந்த விநாடி முதல் நமக்கு விடுதலைதான்.

— மகாத்மாகாந்தி

உ

# தீட்சண்யங்களின் திறவுகோல் நூலகம்

**திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

''எங்கு மனம் அச்சமற்றிருக்கிறதோ,
எங்கு தலை நிமிர்ந்தே உள்ளதோ,
எங்கு அறிவுக்குத் தடை இல்லையோ,
எங்கு குறுகிய சுவர்களால் உலகம் துண்டாடப் பட வில்லையோ,
எங்கு சத்தியத்தின் ஆழத்திலிருந்து சொற்கள்
ஊற்றெடுக்கின்றனவோ,
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கித் தன் கைகளை
நீட்டுகிறதோ,
எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை, உயிரற்ற
பாரம்பரியம் என்ற பாலை மணலுள் வழிதவறிப் போக
வில்லையோ,
அந்த விடுதலைச் சுவர்க்கத்துள் என் இறைவனே
நான் விழிப்படைவேனாக''

என்பது தாகூரின் கவிதை ஒன்றின் மொழி பெயர்ப்பு.

எப்போது மனம் அச்சமற்றிருக்கும்? எப்போது தலை நிமிரும்? அறிவுக்கான தடை எப்படி நீங்கும்? இந்த வினாக்களுக் கெல்லாம் ''நூலகம்'' என்ற சொல்லுக் குள்ளே பதில்கள் உள்ளன.

''ஒரு சமுதாயத்தை அடிமைப்படுத்த வேண்டுமெனில் அதன் கல்வியைக் கட்டுப் படுத்த வேண்டும்'' என்பது தென்னாபிரிக் காவின் இனவெறிப் பிரதமராக இருந்த வேர்வூட்டின் கருத்து. மறுதலையாக ஒரு சமூகம் விடுதலை பெறுதலிலே உண்மை யான கல்வியை வழங்கும் நூலகங்கள் பாரிய பங்கைச் செய்யும்.

கல்வி என்பதுதான் என்ன? தீட்சண் யங்களின் திறவுகோலாக, மூன்றாவது கண்ணை முளைக்கச் செய்வது கல்வி. கட் டுக் கடங்காமல் காலடியில் நழுவுகிற காலத்தைக் கைக்குள் வசமாக்கும் மந்திரம் கல்வி. பாரம்பரியக் கூறுகளில் பதுங்கி யிருக்கும் ஜீன்களில் பக்குவமாய் ஒரு பரி ணாம சிகிச்சையைச் செய்து விடுவது கல்வி. வாழ்வுப் போரைச் சந்திப்பதற் கான அந்தச் சூட்சும ஆயுதத் தயாரிப்பு, காகிதப் பட்டறைகளில் தான் நிகழ வேண் டும். அந்தரங்க ஆழங்களில் புதைந்து கிடக்கும் அலாவுதீன் தீபத்தைத் தரிசிப் பதற்கான தேடல், நூல்கள் என்னும் ஆயிரக்கணக்கான அகல் விளக்குகளோடு தான் ஆரம்பமாக வேண்டும். ஞான விருட்சங்களைத் தேடும் யாத்திரை நூலகம் என்ற காட்டுக்குள் தான் சாத்தியப்படும்.

அதனால் தான், பாடசாலையில் மட் டும் படிப்பிக்கப்பட்ட பிள்ளை, படிக்காத பிள்ளை என்று அமெரிக்கத் தத்துவஞானி ஜோர்ஜ் சந்தாயன அவர்கள் கூறினார்.

நூல்கள் வாசிக்காதோருக்கு, வாழ்வு என்பது அந்நிய மொழி போலவே இருக்

கும். அவர்கள் வாழ்வைப் பிழை பிழையாகவே உச்சரிப்பர். ஆகவே நூலகத்திற்கு வருதல் ஒரு தொடக்கம், நூலகத்தோடு வாழ்தல், வாழ்வின் வெற்றி !

அறிவு, விழுமியங்கள், திறன்கள் ஆகியவற்றை ஒழுங்கு முறையில் பெறுதல் என்ற அர்த்தத்தில் தொடங்கிய கல்வியின் வரலாறு இருபதாம் நூற்றாண்டுகளை கொண்டது. அந்த இருபது நூற்றாண்டுகளிலும் மனிதன் தேடிப்பெற்ற அறிவுச் சுரங்கம் நூலகத்தில் அடைபட்டுக் கிடக்கிறது. ஆகவே நூலகத்தின் தோளில் ஏறி நின்று பார்த்தால் தான் நாம் அதிக தூரம் பார்க்க முடியும் இல்லாவிடில் எமது பார்வை "குறும் பார்வை" ஆகிவிடும்.

மன்னுயிர்க்குப் புவியினிலே பசி என்றாகும்
மானிடர்க்கோ என்றென்றும் பசி இரண்டாம்
துன்னுமுயர் கல்வியினைப் பெறுவோமென்று
துடிககின்ற அறிவென்னும் பசியதாகும்.

என்பார் புலவர். ம. பார்வதிநாதசிவம் அவர்கள். மனிதர்கள் எல்லோரும் கற்க விரும்புகிறார்கள். கற்றல் மகிழ்வானது. வாசிக்கும் போது மூளையின் மகிழ்வு மையங்கள் தூண்டப்படுகின்றன என்றும், ,எண்டோபின்' போன்ற நரம்பிணைப்புச் சுரப்பிகளால் ஆனந்த உணர்வு ஏற்படுத்தப்படுகின்றது என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அதே மயத்தில் கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு என்பதை எமக்கு உணர்த்துவதற்காகக் கல்வியின் செல்வி சரஸ்வதியே கையில் ஏட்டுடன் காணப்படுகிறாள். உலகின் உன்னத விஞ்ஞானிகளில் ஒருவரான ஐன்ஸ்டீன் சொன்னார், "99% மான நேரங்களில் எனது முடிவுகள் பிழையாகவே உள்ளன" என்று. அப்படியாயின் எம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் சரியான முடிவுகளைச் செய்ய எத்தனை நூல்களைப் படிக்க வேண்டும் ?

பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற அறிஞர் தன்னைத் தானே சுய பரிசோதனை செய்த போது தன்னிடத்தில் உள்ள பதின்மூன்று குறைகளில் முக்கியமானது நேர விரயம் செய்தல் என்று கண்டு கொண்டார். இந்தக் குறை எம்மில் பலரிடத்தும் கூட உள்ளது. இக்குறையை, நேராக்கும் முயற்சியில் நல்ல நூல்களை வாசித்தல் பெரிதும் உதவும்.

திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம், மருவு பல் கலையின் சோதி வல்லமை என்பனவெல்லாம் வருவது ஞானத்தாலே என்று பாரதி கூற

"நவில் தொறும் நூனயம் போலும் பயில் தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்றான் வள்ளுவன். நூல்கள் தருகின்ற அதே நன்மையைப் பண்புடையாளர் தொடர்பும் தருமாயினும் பண்புடை மனிதரை நாம் விரும்பும் இடங்களில் பிணித்து வைக்க முடியாது. அவர்கள் எமக்காக நேரம் ஒதுக்க முடியாது போகலாம். ஆனால் நூல்கள் எமக்காக நூலகங்களிலே காத்திருக்கின்றன.

உள ஆரோக்கியமுள்ள மனிதர்களுக்கு வினைத்திறனுள்ள ஒரு மனச்சாட்சி இருக்கும் என்றும் தம்மைத் தாமே ஆளத்தக்க இயல்பு இருக்கும் என்றும் உளவியல் அறிஞர் கூறுவர். இவ்வியல்புகள் சிறப்பான நூல்களின் பரிச்சயத்தினால் வரும் 'றஸ்கின்' என்ற அறிஞர் கூறுவது போல, முன்னர் நடந்து கொள்ளாத ஒரு முறையில் நடப்பதற்கும் நூல்கள் உதவும். ஒருவரது சுய கணிப்பை உயர்த்துவதிலும் நூல்களுக்குப் பங்கு உண்டு.

நூல்கள் சுதந்திரச் சுரங்கத்தின் திறவுகோல்கள்
நூல்கள் நிறைவு நிலயங்களின் வாயில்கள்
நூல்கள் மேலே செல்லும் மேன்மையான பாதைகள்
நூல்களே நண்பர்கள் கூட இருப்போம் வாருங்கள்

என்பது எமிலி போல்சனின் கவிதை.

கல்வி என்பது சந்திரோதயம் போல மெதுவானது. அது நடைபெறும் பொழுது தெரிவதில்லை. விளைவைப் பார்க்கும் போதுதான் விஷயம் புரியும். அதே போல ஒருவர் நூல்களை வாசிக்கும் போது அவரிடத்தில் ஏற்படும் மாற்றத்தை அவதானிக்க முடியாது. ஆனால் காலப் போக்கில் அவரது நடத்தையில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாத தாகிவிடும்.

ஆகவே நூலகம் என்பது வழி தெரியாத ஓடங்களின் கலங்கரை விளக்கம். மனிதனின் ஆழ் மனக் குகைகளில் ஆங்காங்கே தெரியும் பொறிகளை வெளிச்சமாக்குவது நூலகம். தூசு படிந்த மனக் கண்ணாடியை தூய அறிவு கொண்டு துடைப்பது நூலகம். அறிவுப் புள்ளிகளை இணைத்து அழகிய கோலம் போடுவது நூலகம்.

நல்ல நூலகம் ஒன்று சிறந்த நூல்களைக் கொண்டிருக்க வேண்டும். சிறந்த நூல்கள் வேல் போன்றவை. வேல்முனை போலக் கூர்மையாக விடயங்களை அவதானித்து, வேலின் நடுப்பகுதிபோலப் பரந்து விரிந்த அனுபவங்களைக் கொண்டு, வேலில் கம்பு போலக் கருத்தில் நீண்ட விடயங்களை வைத்து எழுதப்பட்டவை அவை.

நூல்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம் என்பது அறிஞர் கருத்து.

1. தேங்காய் நூல்கள்-மிகக் கஷ்டப்பட்டு உடைத்தால், உள்ளே சிறிதளவு பயனுள்ள பூ வரும்.
2. கரும்பு நூல்கள் - சிறிய கஷ்டத்தோடு சாறு வரும். ஆயினும் விடச் சக்கை அதிகம்.
3. வாழைப்பழ நூல் - தோலை நீக்கினால் சரி - முழுவதும் பயன்.
4. திராட்சை நூல் - பயனற்ற பகுதி உண்டாயினும் மிகக் குறைவு.
5. பால் நூல் - முழுவதுமே பயன்தான் அப்படியே பருகலாம் பருக வேண்டும். நிறை உணவு.

மகிழ்வு நிறைந்த ஆரோக்கியமான உள்ளங்களால் மகிழ்வு நிறைந்த உன்னதமான கணப் பொழுதுகளில் எழுதப்பட்டவையே பால் நூல்கள்.

"சிறந்த நூல்கள் மக்களின் இதயத்தை மேம்படுத்தவும் தூய்மையாக்கவும் பயன்படவேண்டும். மனித சமுதாயத்தின் மீது அன்பை விதைக்க வேண்டும். மனிதத்துவத்திற்கும், மனித முன்னேற்றத்துக்குமாக வினைத்திறனுடன் போராடும் ஆசையை ஏற்படுத்த வேண்டும்" என்று கூறுவார் மிக்கேல் ஹெறாலகோவ்.

இத்தகு பண்புகளைக் கொண்ட நல்ல நூல்களோடு ஒரு ஆய்வு நூலகத்தை ஆரம்பிக்கிறார் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள். பாடசாலைகளில் சிறுசிறு நூலகங்கள் அமைப்பதே பெரிய பாடமேம் பாட்டுத்திட்டம் என்று கல்வி அமைச்சு கூறுகிறது. இது பெரிய நூலகம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பதை உணர்ந்து தங்கத் தலைவி இப் பிறந்த நாட் பரிசை எமக்குத் தருகிறார். ரோம சாம்ராஜ்யம் ஒரு நாளில் கட்டி எழுப்பப்பட்டதல்ல என்று அம்மாவுக்குத் தெரியும். அதனால் ஒரு நீண்டகால இலக்கை வைத்து அவர் படிப்படியாகப் பல விஷயங்களைச் செய்து வருகிறார். ஒருவருடைய சால்பு என்பது, அவர் வாழ்வு பற்றிக்கொண்டிருக்கும் நோக்கையும், சமூகத்திற்குப் பயன்படுமாற்றையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படவேண்டும் என்ற வகையில், துர்க்கா துரந்தரி அவர்களின் சால்பு உச்சாணிக் கொப்பை அடைந்து நிற்பதை எவரும் எளிதில் கண்டு கொள்ளலாம்.

இந்த நூலகத்தை நல்ல முறையில் பயன் படுத்தவாவது எமக்குத் தெரிந்திருக்க வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள் "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்ற வள்ளுவர் வாக்கை மனதில் கொண்டு வாழ்வு நீடித்த கல்வியைப் பெற இதனைப் பயன்படுத்த வேண்டும். தொடர்ந்து படிப்பது, தொடக்க காலக் கற்றல் அநுபவத்

தில் தங்கி உள்ளது என்பதை மனதில் இருத்தி மாணவரை உரிய முறையில் வழிப் படுத்த வேண்டும்.

புதிய புதிதாக விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியாதபடி எந்தக் காலத்திலும் என் வயது அதிகமாகி விடவில்லை என்று மகாத்மா கூறியிருப்பதை மாணவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

தேசிய ஐக்கியம், சமூகநீதி, நிலை பேண்தகு வாழ்வுக்கோலம், வேலைவாய்ப்பு அபிவிருத்தி சமூகத்தில் துடிப்பான பங் கேற்பு சவால்களுக்கு முகம் கொடுத்தல், சிக்கலான சந்தர்ப்பங்களுக்கு முகம்கொடுத் தல், உலகில் கௌரவமான இடம்பெறுதல் ஆகிய தேசிய கல்வி இலக்குகள் யாவுமே, சிறந்த நூல்களைத் தொடர்ந்து வாசிப்ப தால் சித்திக்கும் என்பதைப்புரிந்துகொள்ள வேண்டும், நன்னூலார் பேசுகின்ற நல்லா சிரியர் இலக்கணங்களான கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை, மலைபோன்ற அறிவு ஆகியவைநல்ல நூலகத்தைப் பாவிக் கப் பாவிக்க வரும் என்று நம்பவேண்டும்.

மக்களின் வாழ்வைக் காக்கவும் வளப் படுத்தவும் எத்தனையோ வாய்ப்புகள் இருந்தும், நடைமுறையில் எதையும் செய்ய அக்கறை காட்டாத நிலையில் சர்வதேச சமுதாயம் 21ஆம் நூற்றாண்டை அணுகி யுள்ள நேரத்தில் நாம் எமது மாணவருக் காக ஒருபிரதிக்ஞை எடுத்துக்கொள்ளலாம்.

''எமது மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகள் உள்ளார்ந்த சக்தி என்பவற்றை முழுமையாக வெளிக்கொணர்ந்து அவர்க ளைச்சுயதிறன் நிறைவுபெற்ற மனிதராக்கு வதற்காக எமது மணித்தியாலங்கள் பல வற்றை நல்ல நூலகங்களில் செலவு செய் வோம்'' என்பதே அப்பிரதிக்ஞை ஆகும்.

எமது பிரதேசத்தின் அன்னையர் இந்த நூலகம் 'அம்மா எமக்குத் தந்த சிறந்த வெகுமதி' எனக் கொள்ளலாம், ''வெகு மதிகள் எல்லாவற்றிலும் சிறந்த வெகுமதி அறிவைத் தருதல்'' என்று சுவாமி சிவா னந்தர் கூறினார். பெண்களில்மனச்சோர்வு நோய் அதிகமாக ஏற்படுவதற்கு, அவர்க ளின் கல்வி அறிவுக்குறைவு ஒரு முக்கிய காரணம் என உளவியல் ஆய்வுகள் தெரி விக்கின்றன. கடவுள் நம்பிக்கை உள்ள குடும்பங்கள் சான்றோர் உறவு நெருக்க மாக உள்ள குடும்பங்கள், பதற்றமடை யாத குடும்பங்கள் ஆகியவற்றில் வளரும் பிள்ளைகள் சிறந்த ஆளுமையுடன் வருவர். இத்தகைய குடும்பச் சூழலைக் கொடுப்ப தற்குப் பெண்கள் நல்லறிவு பெற்றிருக்க வேண்டும். நூலகத்தை நல்ல முறையில் பயன்படுத்தித் தமது சுயகணிப்பு சமூகத் தால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை, சாத னைகள் ஆகியவற்றை இப்பிரதேசப்பெண் கள் உயர்த்திக்கொள்ள வேண்டும்.

பாரதிதாசன் கனவுகண்ட ''கோட் டைப்பவுன் உருக்கிச்செய்த குத்துவிளக்கி னைப் போன்ற குழந்தைகளின்'' எதிர்கா லம் ஆசிரியரின் கையிலும் அன்னையரின் கையிலுமே இருப்பதால், இந்த இருதரப் பினரும் இந்த நூலகத்தை உச்சஎல்லைக் குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், யாழ்ப்பாணச் சமுதாய முன்னேற்றம் என்ற அந்த ஆயிரம் மைல் பயணம் இந்த நூல கம் என்ற ஒரு அடியுடன் ஆரம்பிக்கட்டும்.

கொந்தளிக்கும் உணர்வுகளை நல்ல முறையில் கையாளுதலில் நல்லநூல் வாசிப் புக்கு ஒரு இடம் உண்டு. கோபத்தைக் கையாளும் முதலுதவி நடவடிக்கைகளில் ஒன்றாகச் சமய நூல்களைப் படிக்குமாறு சீர்மிய உளவியல் எடுத்துக்கூறும். இழப்பு கவலை ஆகியவற்றை எதிர் கொள்ளலி லும், நூல்கள் பலருக்கு உதவியுள்ளன. ஒருவரது மரணப்படுக்கையில் கூட, நல்ல நூல்களை அவர் கேட்கும்படி வாசித்தல், அவர் அமைதியான மரணத்தைத் தழுவ உதவும் என்பது அறிஞர் கருத்து.

ஆகவே இத்தகையதொரு நூலகத்தைத் தெல்லிப்பழைப் பிரதேசத்தில் ஆக்கித்தரும் எமது அன்னையை நோக்கி ''இது நலம் என்று உம்மை உலகமே வாழ்த்தும் அம்மா'' என்றுரைப்போம். இந்த அருமை யான வேளாண்மையைச் செய்த தோட் டக்கார அம்மாவைச் சொர்க்கமே தன் அபரிமிதமான அழகை அவர் மீது அள்ளிச் சொரிந்து வாழ்த்தி நிற்கிறது. அவர்தம் சமூக சேவை ஓங்கி வளர்க. உலகம் பயன் பெறுக. வெல்க சைவம். மீண்டும் மிளி ரட்டும் நீற்றின் செம்மை.

உ

# நூலகம் சமூகத்தின் மாங்கல்யம்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**
*தேசிய கல்வி நிறுவக ஆலோசகர்*

மனித நாகரிக வரலாற்றில் அறிவு பெறும் இடம் மகத்தானது. அறிவு வளர்ச்சியின் வரலாறுதான் மனித நாகரிக வளர்ச்சியின் வரலாறு ஆகும். சுட்டறிவு, பட்டறிவு, நூலறிவு, நுண்ணறிவு, பகுத்தறிவு, இயலறிவு, கற்றறிவு, செயலறிவு என்று அறிவு பலவாறாகப் பேசப்படுகிறது. மனிதரின் சமூக, பொருளாதார கலாசார, ஒழுக்க, ஆன்மிக, பண்பாட்டு வளர்ச்சிகளுக்கு அறிவு வளர்ச்சியே ஆதாரம் ஆகும். அறிவு இல்லாமல் மனித வளர்ச்சி இல்லை என்பது தெளிவு. ''அறிவுடையார் எல்லாம் உடையர்'' என்பது நம் முன்னோர் கண்ட உண்மை.

சமுதாயத்தில் மக்கள் அறிவுடையோராக விளங்கும் போதே பண்பாடு, ஒழுக்கம், விழுமியங்கள், ஆன்மீகம், நீதி, அறம், அமைதி என்பன பேணப்படுகின்றன. அறிவு என்னும் போது இன்றைய மேற்கு நாட்டு நூல்கள் குறிப்பிடுவது போன்று வெறுமனே தகவல்கள், செய்திகள், தரவுகள், விபரங்கள் என்பனவற்றை மாத்திரம் உள்ளடக்கியதாகத் தமிழ் அறிஞர்கள் கொள்ளவில்லை. திறன்கள், மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பனவும் அறிவினுள் அடங்கும் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தனர். தமிழ்க் கல்வியின் நோக்கம், கற்போனைச் சான்றோன் ஆக்குதல் ஆகும். சான்றோன் என்பவன் ஏட்டுக்கல்வி மூலம் பெற்ற அறிவை மட்டும் கொண்டிருப்பவனன்று. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் சால்புகளை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுபவனாகவும் விளங்கும்போதே, அவன் சான்றோன் என்னும் பெயரைத் தாங்குவதற்குத் தகுதிப்பாடுடையோனாகின்றான்.

தூயநற் கல்வி பயக்கும் அறிவே உயிருக்கு உறுதுணையாகின்றது. அத்தகைய கல்வியைக் கற்க மறுப்பவன், சான்றோனாக வாழ மறுக்கிறான். இன்றைய உலகியல் கல்வி, தூய நற்கல்வியாக அமையாமையினாலேயே, சான்றோர்களைக் காண்பதரிதாக இருக்கின்றது. உலகில் அமைதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது.

''கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்'' என்னும் நாவலர் பெருமானின் கூற்றும் ஈண்டு நோக்கற்பாலது. மனிதரை நல்லொழுக்கத்துடன் வாழ வழி செய்யாத கல்வி, கல்வியாகாது. அத்தகைய கல்வியால் பெற்ற அறிவும் அறிவு ஆகாது. அந்த அறிவு வெறுமனே தகவல் மாத்திரமேயாகும்.

காலங்காலமாக உருவாக்கம் பெற்று வந்த அறிவுத்தொகுதி களஞ்சியப்படுத்தப்படுவதும், பரப்பப்படுவதும், அடுத்த தலை முறையினருக்குக் கையளிக்கப்படுதலும் அத்துடன் புதிய அறிவு சேர்க்கப்படுவதும் இன்றியமையாத செயற்பாடுகள் ஆகும். பழைய காலங்களில் அறிஞர் பெருமக்கள் தத்தம் உள்ளங்களில் அறிவைக் களஞ்சியப்படுத்தி மாணாக்கர்களுக்கு வழங்கினர். ஏடுகளிலும் களஞ்சியப்படுத்தப்பட்டது. கடதாசி மற்றும் அச்சுயந்திரம் என்பவற்றின் வருகைக்குப் பின்னர், அறிவுத் தொகுதி, நூல்வடிவம் பெறத் தொடங்கின. நூல்கள், நூலகங்களிலும், சுவடிகள் அகங்களிலும் வைத்துப் பேணப்படும் முறையும் ஏற்படுத்தப்பட்டன.

அண்மைக் காலத்திலிருந்து இலத்திரனியல் சாதனங்களான வானொலி,

தொலைக்காட்சி, இணையம் என்பனவும் அறிவுத் தொகுதியைக் களஞ்சியப்படுத்துவதிலும் பரப்புவதிலும் ஈடுபட்டு வருகின்றன. எனினும், நூல்களின் வளர்ச்சியும், நூலகங்களின் தேவையும் இச்சாதனங்களினால் பாதிக்கப்படும் என அச்சங்கொள்ளத் தேவையில்லை.

நூல்களில் அறிவு களஞ்சியப்படுத்தப்பட, நூலகங்களில் நூல்கள் களஞ்சியப் படுத்தப்பட்டுவருகின்றன. நூலகங்கள் இன்று பரந்துபட்ட பல்வேறு பணிகளை ஆற்றிவருகின்றன. அறிவு விருத்தி, ஆய்வு, தகவல் வழங்கல் என்பவற்றிற்கு உதவி வருகின்றன. நூலகவியல், தகவல் தொழினுட்பத்துறைகள் இன்று பெருவிருத்திகண்டு வருகின்றன. சமூகத்தில் நூலகங்கள் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளமையை இது எடுத்துக்காட்டுகிறது.

கற்கும் சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் என்று கல்வியுலகில் இன்று பேசப்படுகிறது. வாழ்க்கை நீடித்த கல்வி, வாழ்நாட்கல்வி என்றும் குறிப்பிடப்படுகின்றன. ''சாந்துணையுங்கல்வி'' என்று இதனையே வள்ளுவப் பெருமான் கூறியுள்ளார். பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி என்பன முறைசார்ந்த கல்வியாகும். அப்பாலுங்கற்கின்ற கல்வி பெரும்பாலும் முறைசாராக் கல்வியாக விளங்குகின்றது. முறைசாராக் கல்வி சுயகற்றலின் அடிப்படையில் நிகழ்கின்றது. நூல்களே இதற்குப் பெருந்துணையாக அமைகின்றன. முறைசார் கல்விக்கும் முறைசாராக் கல்விக்கும் நூலகங்களின் இன்றியமையாமை உணரப்பட வேண்டியது.

கற்றது கைம்மண்ணளவு; கல்லாததுலகளவு என்பர். இந்த உலகளவு பெரிதாக உள்ள, இதுவரை கற்றுக் கொள்ளாதவற்றைக் கற்றறிய வேண்டுமாகில், நூலகத்தின் உதவி தேவை என்பதை மறுக்க முடியாது.

தற்காலத்தில் நிமிடத்திற்கு நிமிடம், வெடித்துப் பிரவாகிக்கும் அறிவுப் பரல்கள் மற்றும் தகவல்களின் பெருக்கம், விஞ்ஞான தொழினுட்ப அறிவு வளர்ச்சி — இவையனைத்தையும் மனிதன் தனது சிறிய அளவிலான மூளைக்குள் அடக்கிவைத்திருப்பது என்பது முடியாத காரியம் ஆகும். எனவே மாற்று முறைகள் தேவைப்படுகின்றன. அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் இம் மாற்று முறைகளாக அமைகின்றன. நூலகம் என்னும் எண்ணக்குரு இவ்விரண்டு ஊடகங்களினதும் கேந்திர நிலையம் என்பதாக மாறிவருகிறது; மாற்றம் பெற்று விட்டது என்றே கூறவேண்டும். நூலகம் வெறுமனே நூல்களை மாத்திரம் கொண்டிருப்பதன்று; இலத்திரனியல் சாதனங்களின் உறைவிடமாகவும் விளங்குகிறது.

கல்விக்கும் நூலகத்திற்குமுள்ளதொடர்பு மிக நெருக்கமானது. கல்வி அபிவிருத்திக்கு நூல்களே ஆதாரமாகவும், கட்புல சாதனமாகவும் உள்ளன. கல்வியை மாணாக்கர் ஆசிரியரின் வாயிலாகப் பெற்றது முன்னர்க் காலத்தில். இன்று அறிவுப் பெருக்கத்தின் காரணமாக, கல்வியைப் பல இடங்களிலுமிருந்து தேடிப்பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் மாணவர் உள்ளனர். அவ்வாறு தேடலுக்கான பிரதான நிலையம் நூலகம் ஆகும். புத்தகப் பண்பாட்டு வளர்ச்சிக்கு நூலகத்தின் பங்கு மகத்தானது.

புத்தகப் பண்பாட்டு வளர்ச்சி, வாசித்தல் திறனிலும் செயற்பாட்டிலுமே பெரிதும் தங்கியுள்ளது. வாசித்தல் மூலம் அறிவு திறன், மனப்பாங்கு, விழுமியம் என்பவற்றில் மனிதர் வளர்ச்சி பெறுகின்றனர். எனவேதான், வாசிப்பதன் மூலம் மனிதன், மனிதனாகப் பரிமாணம் பெறுகிறான் எனப்படுகிறது. மனிதனுக்குரிய அங்க அடையாளங்களுடன் மாத்திரம் பிறந்து விட்டால் மனிதனாகி விட முடியாது. மனிதன் தனது அறிவு, ஆற்றலை விருத்தி செய்து கொள்ளும்போதே மனிதன் என்ற உயர் நிலையைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. அறிவை விருத்தி செய்வதற்குப் பிரதான ஊடகம் நூல்களை வாசித்தலாகும்.

மனிதன் ஒருவனால் தனது வாழ்நாளில் எல்லா அறிவுகளையும் பெற்றுவிட முடியாது. அதனால், தனக்குத் தேவை

யானவற்றைத் தேடித் தெரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலையும், திறனையும் வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். ஒரு வாசகனுக்கு, எவ்வெவற்றிற்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்பதைப் பகுத்தாய்ந்தறியும் திறன் இருத்தல் அவசியம்.

அறிவைத் தேடுவதற்காக வாசித்தல் என்பதை ஒரு கடின தொழிலாகவோ, சுமையாகவே கருதிவிடக் கூடாது. சுமையாகிவிட்டால் அது அழுத்தத்தான் செய்யும். வாசித்தலை ஒரு சுவையான அனுபவமாகக் கொள்ளுதலே விவேகமாகும்.

முன்னர்க் காலங்களில் வாசிப்பதில் நாட்டமுள்ளோர் பலர் இருந்தனர். ஆனால் இன்றோ, நூல்களை வாசிப்போர் தொகை குறைந்து கொண்டே செல்கின்றது. மாணவர்கள் மத்தியிலும் வாசிக்கும் பழக்கம் அருகிவிட்டது. வளர்ந்தவர்கள், முதியவர்கள் கூடப் பொழுது போக்காகத்தன்னிலும் வாசிக்கப் பின்னிற்கிறார்கள். வீட்டில் நூல்களை வாங்கி அழகாக அடுக்கி வைக்கிறார்களே தவிர, வாசிப்பதில்லை. நூலகங்களுக்கு வருகைதருவோர் தொகையிலும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதனைக் கண்டு விசனமடையாமல் இருக்கமுடியாது.

நூல்களின் தொகை பெருகிக் கொண்டே போகிறது. நல்ல அறிகுறி. ஆனால் வாசகர் தொகை குறைந்து கொண்டே செல்கிறது. இது நல்ல அறிகுறியன்று. இதன் விளைவாக, அறிவு விருத்தி குன்றுவதோடு, மொழியறிவு, மொழித்திறன், ஒழுக்கப் பண்பாட்டு விழுமியங்கள் என்பனவும் குன்ற ஏதுவாகிறது. வாசிப்பு இல்லையென்றால் கற்றலில் பெரும்பகுதி நடைபெறவில்லை என்பதுதான் அர்த்தம். வாசிக்காத ஒரு சமுதாயம், கற்று அறிவுபெற்ற சமுதாயமாகக் கருதப்பட முடியாது. வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியர்களும் பிள்ளைகளின் வாசிப்பினை ஊக்குவிக்க வேண்டும். அதற்குமுன்னர், பெற்றோரும் ஆசிரியர்களும் வாசகர்களாக மாற வேண்டும். அவர்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும். அப்போதுதான் புத்தகப் பண்பாடு சமுதாயத்தில் வளர்ச்சி பெறும்.

புத்தகப் பண்பாட்டை வளர்க்காத, தடைசெய்கின்ற கல்வி முறைமையொன்று நம்மிடையே வளர்ந்து வருகிறது. பரீட்சையை மையமாகக் கொண்ட இக்கல்வி முறையில் வெற்றி காண்பதற்கு ஆசிரியர் தரும் குறிப்புகள்; ஊட்டல் ஆசிரியரும் தனியார் ரியூஷன் வகுப்புகளும் வழங்கும் குறுக்கு வழிகள் ; கருத்தரங்கம் ; பேப்பர் கிளாசுகள் என்பன போதுமானவை. பரீட்சையில் வெற்றி பெறலாம், ஆனால், மனிதன் மனிதத்தன்மைகளுடனான மனிதனாக, பண்பாடுடையவனாக, ஆன்மிக வளர்ச்சி பெற்றவனாக வளர்ச்சி பெற முடியுமா என்பதுதான் பெறுமதி மிக்க கேள்வியாக உள்ளது.

தற்காலத்தில் நாம் நூலகங்களைப் பேணாமலும், நாடாமலும் இருப்பதற்கு மற்றுமொரு காரணம் வானொலி தொலைக்காட்சி, இணையம் போன்றவற்றின் ஆதிக்கம் ஆகும்.

வாசிப்புப் பழக்கம் ஒரு போதைப் பழக்கம் போன்றது எனப் பல பெற்றோர்கள் இக்காலத்தில் கருதுகிறார்கள் போலத் தோன்றுகிறது. பிள்ளைகளைப் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு நூல்களையோ, சஞ்சிகைகளையோ, பத்திரிகைகளையோ அணுக விடுகிறார்களில்லை. பிள்ளைகள் வாசிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டால், அதிலிருந்து அவர்களை மீட்டெடுத்து, படிப்பில் கவனத்தைத் திருப்புவது பகீரதப் பிரயத்தனம் என்கிறார்கள். பாடங்களையும் குறிப்புக்களையும் வினா விடைகளையும் திரும்பத்திரும்ப வாசித்து மனனஞ்செய்து, கொள்வதில்தான் விமோசனம் உண்டு என்றும் ; அதுதான் படிப்பு என்றும் ; வேறு நூல்களை வாசித்தலால் படிப்புக்குப் பங்கம் ஏற்படுகிறது என்றும் கொள்ளப்படும் கருத்துப் பெற்றோர்களிடையே வலுப்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆசிரியர்களும் இதற்கு உடன்பாடாகவே உள்ளனர். பரீட்சைப் பெறுபேறுகள் தானே அவர்களுக்கும் முக்கியம். மேலதிகாரிகளுக்கும் பெற்றோர்களுக்கும் அப்போது தானே வகை சொல்ல முடியும்.

பாடசாலையின் புகழும் மதிப்பும் பரீட்சைப் பெறுபேறுகளை மட்டும் அளவு கோலாகக் கொண்டு கணிப்பீடு செய்யும் வரை, புத்தகப் பண்பாட்டினை வளர்ப்பது சிரமமே. பாடசாலையிலிருந்து வெளியே றியவர்கள் எந்த அளவிற்கு விழுமியங் களைப் பேணி, மனிதத் தன்மைகளுடனான மனிதர்களாக வாழ்கின்றனர் என்பதைக் கணிப்பீடு செய்வதற்கு எந்தப் பாடசாலை யாவது முன்வந்ததாகத் தெரியவில்லை. இது எமது மதிப்பீட்டு முறையின் குறை பாடாகும். இக்குறைபாட்டினை நிவிர்த்தி செய்யும் பட்சத்திலேயே, புத்தகப் பண்பாடு தழைக்கும் என எதிர்பார்க்கலாம்.

வாசிப்பது சிறுவர் உரிமை; மனித உரிமையும் கூட. வாசிப்பதை மறுப்பது உரிமை மீறல் ஆகும். இதைப் பெற்றோ ரும் ஆசிரியர்களும் உணரவேண்டும். நூல கங்கள் ''போதைப்பொருள் மையங்கள்'' ஆகவும்; வாசிப்பு நூல்கள், ''போதைப் பொருள்கள்'', ஆகவும்; மேலதிக நூல் களை வாசிக்கும் பிள்ளைகள் படிப்பைக் 'கோட்டை' விட்டு விடுவதாகவும் எண் ணும் நிலைமை, ஒருபொய் மாயத்தோற் றமே என்பது மக்கள் மத்தியில் உறுதி செய்யப்பட வேண்டும். இது இன்றைய அவசியத் தேவையாகும்.

மக்களிடையே நூலகம், நூல்களை வாசித்தல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட வேண்டும். நூலகங்கள் ''தந்த கோபுரங்கள்'' ஆக அமையாது, சமூகத் திடம் செல்ல வேண்டும். மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை ஈர்ப்பதற் கான திட்டங்களை வகுத்துச் செயற்படு தல் அவசியமாகும். இதற்கு நூலகர்களின் பங்கு முக்கியம்.

நூலகமானது, தகவல் நிலையம்; மூல வள நிலையம்; சனசமூகநிலையம்; வளர்ந் தோர் கல்வி நிலையம்; ஆய்வுமையம்; சுவடிகள் வைத்துப் பேணப்படும் நிலையம்; ஆக்க எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நிலையம்; ஆவண வாக்கற் சேவை நிலை யம்; நூல்களை வெளியிடும் நிலையம்; நூல்களை அரங்கேற்றும் நிலையம்; அறி வுப் பரிவர்த்தனை நிலையம்; சிறுவர் இலக் கிய நிலையம்; கலாசார மையம் போன்ற பலதுறை நிலையமாக விரிவு பெறுதல் வேண்டும்.

இலக்கிய உணர்வு, மனித விழுமியப் பண்பு, பண்பாடு, விஞ்ஞான மனப்பாங்கு, கலாசாரப் பற்று, சமூக நோக்கு என்ப வற்றை வளர்க்க கூடிய நூல்கள், சஞ்சி கைகள், பருவ இதழ்கள், பத்திரிகைகள் மற்றும் கலைக் களஞ்சியங்கள் என்பனவே நூலகங்களில் இடம்பெறச் செய்தல் வேண் டும். ஆக்கமும் கேடும் இவற்றால் நேரிடும் என்பதால், அவற்றைத் தெரிவு செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். இளையோர்களை ஆக்கபூர்வமான முறை யில் சமூகமயப்படுத்துதல் நூலகங்களின் பிரதான கடமையாகும். நூலகம் புலமை யையும், மனிதப் பண்பாட்டையும் வளர்க் கின்றது. ஏனைய இலத்திரனியல் சாத னங்கள் புலமையை வளர்க்கலாம். ஆனால் பண்பாட்டை வளர்க்கின்றனவா என்பது தான் கேள்விக் குறியாக உள்ளது. பண் பாடு இல்லாத புலமை ஆபத்தானது என் பதை இன்றைய சமூக சீர்கேடுகளும் ஊழல் களும் துலாம்பரமாகக் காட்டுகின்றன.

சமய, சமூக, பண்பாட்டு நிறுவனமாக விளங்கிவரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் சிறந்ததொரு நூலகத்தை நிறுவியுள்ளது. துர்க்காதேவியின் திருவருள் அதனை வழிநடத்தும் என்பது உறுதி. ஏனைய தேவஸ்தானங்களும் இத்தகைய அறப்பணிகளில் ஈடுபாடு கொள்ள இறை யருளை வேண்டுகிறோம்.

நூலகம் ''சமூகத்தின் மாங்கல்யம்'' என்பதை உணர்ந்து அதனைப் பாதுகாப் போம், பயன்பெறுவோம்.

உ

# பாடசாலை நூலகங்களின் அமைப்பும் அதன் வளர்ச்சிப் போக்கும்

**திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்.** B. A., P. G. D. E
M. Phil (Education) S. L. E. A. S.
விரிவுரையாளர்,
கோப்பாய், ஆசிரிய கலாசாலை.

பாடசலைகளின் கல்விசார் விருத்தியில் நூலகங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. கல்வித்தேடலை உணர்வு ரீதியாக உருவாக்குகின்ற நிலையமாக விளங்குவது நூல்நிலையமாகும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்." என்ற மகத்தான சிந்தனையை உணர்வுபூர்வமாக பாடசாலை நூல்நிலையங்கள் தூண்டிவிடுகின்றன. பாடசாலை நூல் நிலையங்கள் கற்றல், கற்பித்தல் என்ற இருசெயற்பாடுகளுக்கும் உதவுகின்ற தன்மையில் அமைந்துள்ளன. இலங்கைக்கல்வி வரலாற்றில் மேலைநாட்டவர்களின் வருகை ஏற்பட்டதால் பாடசாலைகளில் மிக நீண்ட காலத்திற்கு முன்னரே நூலகங்கள் அமைக்கப்பட்டு விருத்தி பெற்றன. எனினும் சுதேசிகளினால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளிலும் சிறிய சிறிய நூலகங்கள் அமைக்கப்பட்டு பின்னர் அவை விருத்தியடைந்தன. சுதந்திரத்திற்குப் பின் இலங்கைக் கல்விக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக கற்போர் தொகையும் பாடசாலைகளின் அபிவிருத்தியும் அதிகரிக்கத் தொடங்கியது. இன்று உலக அறிவியல் மேம்பாட்டுக்கமைய புதியகல்விச் சீர்திருத்தங்கள் இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. புதிய கல்விச்சீர்திருத்தத்திட்டத்தின் நோக்கம் இருபத்தோராம் நூற்றாண்டில் உலகளாவிய கல்வி அபிவிருத்தியை நோக்கி எமது கல்விப்பாதையை முன்னெடுத்துச் செல்லலாகும். இந்நிலையில் பாடசாலைகள் தோறும் நூல்நிலையங்களை உருவாக்கி விருத்தி செய்தல் இன்றைய பிரதான கடமையாகக் கொள்ளப்படுகிறது.

இலங்கையில் முதலாவது கல்விச்சட்டம் இயற்றப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுற்றதைக் கொண்டாடும் முகமாக ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் இலங்கையிலுள்ள பாடசாலைகள் பலவற்றில் நூல்நிலையங்களைப் புதிதாக அமைப்பதற்கும் பாடசாலைகளில் இயங்கிய நூல்நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுத்து, சியவச விழாத் திட்டமிடலில் 1969ஆம் ஆண்டு பல புதிய நூல்நிலையங்கள் உருவகம்பெற்றன. சியவச நூல்நிலையகொள்கையினால் பல பாடசாலைகளில் நூல் நிலையங்கள் உருவாக்கப்பட்டதோடு அந் நூல்நிலையங்களை செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு நூலகர் பயிற்சி வழங்கப்பட்டது. இந்நூலக விருத்திக்கும் நூலகர் பயிற்சித் திட்டத்திற்கும் ஆசியா ஃபவுண்டேஸன் நிறுவனம் பெருந்தொகை நிதியைச்செலவு செய்து இலங்கைக்கல்வி வரலாற்றில் பாடசாலை நூலக விருத்திக்கு உதவியது. 1972ஆம் ஆண்டு புதிய கல்விச்சீர்திருத்தங்கள் பாடசாலைகள் தோறும் ஏற்படுத்தப்பட்டபோது நூலகங்களின் முக்கியத்துவம் மேலும் வலியுறுத்தப்பட்டது. 1997ஆம் ஆண்டு பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டபோது பாடசாலை நூல்நிலையங்களின் முக்கியத்துவம் மீள வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக நூல்களோடு கூடிய களஞ்சியமாக விளங்கிய நூல்நிலையம் இன்றைய நூற்றாண்டில் புதிய பரிணாமம் பெற்றுள்ளது. முன்பு நூலகவியல் என்று அழைக்கப்பட்ட நிலைமாறி இன்று நூலகமும் தகவல் விஞ்ஞானமும் (Library Information Science) எனச்சொல்லப்படுகின்ற நிலையில் நூலகத்துறை மாற்றம் பெற்றுள்ளது. நூல்கள், ஆவணங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள், புதிய கருவிகள் உள்ளடக்கிய நவீன அறிவியல் ஆய்வுகூடமாக பாடசாலை நூல்நிலையங்கள் மாற்றம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஆரம்பக்கல்வி இடைநிலைக் கல்வி சிரேஷ்டகல்வி என்ற அனைத்துநிலைகளிலும் அவற்றுக்குப் பொருத்தமானவகையில் தனித்தனியான நவீன நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பாடசாலை நூல்நிலையம் :**

பாடசாலை நூல்நிலையத்தில் இரண்டு பிரதான பிரிவுகள் இன்று அமைக்கப்படவேண்டும்.

1. நூல்கள், வெளியீடுகள் சார்ந்த பிரிவு
2. கட்புல செவிப்புல சாதனங்கள் சார்ந்த பிரிவு

ஒரு பாடசாலை நூல்நிலையம் பாடசாலை வளாகத்தில் அமைதியானசூழலைக் கொண்ட இடத்தில் அமைதல் வேண்டும். இயற்கை இடையூறுகளிலிருந்து பாதுகாப்பும், சமூகப்புறக்காரணிகளிலிருந்து பாதுகாப்பும் கருத்திற்கொண்டு நூல்நிலையக் கட்டிடத்தை அமைத்தல் வேண்டும். ஒரு பாடசாலையில் நூல்நிலையம் வகுப்பறை அமைப்பிலிருந்து மாற்றம்பெற்ற நிலையில் மாணவர் தத்தம் தனித்துவத்திற்கேற்ப சுதந்திரமாக வாசிப்பதற்கு, கிரகிப்பதற்கு ஏற்றவகையில் அமைதல் வேண்டும்.

**1. நூல்வெளியீடுகள் சார்ந்த பிரிவு :**

இப்பிரிவில் நூல்கள், பருவ வெளியீடுகள், தினசரி பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், புகைப்படங்கள், விவரணச் சித்திரங்கள் என இப்பிரிவு வகுக்கப்பட்டு அமைதல் வேண்டும்.

**2. கட்புல செவிப்புல சாதனங்கள் சார்ந்த பிரிவு :**

இப்பிரிவில் வானொலி, தொலைக்காட்சி, கணனி, இணையம் என்ற பிரதான சாதனங்களை உள்ளடக்கிய தனித்தனிப் பகுதிகளாக இப்பிரிவு அமைதல் வேண்டும். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இப்பிரிவுகளில் ஒருவருக்கொருவர் இடையூறின்றி செயற்படும் முறைகள் பின்பற்றப்படவேண்டும்.

**ஒரு பாடசாலை நூலகத்தின் நோக்கங்களும், பணிகளும் :**

1. மாணவர்களிடையே நூல் ஆர்வத்தை, அறிவியல் தேடலை ஏற்படுத்தல்.
2. நூலகத்தின் சிறப்புக்களை பயன்களை மாணவர்கள் உணரக்கூடிய வகையில் வழிகாட்டல்.
3. மாணவர்களின் கல்வி விருத்திக்குத் தேவையான தகவல்களைச் சேகரிக்க உதவுதல்.
4. மாணவர்கள் சுயமாக வாசிப்பதற்கு, ஆராய்வு செய்வதற்கு உற்சாகப்படுத்தல்.
5. பாடசாலையிலுள்ள அனைத்துப் பிள்ளைகளின் தரங்களுக்கும் ஏற்றவகையில் நூல்களை உதவுதல்.
6. ஆசிரியர்களுக்கும், பாடசாலை அலுவலகர்களுக்கும் ஏற்ப அவர்கள் துறை சார்ந்த விடயங்களை விருத்தி செய்வதற்கான நூல்களையும் சாதனங்களையும் உதவுதல்.
7. ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு உதவும் வகையில் நூல்களையும் சாதனங்களையும் கொண்டிருத்தல்.
8. மாணவர்கள் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்க உதவுதல்.
9. மாணவர்களைத் தாம் வாழும் சமூகத்தோடு பொருத்தமுறச் செய்தல்.
10. மாணவர்களிடையே உலகளாவிய ரீதியிலான புதிய புதிய தகவல்களை அறிந்து கொள்ள உதவுதல்.

மேற்குறித்த வகைகளிலெல்லாம் ஒரு பாடசாலையின் நூல்நிலையம் அமைதல் வேண்டும்.

பாடசாலை நூலகர்:

ஒரு பாடசாலையின் நூலகர் நூலகவியல் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். நூலகர் நூல்நிலையத்தை பராமரிப்பதோடு நூல்நிலையத்திற்கு தேவையான நூல்களை, தகவற்சாதனங்களைத் தெரிவு செய்கின்ற ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும். பாடசாலை மாணவர்களை நெறிப்படுத்துகின்ற உளப்பயிற்சி பெற்ற ஒருவராக நூலகர் இருத்தல் அவசியம். ஒரு பாடசாலையின் நூலகர்அறிவை நாடிநூலகத்திற்கு வருவோரிடம் அன்புடன் பழகக்கூடியவராயும் அவர்களுடையதேவைகளைப் பொறுமையுடன் கேட்டு உதவக்கூடியவராயும் இருத்தல் வேண்டும். நூலகர் நூலகத்தை சுத்தமாகவும் ஒழுங்காகவும் மாணவர்களின் மனதைக் கவரும் வகையில் அலங்காரமாகவும் வைக்கவேண்டியது அவரின் கடமையாகும். நவீன தொழில்நுட்ப அறிவியல் சாதனங்கள் புதிது புதிதாக அறிமுகம் செய்யும்போது அவைபற்றியஅறிவை பெற்று அதனை செயற்படுத்தக்கூடிய ஆற்றல் உடையவராக நூலகர் விளங்கவேண்டும்.

நூல்கள் தகவல் - ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள் (தகவற் கருவிகள்) தெரிவு செய்தலும் அவற்றை பெறுவதற்கான வழிகளும்:

பாடசாலை நூலகத்திற்குத் தேவையான பொருத்தமான நூல்களை தகவல் கருவிகளைப் பெறுவதில் நூலகர்கள் மிகுந்த கவனமாகச் செயற்பட வேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உள்ளடங்கிய ஆலோசனைக் குழுவின் சிபார்சுடன் வருடா வருடம் புதிய புதிய நூல்களை தகவல் கருவிகளைத் தேர்ந்தெடுத்து நூல்நிலையத்தை பூரணமான அறிவியல்சாலையாக வழிநடத்த வேண்டும். ஒரு பாடசாலை நூலகத்திற்குப் பொருத்தமான நூல்களைப் போதியளவு சேகரித்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும். நூல்களும், ஏனைய அறிவுப்பதிவு கருவிகளும் கல்விப் பகுதியினரிடமிருந்தும் அன்பளிப்பாகத் தனிப்பட்டோர் அல்லது நிறுவனங்களிடம் கிடைக்கக்கூடும். மேலும் விற்பனையாளரிடமிருந்து விலைக்கு வாங்கவும் வேண்டும்.

நூல்களை அன்பளிப்பாகப் பெறுதல்:

பத்திரிகைகளில் வரும் தகவல்களையும் பிறதகவல்களையும் கருத்திற் கொண்டு நூலகர் வெளியீட்டாளர்களோடுதொடர்பு கொண்டு இலவச, அன்பளிப்பு நூல்களை நூலகத்திற்குப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக இலங்கையிலுள்ள பிற நாடுகளின் தூதுவராலயங்களின் தகவல் தொடர்புப் பகுதியோடு தொடர்புகளை ஏற்படுத்தி நாடுகளின் இலவச வெளியீடுகள், தகவல் பதிவேடுகளை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம். அமெரிக்கா, பிரித்தானியா சீனா, சோவியத்ரஷ்யா போன்றநாடுகளின் இலங்கைத்தூதுவராலயங்கள் பல பாடசாலைகளுக்கு கடந்த காலங்களில் ஏராளமான நூல்கள் தகவல் கருவிகளையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. எனவே நூலகர் தமது தொடர்பாடல் சிறப்பினைப் பயன்படுத்தி நூலகத்தின் விருத்தியை வளர்த்துக் கொள்ளலாம். நூல்கள் தகவல் அறிவு கருவிகளையும் தெரிவு செய்யும்போது மாணவர்களின் கல்வி உளச்செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவற்றின் பயன் அமையக்கூடியதாக தெரிவு செய்யப்பட வேண்டும். அன்பளிப்பாகக் கிடைக்கும் நூல்கள், பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது அவசியமில்லை. நூலகத்தேவைக்குப் பொருந்தாதவற்றைப் பெற்று நூலக மண்டபத்தை நிரப்புவதில் எவ்வித பிரயோசனமும் ஏற்படாது. மாணவர்களது பாடசாலை பாடவிதானத்தை கருத்தில் கொண்டும் காலத்துக்கு காலம் நூல்களைத் தெரிவு செய்தல் அவசியமாகும். மாணவரிடையேபொது விவேகத்தை வளர்க்கக்கூடிய நூல்களை, வெளியீடுகளை தெரிவு செய்வது அவற்றை பெற்றுக்கொள்ளல் நூலகரின் பிரதான கடமையாகும்.

நூல்களை தெரிவு செய்யும்போது வெளியீட்டு விளம்பரத்தை நன்கு அவதானித்து

கொள்வனவு செய்யவேண்டும். குறிப்பாக பல நூல்கள் மறுபிரசுரம் செய்யப்பட்டு விற்பனையாகும். சில நூல்கள் திருத்திய பதிப்புகளாக வெளிவரும். எனவே இவற்றை நூலகர் கருத்தில் கொள்ள வேண்டும். சில நூல்களின் தேவைகருதி ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகளைக்கூட நூல் நிலையத்தில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஒலி, ஒளி பதிவு நாடாக்கள் நெகிழ் வட்டு (Floppy Disk) போன்றவற்றை நூலகத்திற்கு தேர்வு செய்யும் போது அவற்றின் பயன்பாட்டை, தரத்தை கருத்திற் கொண்டு தேர்ந்தெடுத்தல் வேண்டும். குறிப்பாக கணனி நெகிழ்வட்டுக்களை தெரிவு செய்யும் போது அவற்றைப்பாதிக்கின்ற கணனி வைரசுக்களிற்காகப் (Computer Virus) பரிசோதிக்கவேண்டும்.

நூல்களை, தகவற்கருவிகளைத் தெரிவு செய்யும் போது அவைசார்ந்த வெளியீட்டு நிறுவனங்களின் பட்டியல்களைப் பெற்று அவற்றில் பாடசாலை நூலகத்திற்குத் தெரிவு செய்தல் சுலபமானது. உசாத் துணை நூல்களைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

1. நூலின் துறையும் விரிவும்.
2. நூலாசிரியரின் தகைமை.
   உசாத்துணை நூல் தரும் தகவல்கள் நம்பகரமாய் இருத்தல் வேண்டும்,
3. வெளியீட்டுக்காலம்.
   வெளியிடப்பட்ட தகவல்கள் புதியனவாயும் பிந்திய தகவல்கள் சேர்க்கப் பட்டவையாயும் இருத்தல் வேண்டும்.
4. சமவர்க்க நூல்களோடு ஒப்பீடு.

ஒரே வகையான நூல்களுள்ளும் மாற்றங்களும் அமைப்பு வேறுபாடுகளும் இருக்கக் கூடும். அதாவது நூலகர் தமது தேவைக்கேற்ற நூல்களையே தெரிவு செய்ய வேண்டும். (அகராதி, கலைக்களஞ்சியம்)

நூல்கள், தகவற்கருவிகள் தெரிவு செய்து கொண்ட பின் இதன் விற்பனை முகவரிடமிருந்து இவற்றைப் பெறமுன்பு நூலகரால் இவற்றுக்கான தரவுக் கட்டளையை (Indent) தயாரிக்கப்படல் வேண்டும்.

1. நூலாசிரியரின் பெயர்.
2. விடயத்தலைப்பு.
3. பிரதிகளின் எண்ணிக்கை.
4. விலை
5. பதிப்பு
6. வெளியீட்டாளரின் பெயர்.
7. வெளிடப்பட்ட திகதி

மேற்படி தரவுக் கட்டளையை மூன்று பிரதிகளாகத் தயாரித்து ஒன்று விற்பனையாளரிற்கும், ஏனைய பிரதிகளில் ஒன்று பாடசாலை அதிபருக்கும், மற்றையது தரவுக்கட்டளைக் கோவையில் இணைத்து வைப்பதற்கும் பயன்படும். புதிய நூல்களை இத்தரவுக்கட்டளை மூலம் ஒழுங்கு செய்து நூல் நிலைய நூற்பதிவுக் கோவையோடு சரிபார்த்த பின்பே நூல்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

நூல்கள் தகவற்கருவிகள் பதிவீடு நூலகத்திற்கு பெறப்படுகின்ற சகல நூல்கள்-தகவற்கருவிகள் ஏட்டிற் பதிவு செய்யப் படவேண்டும். ஒவ்வொரு நூல்கள், தகவற் கருவிகளுக்கும் பதிவெண் அவசியமாகும். பொதுவாக நூலகப்பதிவேடு இரு வகையாக அமையும்.

1. நூல், தகவற்கருவி வரவுப்பதிவேடு
2. நூல், தகவற்கருவி நீக்கற்பதிவேடு.

ஒரு நூல், தகவற்கருவிக்கு பதிவு எண் வழங்கப்பட்ட பின்பு அவ்வெண்ணை வேறு எச்சந்தர்ப்பத்திலும் பிறிதொன்றிற்கு வழங்கப்படக் கூடாது. ஒரு நூலிற்கு இடப் படும் எண் அந்நூல் அகற்றப்பட்ட போதும் மீண்டும் எடுத்தாளப்படக் கூடாது. ஒரு நூலை வரவுப்பதிவேட்டில் பதிவு செய்து முடிந்ததும் அந்தப்பதிவெண் நூலின் தலைப்புப் பக்கத்தில் பின்புறத்தில் பொறிக்கப்பட வேண்டும். இதே போல் தகவற்கருவிகளான ஒலி - ஒளி நாடாக்கள், நெகிழ்வட்டுக்கள் போன்றவற்றின் உறை

களின் வெளிப்பக்கமாக இப்பதிவெண்கள் பொறிக்கப்படல் வேண்டும். நூல், தகவற்கருவி வரவுப்பதிவேட்டில் பின்வரும் விபரங்கள் இடம் பெற வேண்டும்.

1. பதிவெண்
2. நூலாசிரியரின் பெயர்
3. தலைப்பு
4. வெளியீட்டாளரும், வெளியீட்டிடமும்
5. பகுதி வகுப்பெண்
6. கிடைத்தவிதம்
7. கிடைத்த திகதி
8. மட்டை கட்டிய விபரமும் செலவும் ,
9. அகற்றப்பட்ட திகதி
10. வேறு குறிப்புகள்.

நூல் நிலைய வரவுப்பதிவேடு நூலகத்தின் கையிருப்பேடு என்ற வகையில் மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இதுவே நூலகத்தின் பிரதான ஆதாரச் சான்றாகும்.

நூலகத்தின் கையிருப்பிலிருந்து அகற்றப்பட்ட நூல்களை ஒரு நூல்நீக்கற் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். இப்பதிவேட்டில் பின்வரும் விடயங்கள் அமைதல் வேண்டும்.

1. தொடரெண்
2. தலைப்பு
3. ஆசிரியர்
4. பதிவெண்
5. நீக்கப்பட்ட திகதி
6. நீக்கற்காரணம்
7. வேறு குறிப்புகள்.

நூலகத்திற்குப் புதிய நூல்கள், தகவற் கருவிகளைப் பெறுகின்ற போது நூல் நீக்கற்பதிவேடு மிகவும் உதவியாக அமையும். ஒரு நூல், தகவற் கருவியை நீக்கியவுடன் அது பற்றிய விபரத்தை வரவுப் பதிவேட்டில் எழுதுவதுடன் நூல் தகவற்கருவி விவரணப்பட்டியலிலிருந்து அவற்றுக்கான விவரண அட்டைகளையும் நீக்கிவிடுதல் அவசியமாகும்.

**பாடசாலை நூல்நிலையங்களில் நூல்களை வகுத்தல் :**

ஒரு நூலகத்தில் வாசகர் தமக்குத் தேவையான நூல்கள், தகவற்கருவிகளை சிரமமின்றித் தேடிக்கொள்வதாயின் ஏதாவதொரு திட்டப்படி கிரமமாக ஒழுங்குபடுத்தி வைக்கப்பட வேண்டும். நூல்களை, தகவற் கருவிகளை பொருத்தமான துறைசார்ந்ததாக வகுத்து அத்துறைகளிற்கு தரப்படும் குறியீட்டை நூல்கள், தகவற்கருவிகளிற்குப் பொறித்து வகுத்தல் சீரிய முறையாகும். இலங்கைப் பாடசாலைகளில் உள்ள நூல் நிலையங்களில் பொதுவாக நூல்களை வகுக்கும் போது தூயி தச வகுப்புத்திட்டமே பயன் படுத்தப்படுகிறது. அமெரிக்க அறிஞர் தூயி என்பவரால் 1876 ஆம் ஆண்டில் இவ் வகுத்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டம் பத்துப் பிரதான பொருட்தலைப்புக்களுக்குள் ஒவ்வொன்றும் நூறு எண்கள் கொண்டதாக அடக்கப்பட்டுள்ளது. பொதுத்துறை, தத்துவம், சமயம், சமூகவியல் மொழியியல், விஞ்ஞானம் தொழிற்துறை விஞ்ஞானம், கலைகள், இலக்கியம், சரித்திரம் – புவியியல், பிரயாணம், மேற்கூறிய தூயிதச வகுப்புத்திட்டம் மேலும் பிரிவுகளாகப் பிரிந்து விரிந்து செல்கின்றது. இத்திட்டம் அறிவுத்துறையின் முழுவிரிவையும் அணைத்துக் கொள்ளும் தன்மை கொண்டது. தூயிதச வகுப்புத்திட்டத்தை பாடசாலை நூலகத்தில் பயன்படுத்தல் இலகுவாகும்.

**நூல் தகவற்கருவிகள் விவரணப்பட்டியலும் அவற்றின் பாதுகாப்பும் :**

ஒரு நூலகத்தின் இன்றியமையாதவொரு கருவியாக விளங்குவது விவரணப் பட்டியலாகும். விவரணப்பட்டியல் நூலகத்திலுள்ள விபரங்களை வெளியிடுவதோடு அவை எப்பகுதியிலுள்ளன என்பதை வெளியிடும் ஒரு பாடசாலையின் தேவைகளுக்குப் போதுமானதான நூல் விவரணப்பட்டியல்களைபின்வருமாறு விளக்கலாம்.

1. ஆசிரியர் விவரணப்பட்டியல் (Author Catalogue) இதுதான் மறு நூற்பட்

டியலின் பிரதான பதிவாகும்.
( Main Entry )

(i) ஆசிரியர் பெயர்

(ii) தலைப்பு

(iii) வெளியிட்ட திகதி

2. வகுப்பெண் விவரணப்பட்டியல் (Classified Catalogue) மேலே குறிப்பிடப்பட்ட விவரண அட்டையில்மற்றொரு பிரதிசெய்து வகுப்பெண்வாரியாக (000 முதல் 999 வரை) அடுக்கப்பட வேண்டும். இதுவே வகுப்பெண் விவரணப்பட்டியலாகும்.

3. தலைப்பு விவரணப்பட்டியல் (Title Catalogue) விவரண அட்டையில் ஆசிரியர் பெயர் எழுதப்படவேண்டிய இடத்தில் நூலின் பெயர் எழுதப்பட வேண்டும். விவரண அட்டைகளின் தலைப்பு தலைப்புப் பெயரின் அகர வரிசைப்படி அடுக்கப்பட வேண்டும்.

4. பொருள் அகவரிசைப்பட்டியல் (Subject Index) இந்தப்பட்டியலில் நூலின் பொருளும் அதற்கு நேரான வகுப்பு எண்ணும் எழுதப்பட வேண்டும். இவ்வட்டைகள் பொருள் அகர வரிசைப்படி அடுக்கப்பட வேண்டும்.

நூல்கள் தகவற்கருவிகளை ஒழுங்கான முறையில் பாதுகாக்க வேண்டும். நூலகம் ஒவ்வொன்றிலும் நூல்நிலையத்தின் பெயர் பொறித்த உரிமை முத்திரை இடுதல் வேண்டும். நூல்கள் மட்டை கட்டப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். பொதுவாக ஒரு நூலில் பொருத்தமான மூன்று இடங்களில் நூல்நிலையத்தின் பெயர் பொறித்த உரிமை முத்திரை இடுதல் வேண்டும். நூல்களின் முதுகில் ஒரே அளவிலான சிறியதொரு வட்டமான வெண்காகிதத்துண்டை ஒட்டி (இக்காகிதத்துண்டு நூல் முதுகில் அடியிலிருந்து இரண்டு அங்குல உயரத்தில் இருத்தல் வேண்டும்) இத்துண்டுகளில் நூல்களின் இலக்கங்கள் பொறிக்கப்பட வேண்டும்.

இரவல் கொடுக்கப்படும் நூலிற்கு அந்நூல் திருப்பிக் கொண்டு வரவேண்டிய திகதி பொறித்த பதிவுத்தாள் ஒன்றை நூல்முன் மட்டையின் உட்புறத்திற்கு எதிரான பக்கத்தில் ஒட்டுதல் வேண்டும்.

திகதிப் பதிவுத்தாள் ஒட்டப்பட்டுள்ள பக்கத்தின் மேற்பகுதியில். இடப்புறத்தில் நூல் வகுப்பு எண்ணையும் வலப்புறத்தில் வரவுப்பதிவு எண்ணையும் எழுதுதல் வேண்டும்.

நூலகத்தில் நூல்களைப் பாதுகாப்பதற்கு மட்டை கட்டுதல் இன்றியமையாததாகும். மிக மெல்லிய உறைகளோடு வரும் நூல்களை மட்டை கட்டிய பின்னே பாவனைக்கு விடவேண்டும். நூலகத்தை சுத்தமாக வைத்திருப்பது நூலகரின் பிரதான கடமையாகும். நூலக உதவியாளரைப் பயன்படுத்தி நூலகம் கிரமமாக துப்புரவு செய்யப்பட வேண்டும். தூசு பூஞ்சணம் படியாத வகையில் பாதுகாப்பதோடு எலி, கரப்பான் பூச்சி, கறையான், காகிதத்தை தாக்கும் ஏனைய பூச்சிகளினதும் இடையூறுகளிலிருந்தும் நூலகத்தைக்காப்பாற்ற வேண்டும். நூலகத்தில் உள்ள தகவற்கருவிகளில் சிறிய தூசி தொற்றிக் கொண்டாலே கருவிகள் பழுதாவதோடு கருவிகளை இயக்கும் சாதனங்களும் பாதிக்கப்பட்டுவிடும். எனவே நூல்நிலையத் தகவற்கருவிப்பகுதி மிகவும் பாதுகாப்பானதாக அமைதல் வேண்டும். குறிப்பாக கணனி தொலைக்காட்சிப் பெட்டி போன்றன அமைந்த இப்பகுதியில் காலநிலைச் சூழலை கருத்திற் கொண்டு பாதுகாப்பு ஒழுங்கு செய்யப்பட வேண்டும். தகவற்கருவிப்பகுதியில் மின்சார ஒழுங்குகள் மிகவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மின் ஒழுங்கைக் கட்டுப்படுத்துகின்ற மின் ஒழுங்குத் தடைகள் (Trip Switch) பொருத்தப்பட வேண்டும். மாணவர்கள் தகவற் கருவிகளைப் பயன்படுத்துகின்ற போது அப்பகுதிகளிலிருந்து அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை விவரணப்படுத்த வேண்டும். குறிப்பாக எச்சரிக்கைகள் (Warnings) அவசர நடவடிக்கைகள்

(Emergncy) சம்பந்தமான விபரங்கள் தொங்கவிடப்பட வேண்டும்.

நூலகத்திற்கு காற்றோட்டமும், வெளிச்சமும் அவசியமாகும். நூற்தட்டுக்களை துப்பரவாக வைத்திருப்பதோடு நூல்கள் நெருக்கமாக அடுக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப் படவேண்டும். சூரிய கிரணங்கள் இடிமின்னல் போன்றவை தாக்காமலும் நூலகத்தில் ஈரலிப்புத்தன்மை ஏற்படாமலும் நூல்களைக் கிருமிகள் தாக்காமலும் தடுப்புமருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். கிருமி நாசினி விற்பனையாளரோடு தொடர்பு கொண்டு தகுந்த மருந்துகளைப் பெற்று நூலகச் சூழலையும் பாதுகாக்க வேண்டும்.

**நூல் இரவல் வழங்கும் முறை :**

மாணவர்கள் நூல்களை வாசிப்பதற்குத் தூண்டும் வகையில் இரவல் வழங்கும் முறை சுலபமாக இருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் நூல்களின் விபரங்களை நூல் இரவல் அட்டையொன்றில் பதிவு செய்து நூல் இரவல் பதிவுப் புத்தகத்திலும் பதிதல் முறையாகும். நூல் இரவல் வழங்கும் அட்டையில் பின்வரும் விபரங்கள் இடம்பெற வேண்டும்.

1. பாடசாலையின் பெயர்
2. பிள்ளையின் பெயர்
3. வகுப்பு
4. நூலாசிரியரின் பெயர்
5. தலைப்பு
6. வகுப்பெண்ணும் வரவுப்பதிவெண்ணும்.
7. மீள்வரவுத் திகதி
8. வரவுத்திகதி
9. நூலகர் கையொப்பம்
10. குறிப்புக்கள்.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் நூல் இரவல் வழங்கும் முறைக்கு பயன்படுத்தப்படும்.

ஒரு பாடசாலையின் நூல்நிலையம் இக்கட்டுரையில் குறிப்பிட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சீரான முறையில் செயற்படுத்த வேண்டும். மாணவர்கள் அறிவியல் தேடலில் ஆர்வம் காட்டுவதற்கு நூல்நிலையங்கள் மிகவும் இன்றியமையாததாகும். காலத்தின் தேவைகருதிப் புதிய புதிய தேடல்களால் தோன்றுபவையே புதிய கல்விச் சீர்திருத்தங்கள். மெய்மையினைக் கண்டறியும் புலமைப் பயிற்சிக்கு நூலகங்கள் மூலாதாரமாக அமைகின்றன. தேடல்கள் தொடர்ச்சியானவை அவற்றிற்கு முடிவில்லை. எனவே நூலகங்களின் தேவைகளும் விரிவானவை என்றும் தொடர்வன. அவ்வகையில் பாடசாலை நூல்நிலையங்கள் மாணவச் செல்வங்களின் அறிவுத் தேடல்களைத் தூண்டும் அற்புத நிலையங்களாக விளங்க வேண்டும்.

---

**உசாத்துணை நூல்கள் :**

நூலகங்கள், — ந. சி. கந்தையாபிள்ளை, ஆசிரியர், நூற்பதிப்புக் கழகம். சென்னை.

A Basic Manual for School Libraians — S. M. Kamaldeen.

சென்னைப் பல்கலைக் கழகக் கலைக் களஞ்சியம்

Computer Today

புதிய கல்விச் சீர்திருத்தம் — 1997 — தேசிய கல்வி நிறுவகம், மகரமக.

உ

# இன்று தமிழ்மொழியில் உரைகள் ஒரு நுனித்த நோக்கு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்**
B. A. (Hons.), M. A., Ph. D.
வரவு ஆய்வாளர்,
கக்சுகியின் பல்கலைக் கழகம்,
ஜப்பான்.

உலக மொழிகளில் பழைமையும் செழுமையும் பெற்ற தமிழ் மொழி வாய்மொழியாகப் பேணப்பட்டு வந்தது. செந்தமிழ், பேச்சுத் தமிழ் என்ற இரு வகைப்பாடு கொண்டு வழக்கில் நிலவியது. எழுத்து நிலை பெற்ற போது பாடல் அமைப்பு, உரை அமைப்பு என இருவகை வடிவு பெற்றது. அது 'செய்யுள்' என இறுக்கமான மொழிநடையாகச் செய்யப்பட்டு இசையுடன் ஒலிக்கப்பட்ட போது 'பாடல்' என்ற அமைப்பாய் விளங்கியது. அந்த இறுக்கமான மொழிநடையை எளிமையாக விளக்கிக் கூற உரைநடை தோன்றியது. இதனால் எழுத்து நிலையாக இருந்த செய்யுள் நடைக்கு விளக்கமாகவே உரைநடை தோன்றியதை உணர முடிகின்றது. அறிவூட்டல் நிலையிலே இவ்விரு மொழி நடைகளும் இன்றியமையாதனவாக இருந்தன.

பண்டைக் காலத்தில் அறிவூட்டல் என்பது ஆசிரியர் மாணவனுக்குக் கற்பித்தல் என்ற நிலையிலேயே நடைபெற்று வந்தது. அக்கால நூல்கள் செய்யுள் நடையிலே வாய்மொழியாகப் பேணப்பட்டமையால் அந் நூல்களின் விளக்க உரைகளும் உரையாசிரியர்களால் வாய்மொழி நிலையிலே மாணவர்க்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. உரை எழுதும் மரபு பின்னர் தனித்துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. பழைய இலக்கண இலக்கிய நூல்களைக் கற்க, பல்வேறு உரைகள் வேண்டப்பட்டன. பழைய காலத்தில் செய்யுள் நடையில் இருந்த நூல்களை எல்லோரும் கற்றுமகிழும் மொழித்திறன் பெற்றிருந்தனர். 'உரை இன்றிச் சூத்திரத் தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம்' என்றும் உதாரணங் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரைநடந்த காலமும் உடையவாகும். முற்காலத்து நூல்களென்பது கருத்து என (பொருள் 653, 656) பேராசிரியர் தொல்காப்பிய உரையிலே குறிப்பிடுவது இதற்குச் சான்றாக உள்ளது. 'இறையனார் களவியலுரை' நீண்ட காலம் வாய்மொழி மரபிலே பேணப்பட்டு கி. பி. 8ஆம் நூற்றாண்டளவில் ஏட்டு வடிவில் எழுத்துருப் பெற்ற தமிழ் உரை நூலாக விளங்குகிறது. மாணவருக்கு அறிவூட்டல் என்ற நிலையிலே தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் போன்ற நூல்களின் உரைகள் அமைந்துள்ளன.

ஒரு நூலுக்கு உரை எழுதும் போது முதலில் குறிப்புரைகளே எழுதப்பட்டன. பின்னர் காலப்போக்கில் நூல் பற்றிய கருத்துகள் வளர்ந்த போது உரை விரிவடைந்து விளக்கவுரைகள் தோன்றின. இந்நிலைக்கு நம்மாழ்வாரின் 'திருவாய்மொழி' உரைகள் சிறந்த எடுத்துக் காட்டாகும். காலப்போக்கில் மொழிநடை நிலையின் உரைக்கு மேலும் விளக்கமாக உரை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் பழைய தமிழ்ச்

சொற்களின் இடத்தைப் பிறமொழிச் சொற்கள் பெற்றமையே ஆகும். சிறப்பாக வடமொழிச் செல்வாக்கினால் வடமொழிச் சொற்களே பெரிதும் பயன்படுத் தப்பட்டன. இதனால் மூல நூலின் தமிழ்ச் சொற்களின் விளக்கமாக வடமொழிச் சொற்களே உரையாசிரியர்களால் பயன் படுத்தப்பட்டன. வடமொழி மரபைப் பின் பற்றி செய்யுள் வடிவிலும் உரைகள் தோன் றின. இந்நிலை 20ஆம் நூற்றாண்டுவரை இருந்தது. 'குட்டிக்குறள்' திருக்குறள் இசை மாலை போன்ற நூல்கள் இப் பண்பினை எடுத்துக் காட்டும்.

நூலுக்கு உரை செய்வோர் முன்னர் எழுதிய உரையை சில இடங்களில் மறுத்து எழுதும் மரபும் தோன்றியது. இதனை திரு வாரூர் வைத்தியநாத தேசிகர் எழுதிய இலக்கண விளக்கம் என்னும் நூலை மறுத்து சிவஞான முனிவர் இயற்றிய இலக்கவி விளக்கச் சூறாவளி என்னும் நூல் தெளிவு படுத்துகின்றது. கி. பி. 19 நூற்றாண்டில் செய்யுள் வடிவிலே உள்ள புராண இதி காசக் கதைகளை உரைநடையிலே தரும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது வசன நடை என்ற அமைப்புத் தோன்றியது. அறிவூட்டல் நிலையில் கல்வி அறிவு குறைந்த மக்களுக்குப் பயன்படும் வகையில் வசன நூல்கள் ஆக்கப்பட்டன. இது பேச்சு மரபு ஒன்றையும் தோற்றுவித்தது. பழைய வாய்மொழி அறிவூட்டலின் புதிய வடிவ மாக இது பயன்படுத்தப்பட்டது. இத னைப் 'பிரசங்கமரபு' என அழைத்தனர். கிறிஸ்தவ மதச் செல்வாக்கால் இம்மரபு தமிழில் தோன்றியது எனக் கருதப்படு கிறது. ஆனால் தமிழ் மொழியிலே இம் மரபு 'உரைகூறல்' என்ற நிலையிலே முன் னரேயே தோன்றிவிட்டது என்பதைப் பல ரும் இன்று மறந்து விட்டனர். நூல் அரங் கேற்றம் பொது இடங்களில் நடைபெற்ற போது உரைநடையிலே விளக்கம், சிறப்புக் குறிப்பு, நயப்பு, தெளிவுபடுத்தல், மறுப்பு, தொகுப்பு என்பன நடைபெற்றன. இவையே இன்று இருநிலைகளில் பல்வேறு உரை களாக ஏறக்குறைய நாற்பது வகைகளாக வளர்ந்துள்ளன.

இன்று தமிழ் மொழியில் உரை இரு நிலைகளில் பயன்படுத்தப்படுகிறது, ஒன்று புதிய நூல் வெளியிடும் போது நடத்தப் பெறும் உரைகள். மற்றது புதிய நூல் அல்லது இதழ் ... ... ஆக்கத்தில் எழுதி இணைக்கப்படுகின்ற உரைகள். இவ்வுரை களின் பயன்பாடு பெரிதாக இருப்பதால் இவை பற்றிய எண்ணக் கருவை ஆய்வு செய்வதும் இன்றியமையாததே. உரை நடையிலும் செய்யுள் நடையிலும் பழைய மரபு பேணும் நிலையும் இன்னமும் தொடர் கிறது. உரைவகை நிலையில் இவற்றின் வேறுபாடுகளை நோக்கி வரையறை செய் யும் ஒரு புதிய முயற்சியாகவும் இக் கட் டுரை அமைகிறது. உரைவகை நிலையில் அவற்றின் பெயர்நிலை பண்பு நிலையையும் சுட்டி நிற்பதுடன் வரையறையையும் மறை முகமாக உணர்த்தி நிற்கிறது. நன்னூலார் காலம் தொடக்கம் இன்றுவரை உரைகள் பற்றிய விளக்கம் தெளிவுபடுத்தப்பட வேண் டியதொன்றாகவே உள்ளது. உரைகளின் தோற்றம் 'அறிவூட்டல்' என்ற பெரும் பணிக்காகவே ஏற்பட்டது. இப்பணி என் றும் தேவையானது. எனவே இவ்வுரை பற்றிய சுருக்கமான கருத்துக்களை இங்கு முன்வைப்பது சாலவும் நன்று.

தற்காலத் தமிழ்மொழியில் வழக்கி லுள்ள உரைவகைகளை அகரவரிசைப்படுத் திக் கூறின் பின்வருமாறு அமையும்.

1. அஞ்சலி உரை
2. அருளுரை
3. அறிமுகவுரை
4. அறிவுரை
5. அணிந்துரை
6. ஆசியுரை
7. ஆய்வுரை
8. என்னுரை
9. ஏற்புரை
10. கண்டனவுரை
11. கருத்துரை
12. காண்டிகையுரை
13. குறிப்புரை
14. சிறப்புரை
15. சுருக்கவுரை
16. சொற்பொருளுரை

17. திறப்புரை
18. தெய்வீக உரை
19. தொகுப்புரை
20. தொடக்கவுரை
21. நயப்புரை
22. நன்றியுரை
23. நிறைவுரை
24. நினைவுரை
25. நேர்முக உரை
26. பதவுரை
27. பதிப்புரை
28. பாராட்டுரை
29. பிரார்த்தனை உரை
30. பொழிப்புரை
31. மறுப்புரை
32. முகவுரை
33. முடிவுரை
34. முன்னுரை
35. வரவேற்புரை
36. வழக்குரை
37. வாழ்த்துரை
38. விசேடவுரை
39. விமர்சன உரை
40. வியப்புரை
41. விரிவுரை
42. விருத்தியுரை
43. விளக்கவுரை
44. வெளியீட்டுரை

மேற்படி உரைவகைகள் இன்று பயன் பாட்டு நிலையில் சில சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளன. தற்காலத்தில் விஞ் ஞான தகவல் தொழில் நுட்பத்தின் விரை வான வளர்ச்சி நிலையில் பேச்சுநிலை, எழுத்துநிலை, மின் அஞ்சல் நிலை என உரைகள் பல நிலைகள்ல் பரிமாறப்படுகின் றன. அவற்றின் பயன்பாடு தமிழர் வாழும் இடங்களில் மிகவும் வேண்டப்படும் நிலை யில் உலக அரங்கில் வலம் வரும் நிகழ்ச்சியாகவும் சிறப்புப் பெற்றுள்ளது. தமிழ்மொழியின் உலகளாவிய பயன்பாட் டையும் உணர்த்தி நிற்கிறது. எனவே இவ் வுரைகளின் பண்பையும் பயனையும் விளக்கி அவற்றின் இன்றைய முரண்பாட்டு நிலை களையும் சுருக்கமாக கீழே தருகிறோம்.

1. அஞ்சலி உரை :

இந்த உரை இன்று பேச்சு நிலையிலும் எழுத்து நிலையிலும் பயன்படுத்தப்படுகின் றது. செய்யுள் அமைப்பிலும் உரை நடை யிலும் இவ்வுரை அமைக்கப்படும் மரபு தொடர்கிறது. தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டு செய்த ஆறுமுகநாவலர் இவ்வுலக வாழ்வை நீத்த போது சி. வை. தாமோதரம்பிள்ளை இரங்கி இயற்றிய செய்யுள் வருமாறு

''நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை.''

இச் செய்யுள் நாவலர் மறைவைப் பற்றி உரைக்கும் போது எத்தகைய விடயங்களை உள்ளடக்க வேண்டும் என்பதை உணர்த்து கிறது. நாவலர் மறைந்த போது சி. வை. தா. ஐந்து வகையான செய்யுள் நடை யிலே தமது அஞ்சலியைச் செலுத்தியுள் ளார். விருத்தப்பா, வெண்பா, சிலேடைக் கலித்துறை, நட்சத்திர வெண்பா, குறள் வெண்பா, என்ற ஐவகையான யாப்பில் அவர் பாடியுள்ள பாடல்கள் நாவலர் பணி களைப் பிற்காலத்தவர் நன்குணரவும் நாவ லர் வழியில் பணியில் ஈடுபடவும் வழி காட்டுகின்றன. ஒருவரது மறைவு இழப்பு மட்டுமன்றி அவர் நற்பணிகளைத் தொட ரப் பிறரைத் தூண்டுவதாகவும் அமைய வேண்டும் என்பதையே அஞ்சலி உரை வரையறை செய்கிறது. அஞ்சலி செய்தல் என்பது தொடர்புறுத்தல் எனப் பொருள் படும். மறைந்த ஒருவரை பின்வருவோர் நினைத்து தொடர்பு கொண்டு பணிசெய்ய அஞ்சலி உரை வழி செய்கிறது. மரபு நிலை யில் இன்றுவரை செய்யுள் வடிவிலும் அமைவது குறிப்பிடத்தக்கது. இவ்வுரை செய்வோர் வயது நிலையால் மூத்தவராய் இருப்பதும் வாழ்வியல் அனுபவம் உடைய வராய் இருப்பது நன்று.

**2. அருளுரை :**

இவ்வுரை நூலாக்கம் புதிய முயற்சி களின் தொடக்கம் என்ற நிலைகளில் பெரிதும் வேண்டப்படுவது. மனத்தூய்மை யும் இறைவழி பாட்டில் நம்பிக்கை கொண் டவரும் இவ்வுரையை நிறைவாகச் செய் யும் பண்புநலனும் தகுதிப்பாடும் உடையவ ராவர். எந்தவொரு செயலைத் தொடங் கும் போதும் அது எம்மையெல்லாம் பேணி நிற்கும் பேராற்றலின் அருளுடன் தொடர வேண்டும் என்ற மரபான நடைமுறையை உணர்த்தும் உரையே அருளுரையாகும் ''தெய்வமென்பதோர் சித்தமுண்டெனில் செய்வினை அனைத்திலும் சீர்மைநிலவும்.'' இவ்வுரை செய்வோர் தோற்றமும் நடை உடை பாவனைகளும் அதனைவெளிப்படை யாகக் காட்ட வேண்டும். இவ்வுரையும் செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்ததொன்றாகும். வழிபாட்டு நடை முறைகளைத் தொடக்கிவைக்கின்ற நிலை யிலே இவ்வுரை இன்று முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. பொது நிகழ்வுகளின் தொடக்கத்தில் பல்வேறு சமயத்தவர்களும் இவ்வுரை செய்ய அழைக்கப்படும் புதிய மரபொன்றும் தற்காலத்தில் தோன்றி யுள்ளது.

**3. அறிமுகவுரை :**

இவ்வுரை பேச்சு நிலையிலும் எழுத்து நிலையிலும் பயன்படும் உரையாகும். நூல் ஆக்கத்தில் நூலாசிரியரையும் நூலையும் அறிமுகம் செய்யும் வகையில் அறிமுக உரை எழுத்து நிலையில் பயன்படுகிறது. பொது நிகழ்வுகளில் ஒரு கருப்பொருளை அல்லது நூலை அல்லது பாராட்டு, பட் டம் பெறும் ஒருவரை அறிமுகம் செய்து ஆற்றும் உரையாக உள்ளது. இந்த உரைக்கு வரையறை ஒன்று உள்ளது என் பது உணரப்படுவதில்லை. அறிமுகம் என் பது ஒருவரைப்பற்றி இன்னொருவர் மற்ற வர்களுக்கு தெரிவிப்பதாகும். அறிமுகம் செய்யப்படுபவரின் தன்மை, குணவியல்பு, தகுதிப்பாடு என்பவற்றை நன்கு அறிந்த ஒருவரே இந்த உரையை ஆற்றவோ எழு தவோ வல்லவராவார். எனவே அறிமுக உரையின் அமைப்பு தெளிவான முறையில் அமைய வேண்டும். நூல் ஒன்றை அறி முகம் செய்யும் போது அதனைப் பற்றி ஆழமாக உரைக்காது அறிமுகம் செய்யும் அளவில் மட்டுமே அமைய வேண்டும்.

**4. அறிவுரை :**

அறிவுரை என்பது ஒழுங்கு நெறி யைப் புகட்டும் நிலையில் அமைவது. மாண வர்களுக்கு அறிவு புகட்டும் உரையாகவே பெரிதும் பயன்படுகிறது, அறிவூட்டல் நிலை யில் இளைஞர், சிறுவர் போன்றோர்க்கு வயதிலும் அநுபவத்திலும் மூத்தோர் உரை யாற்றும் தகுதியுடையவராவர். கடிதமூலம் எழுத்து நிலையில் அறிவுரை செய்யப்படு கிறது.

**5. அணிந்துரை :**

நூலாக்கம், வெளியீடு என்னும் நிலை களில் இவ்வுரை எழுத்து நிலையில் பெரி தும் பயன்படுகிறது. நூலின் சிறப்பைச் சுட்டிக் காட்டுவதோடு நூலின் தகுதிப் பாட்டை நிலை நிறுத்துவதாகவும் இவ் வுரை அமைய வேண்டும். எனவே நூலா சிரியர் பணியைச் செவ்வனே உணர்ந்த ஒருவரே இவ்வுரை செய்யும் தகுதிப்பாடுடை யவராவார். நூலின் சிறப்பு நிலைக்கு அணிசெய்வதே இவ்வுரையில் வரையறை யாகும்.

**6. ஆசியுரை :**

ஆசியுரை என்பது ஒரு நூலாக்கத்தின் போதும் ஒரு பொது நிகழ்வின் போதும் அதனை ஆசீர்வதித்துச் செய்யப்படும் உரை யாகும். நல்ல உள்ளத்தோடு ஆசி கூறு வோர், உரையை நீண்டதாக ஆற்றும் மரபு இல்லை. சொற்களை நன்கு தெரிந்து தெளி வாக ஆற்ற வேண்டிய உரை இது. எனவே சுருக்கமான உரையாகவே ஆசியுரை அமை யும். எழுத்தில் அமைக்கும் போதும் சுருக்க மாகவே அமையும்.

**7. ஆய்வுரை :**

நூல் வெளியிடும் போது நூலின் உள் ளடக்கத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து ஆற் றும் உரை இது. நூல் கூறும் விடயம் பற் றிய அறிவு வாய்க்கப் பெற்றவரே இந்த

உரையை ஆற்ற வல்லவர். உரையின் வரையறை நூலின் உள்ளடக்கத்தைப் பொறுத்துச் செய்யப்பட வேண்டும். காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையில் நின்று செய்யப்பட வேண்டிய உரையாகும். நூலின் அமைப்பு நிலை, பண்பு, பயன் என்பவற்றை உள்ளடக்கிய ஒழுங்குபட்ட உரையாக இவ்வுரை அமைய வேண்டும்.

8. என்னுரை :

நூல் ஆக்கும் ஆசிரியர் தன் நோக்கையும் இலக்கையும் நிறைவேற்றும் நிலையில் இந்த உரை அமையும். நூலின் உள்ளடக்கத்தில் உள்ள அமைப்பு ஒழுங்கு முறை பற்றிய விளக்கத்தை ஆசிரியர் எழுத்து மூலம் அல்லது உரைமூலம் செய்வதற்கு இந்த உரை அமைப்பு பெரிதும் உதவுகிறது. சிலவேளைகளில் இந்த உரை ஆசிரியருடைய பின்னனி நூலின் தேவை. பதிப்புச் சிக்கல்கள் பற்றிய விளக்கமாக அமையும்.

9. ஏற்புரை :

இந்த உரை ஒருவருடைய சேவை நலத்தைப் பாராட்டும் விழா நிகழ்விலே பாராட்டுப் பெற்றவர் தம்மைப் பாராட்டிச் சிறப்பு செய்தவரை நன்றியுடன் நினைந்து ஆற்றும் உரையாகும். தனியொருவர் சிறப்பைப் பலர் சேர்ந்து புகழும் நிகழ்வில் புகழ்ந்தவர்களை எழுத்திலே பதிவு செய்ய முடியாத விடத்து உரைமூலம் நினைவிலே பதிய வைக்கும் முயற்சியாகவும் இந்த உரை அமைகிறது.

10. கண்டண உரை :

கண்டன உரை என்பது ஒருவருடைய கருத்தை மறுத்து உரைப்பதாகவும் எழுதுவதாகவும் அமையும். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறிஸ்தவ சமயப் பரம்பல் முயற்சிகள் நடைபெற்ற போது ஒருவர் கருத்தை இன்னொருவர் ஏற்காது கண்டனம் செய்து உரைப்பது வழக்கமாயிருந்தது. நாவலர் இத்தகைய உரையாளராக விளங்கினார். இலக்கண நூல்களுக்கு விளக்க உரை செய்தவர்கள் பொருள் தெளிவுறுத்தும் நிலையில் கண்டன உரையாளராக விளங்கினர். ஈழத்து உரை மரபிலே இவ்வுரை தனித்துவம் பெற்றிருந்தது.

11. கருத்துரை :

கருப்பொருள் ஒன்றை மையமாக வைத்துச் செய்யப்படும் உரை கருத்துரை எனப்படும். பலர்கூடி ஒரு பொருள் பற்றியவேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கும் நிலையில் இந்த உரை பேச்சு நிலையிலும் எழுத்து நிலையிலும் பயன்படுகிறது. இந்த உரை சில வேளைகளில் கால அளவுக்குட்படாது நீண்ட விரிவுரையாக அமைந்து விடுவதும் உண்டு. எனினும் கருப்பொருளை மையமாக வைத்து உரையாற்றும் பேச்சு நிலையில் வரையறை செய்யப்பட்ட காலக்கெடுவை உடைய உரையாக அமைவதே சிறந்தது.

12. காண்டிகையுரை :

இந்த உரைபற்றி நன்னூல் பின்வருமாறு கூறுகிறது.

''கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானுஞ்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை'' (நன் : 22)

இந்த உரை செய்யுளுக்கு எழுதப்படும் உரையாகும். கருத்துரை, பதவுரை, எடுத்துக் காட்டு என்னும் மூன்றையும் உள்ளடக்கியது. இவற்றுடன் வினா, விடை என்ற இரு அமைப்பாலும் சூத்திரத்திரத்தின் பொருளை விளக்கி நிற்பது. இவ்வுரையை மூன்று உறுப்புடைய திரய + அங்கி எனவும் பஞ்ச + அங்கி என ஐந்து உறுப்புக்களை உடையதெனவும் வரையறை செய்துள்ளனர். எனவே காண்டிகை உரை விரிவான உரையமைப்பு என்பதும் பெறப்படுகிறது.

13. குறிப்புரை :

குறிப்புரை என்பது குறிப்பாக சிலவற்றை உரைப்பதாகும். எழுத்து நிலையில் செய்யுள் நடைக்கு எழுதப்படும் உரையாகும். பொருள் நிலையில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதை இந்த உரை வரையறை செய்து நிற்கும். எனவே சுருக்க

மான உரையாகவே அமையும். பேச்சு நிலையிலும் இப்பண்பு வெளிப்பட வேண்டும்.

**14. சிறப்புரை :**

நூலில் செய்யுள்கூறும் பொருளைப் பற்றிச் சிறப்பாக ஏதேனும் விளக்கம் தர வேண்டி அமைவது சிறப்புரையாகும். பலர் செய்யுளுக்கு உரைசெய்யும் இடத்து நூற்பொருளை சிறப்பாக எடுத்துக் காட்டும் வகையில் தகுதியுடையார் பிறிதொரு உரையை அமைப்பர். எடுத்துக் காட்டாக திருக்குறளுக்கும் பலர் உரை செய்த போதும் பரிமேழலகர் செய்த உரையே சிறந்த உரையாகக் கருதப்படுகிறது. இந்த உரையின் வரையறை தகுதிப்பாட்டில் தங்கியுள்ளது. கல்வித் தகைமையும் ஆளுமையும் பேச்சு நிலையில் இவ்வுரை ஆற்றும் தகுதிப் பாட்டை வழங்குவனவாக உள்ளன. இன்று பலரைக் கவரும் பேச்சாற்றலும் சிறப்புரை செய்வோரை இனங்காட்டுவதாக உள்ளது. இவ்வுரையை விசேட உரையெனவும் குறிப்பிடும் மரபு உண்டு. கோவில்களிலே பொது மக்களுக்கு அறிவூட்டும் நிலையில் புராண இதிகாசங்களுக்கு உரை சொல்வோரில் விசேட உரைகாரர் எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட சிலரும் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்கள் விசேட உரைகாரர் என அழைக்கப்பட்டனர்.

**15. சுருக்கவுரை :**

சுருங்கிய உரையமைப்பு சுருக்கவுரை எனப்பட்டது. இவ்வுரையை மேலும் விரித்து எழுதவோ, பேசவே முடியும். பரந்த பொருளை மிகச் சுருக்கமாக உரைக்க வேண்டிய போது இவ்வுரை அமைப்புப் பயன்படுத்தப்பட்டது. இடம், பொருள், காலம், ஏவல் என்ற நிலைகளாலும் இவ்வுரை வரையறை செய்யப்பட்டது. எழுத்து நிலையில் பலர் உரை இடம்பெறும் இடத்து சுருக்கவுரை பேணப்பட்டது.

**16. சொற்பொருளுரை :**

நூல் ஆக்கத்தில் செய்யுள் நடைக்கு விளக்கம் தரும் உரையாக எழுத்து நிலையில் மட்டும் இவ்வுரை பயன்படுத்தப்படுகிறது. இவ்வுரையை பதவுரை எனக் குறிப்பிடும் மரபும் இருந்தது. பதம் என்ற வடசொல் தமிழில் 'சொல்' என்பதைக் குறிக்கும். எனவே செய்யுளில் அமைக்கப்படும் சொற்களின் பொருளை எளிய தமிழ் நடையில் தருவதே இவ்வுரையின் வரையறை நிலையாகும். எடுத்துக் காட்டாக ஒரு செய்யுளின் தொடரில் இவ்வுரையின் வரையறை நிலையாகும். எடுத்துக் காட்டாக ஒரு செய்யுளின் தொடரில் இவ்வுரையின் அமைப்பை வருமாறு காணலாம்.

அவர் சென்ற ஆறு — தலைவர் போன வழியானது இங்கு அமைந்த மூன்று சொற்களின் பொருளையும் உரை விளக்கம் செய்யும் நிலையில் வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம்.

அவர் — தலைவர்
சென்ற — போன
ஆறு — வழியானது

மேலே காட்டியயடி ஒரு சொல்லை விளக்கப் பிறிதொரு சொல்லைப் பயன்படுத்தும் முறைமை இருந்துள்ளது. இந்த எடுத்துக் காட்டு குறுந்தொகை என்னும் பழைய தமிழ்ச் செய்யுளின் தொடர் ஒன்றிற்கு உ. வே. சாமிநாதையர் எழுதிய உரையாகும். தொடரின் மூன்று சொற்களில் அவர் என்பது சுட்டுப் பெயராக தலைவனைக் குறித்தமை விளக்கப்பட்டுள்ளது. சென்ற, ஆறு என்ற இரு சொற்களின் பொருளும் தெளிவான விள்க்கத்தைத் தருவதாக இல்லை. தற்காலத்தில் 'சென்ற' என்ற சொல்வின் பயன்பாடு அருகிவிட்டது. 'போன' என்ற சொல்லே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. செல், போ என்ற வினையடிகள் வெவ்வேறு பொருள் தருபவை 'செல்' என்பதில் 'மீண்டும் வருதல்' என்ற பொருள் தேங்கியுள்ளது. எனவே ஒன்றற்கொன்று முரண்பட்ட பொருளை உரைத்தல் என்னும் நிலையை இது தெளிவாகக் காட்டுவதை உணரலாம். 'ஆறு' என்பது இன்று நீர்ஒடும் ஆற்றினையே குறிக்கிறது. ஆனால் பண்டைக் காலத்தில் 'ஆறு' என்பது மக்கள் நடந்து செல்லும் தடத்தினையே குறித்தது. இதனால் சொற் பொருளுரை என்பது தமிழ்ப் புலமையும் வட மொழிப்

புலமையும் பொருள் தெளிவும் உடையவ ரால் மட்டுமே செய்யப்படுவதாகும் என்பது தெளிவாக உள்ளது.

**17. திறப்புரை :**

இவ்வுரை தொடக்கவுரை என முன்னர் அழைக்கப்பட்டது. ஆங்கில மரபில் ஆற்றப்படும் KEY NOTE என்ற உரையின் தமிழ் வடிவமாக இன்று திறப்புரை பயன்படுத்தப்படுகின்றது. பேச்சு நிலையில் இவ்வுரை தகுதியுடைய ஒருவரால் ஆற்றப் படுவது. தொடக்கவுரை என்பது கருப் பொருள் பற்றிய உரையரங்கம் ஒன்றிலே முன்னோடியாக சில கருத்துக்களை முன் வைக்கும் உரையாகும். முதுமை, அநுபவம் புலமை ஆளுமை என்னும் தகுதிப்பாடு இவ் வுரையை ஆற்றுவோருக்கு இன்றியமையாத தாகும்.

**18. தெய்வீக உரை :**

இந்த உரை இன்று திருக்கோயில் களிலே தொடர் நிலையிலே ஆற்றும் உரை யென வரையறை செய்யப்பட்டுள்ளது. வழிபாட்டு நிலையில் மக்கள் அறிய வேண் டியவற்றைப் பயிற்றுகின்ற பண்புநலன் தெய்வீக உரையின் இலக்காகும். சிறுவர் முதல் முதியோர் வரை மக்கள் எல்லோ ரும் கேட்டு நினைவில் நிறுத்தும் உரையாக இவ்வுரை அமைய வேண்டும். பக்தி உணர் வைப் பெருக்கும் பயன் இவ்வுரையால் நிகழ வேண்டும். தற்காலத்தில் இவ்வுரை கவர்ச்சி நிலையை மட்டும் நோக்காகக் கொண்டு மலினப்பட்ட உரையாகவும் மாறிவிட்டது, புராண இதிகாசக் கதைகளைக் கேலி செய்யும் நிலையில் களிப்பூட்டும் உரையாக முரண்பட்டு நிற்கிறது. இந்நிலை தவிர்க்கப் பட வேண்டும்.

**19. தொகுப்புரை :**

நூல் ஆக்கத்தில் எழுத்து நிலையிலும் கருத்தரங்குகளில் பேச்சு நிலையிலும் இவ் வுரை பயன்படுத்தப்படுகிறது. பல விடயங் களைப் பற்றிய செய்திகளையும் தகவல் களையும் உள்வாங்கி அவற்றை தெளி வாகத் தொகுத்து உரைக்கும் நிலையே இதன் வரையறையாகும். மொழிநடைத் திறனும் புலமைத்துவமும் இவ்வுரை செய் வதற்கு இன்றியமையாத பண்பு நலன் களாகும்.

**21. நயப்புரை :**

நயத்தல் என்பது ஒன்றன் சிறப்பை அதில் ஈடுபாடு கொண்டு நன்கு உணர்ந்து அதுபற்றிய கருத்தை வெளிப்படுத்துவதா கும். உரை நிலையில் இது ஆழமான தொன்று. முன் அனுபவமும் புலமையும் இவ்வுரை செய்வோரின் தகுதிப்பாடுக ளாகும். சொல் நயமும் பொருள் தெளி வும் இவ்வுரையைக் கேட்போர்க்கு விளக்கம் தரும் கருவிகளாகும். செய்யுள் நடையில் அமைந்தவற்றை நயப்புரையில் விளக்குவது இவ்வுரையின் வரையறையாகும். காலப் போக்கில் ஏற்பட்ட வளர்ச்சிநிலை மாற்றங் கள், முரண்பாடான எண்ணங்கள் என்ப வற்றையும் இணைத்துக் காட்டும் விளக்க உரையாக அமைவது இவ்வுரையின் பண் பாகும்.

**22. நன்றியுரை :**

நன்றி கூறும் நிலையில் நூல் ஆக்கத் திலும் பொது நிகழ்வுகளிலும் ஆற்றும் இவ்வுரை மிகவும் கவனமாக அமையவேண் டும். எழுத்து நிலையில் அமையும் போது தொடர்புடைய எல்லாவற்றையும் வகுத்து அடக்கமுடியும். பேச்சு நிலையில் அமை யும் போது விடுபட்டுப் போகும் நிலை ஏற் படலாம். இவ்வுரை ஒரு மரபான உரை யாக நடைபெறுவதால் அதற்கென ஒரு தனித்துவமான அமைப்பையும் கொண்டுள் ளது.

**23. நிறைவுரை :**

இவ்வுரை எழுத்து நிலையிலும் பேச்சு நிலையிலும் பயன்படுவது. கருத்து நிலையில் ஒரு நிறைவை ஏற்படுத்துவது இவ்வுரை யின் வரையறையாகும். இதனை முடிவுரை என்றும் சிலர் கருதுவர். தற்காலத்தில் இறுதியுரை எனவும் வழங்கப்படுகிறது. கருத்தைப் பற்றிய அறிவூட்டல் நிலையில் இவ்வுரை ஆக்கப்படுமிடத்து உள்ளத்தே நிறைவாகப் பதியும் வண்ணம் இவ்வுரை அமையவேண்டும்.

24. நினைவுரை :

ஒருவரது நினைவாக ஆற்றப்படும் இவ்வுரை பேச்சு நிலையில் இருந்து எழுத்து நிலையில் ஆவணமாகும் மரபுடையது. அஞ்சலி உரைக்கும் இவ்வுரைக்கும் உள்ள வேறுபாடு குறிப்பிடத்தக்கது. நினைவுரை ஒருவரது நினைவைக் காலங்காலமாக நினைவில் இருத்தும் வண்ணம் ஆண்டுக்கொருமுறை செய்யப்படுவது. அஞ்சலியுரை ஒருவர் மறைந்தபோது செய்யப்படும் உரையாகும். நினைவுரையின் போது நடைபெறும் தலைமுறைக் கையளிப்பு அதன் இலக்காக அமையும். காலமாற்றத்திற்கு ஏற்ப அதன் அமைப்பு நிலையில் மாற்றங்கள் ஏற்படலாம். எனவே முன்னைய உரைப்பதிவுகளின் பண்பு நலன்களிலிருந்து முரண்பாடுகளும் தோன்ற இடமுண்டு. இவ்வுரையின் வரையறையைப் பொருள் நிலையிலே அமைக்கும் மரபும் இன்று தோன்றிவிட்டது. உலகு தழுவிய நிலையில் பிறநாட்டவரும் இவ்வுரையை ஆக்கும் முறைமையும் தோன்றியுள்ளது.

25. நேர்முக உரை :

இந்த உரை பெரும்பாலும் பொது நிகழ்வுகளைப் பற்றிய உரையாக அமைந்துள்ளது. சிறப்பு நிலையில் நடைபெறும் நிகழ்வுகளையும் நேரில் காணும் வாய்ப்பு அற்றவர் செவிவழியாக அந்த நிகழ்வு பற்றியறிதற்கு இவ்வுரை வாய்ப்பு அளிக்கிறது. குறிப்பாகத் திருக்கோவில்களிலே நடைபெறும் திருவிழாக்களைப் பற்றி நேர்முக உரை செய்யப்படுகிறது. உலகளாவிய நிலையிலே இவ்வுரையைக் கேட்போர் தொகை இன்று பரந்துள்ளது. எனவே செவி வழியே உரையைக் கேட்டு அதனை மனக் கண்ணில் காண விரும்புவோரை இலக்காகக் கொண்டே இவ்வுரை ஆற்றப்பட வேண்டும். வரையறை நிலையில் திருவிழா நடைபெறும் சூழலை மறந்து விடக்கூடாது. கோயிலில் நிற்பது போன்ற உணர்வை உரையைக் கேட்போர் பெற்றிருக்கும் நிலையில் இடையே கருத்துரைகளை இணைப்பது இவ்வுரையின் பயனைக்கெடுப்பதாய் அமையும்.

26. பதிப்புரை :

இவ்வுரை நூல் ஆக்கத்தில் இன்றியமையாத உரையாக உள்ளது. நூல் பற்றிய சில விடயங்களை முன்னரேயே சுட்டும் உரையாகவும் அமைவது. பழைய தமிழ் நூல்களை ஏட்டுவடிவிலிருந்து நூல்வடிவுக்கு மாற்றும் போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை சி. வை. தா. தனது பதிப்புரைகளிலே குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அவருடைய உரை பிற்காலத்தில் பதிப்புரை செய்வோருக்கு வழி காட்டுவதாய் உள்ளது. நூலின் வரலாறு, உள்ளடக்கம், பதிப்புச் சிக்கல், முன்னைய பதிப்புநிலை என்பவற்றைப் பற்றிய முன்னோடி அறிவிப்பாக பதிப்புரையின் வரையறை அமையும்.

28. பாராட்டுரை :

பாராட்டுரை ஒரு செயற்பாட்டை அல்லது ஒருவரது வினைத்திறனைப் பாராட்டும் உரையாக அமைவது. இவ்வுரை காலம், இடம், சூழல், தகுதிப்பாடு நோக்கி ஆற்றப்படுவது. ஆனால் தற்காலத்தில் இவ்வுரை ஒரு ஒழுங்கற்று கேட்போரை அலுக்கவைக்கும் உரையாக மாறிவருகிறது. பாராட்டுரையில் ஒரு ஒழுங்கமைப்பு பேணப்பட வேண்டும். பாராட்டப்படுவர் எதற்காக இத்தகைய சிறப்பைப் பெறுகிறார் என்பதை எல்லோரும் அறியவைப்பதே இவ்வுரையின் இலக்காகும். எனவே பாராட்டுப்பெறுபவரின் பண்பு நலன்களை வரையறை செய்து பகுப்பு நிலையில் உரையினை ஆற்றுவதே சாலச்சிறந்தது. பாராட்டுரை செய்வோர் புலமையும் மரபு நிலையும் அறிந்தவராக இருக்கவேண்டும்.

29. பிரார்த்தனை உரை :

'பிரார்த்தனை' என்ற வடசொல் வழிபாடு என்ற தமிழ்ச்சொல்லின் பொருள் தருவது. கிறிஸ்தவ சமயத்தின் செல்வாக்கால் தமிழில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. சமயம், அறிவூட்டலாக நடைபெறும் போது இவ்வுரை ஆற்றப்பட்டது. தமிழர் வாழ்வியலில் வழிபாட்டு நடைமுறையில் இசையும் நடனமும் இணைந்திருந்தன. இன்னும் மடைபோடும் நிலையில் செயற்பாடு தொடர்ந்தபோது கூட்டு

வழிபாடு நடைபெற்றது. சமயக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறும் மரபு இருக்கவில்லை. வழிபாடு வாழ்வியலோடு இறுக இணைந்திருந்தமையால் உரைசெய்து உணர்த்த வேண்டிய நிலை தேவைப்படவில்லை. ஆனால் பிறசமயங்கள் தமது சமயக் கருத்துக்களைப் போதனை மூலம் பரப்பமுற்பட்ட போது பிரார்த்தனை உரை தோன்றியது. இவ்வுரையின் வரையறை 'சமயப்பரப்பல்' என்பதாகவே அமைந்திருந்தது.

30. பொழிப்புரை :

செய்யுள் நடையை விளக்கும் நிலையில் அதன் பொருளை மேலோட்டமாக உரைப்பது பொழிப்புரையாகும். சுருக்கமான உரையாக அமைவது இதன் இயல்பாகும். செய்யுளின் பொருளை மட்டும் கூறுவதே இந்த உரையின் வரையறையாகும்.

32. முகவுரை :

நூலாக்கத்தில் முதலில் அமைவது இவ்வுரை. நூலின் ஆக்கத்தின் நோக்கம், இலக்கு பயன், தேவை என்பவற்றைச் சுருக்கமாக எழுத்து நிலையில் தருவது இவ்வுரையாகும். இதனை முன்னுரை எனவும் அழைக்கும் மரபும் உண்டு, முகம்போல் அமைவதால் முகவுரை என்றும் முன்னே அமைவதால் முன்னுரை எனவும் வெவ்வேறு பெயர் கொண்டு அழைக்கப்பட்டன.

35. வரவேற்புரை :

பொது நிகழ்வுகளில் நடத்தப்பெறும் உரையான 'வரவேற்புரை' இன்று ஒரு இன்றியமையாத உரையாகப் பயன்படுத்தப்படுகிறது. விழாவில் பங்கு கொள்ளும் அனைவரையும் விளித்து அவர்களைத் தனித்தனியே வரவேற்கும் நீண்ட உரையாகவும் மாறிவருகிறது. இந்த உரையை சுருக்கமாக ஆற்ற வாய்ப்புண்டு. தலைவர், சிறப்பு வருகையாளர், பார்வையாளர் என்ற பாகுபாடு எல்லோரையும் அடக்கி நிற்க அவர்களை வரவேற்று உரையாற்றும் போது ஒழுங்கு நிலையொன்று தானாகவே பிறக்கும். உரையளவும் சுருக்கம் பெறும். சிறப்பு வருகையாளர் தம்மைத் தனித்தனியே விளித்துப் பாராட்டவில்லையே எனக்குறைப்பட வேண்டியதில்லை. விழாவின் தலைவர் அவர்கள் உரையாற்ற வரும் போது சிறப்புவருகையாளர் ஒவ்வொருவருடைய தகுதிப்பாட்டையும் சிறப்பு நிலையையும் எடுத்து உரைக்கக் கடமைப்பட்டவராவார்.

36. வழக்குரை :

வழக்குரை காதை என்ற சிலப்பதிகாரத்தில் அமைந்த காதை ஒன்று இவ்வுரையின் பண்பையும் வரையறையையும் காட்டுகிறது. தற்காலத்தில் 'வழக்காடு மன்றம்' என்ற பொது நிகழ்விலே இவ்வுரை ஆற்றும் நிலை காணப்படுகிறது. முரண்பாட்டைத் தெளிவுபடுத்துவதே இவ்வுரையின் வரையறையாகும். உரைக்கும் ஆற்றலும் மொழித்திறனும் இவ்வுரை ஆற்றுவோரின் இன்றியமையாத தகைமைகளாகும்.

37. வாழ்த்துரை :

வாழ்த்துரையும் இன்று பேச்சு நிலையிலும் எழுத்து நிலையிலும் பயன்பட்டு வருகிறது. வாழ்த்துரை செய்வோர் தகுதிப்பாடு பற்றிய சிக்கலும் உண்டு. ஒரு நல்ல முயற்சியை அல்லது ஒருவரது செயற்பாட்டை வாழ்த்தும் மரபு பண்டு தொட்டே நடைமுறையாக உள்ளது. ஔவையாரது 'வரப்புயர' என்ற குறுகிய வாழ்த்துரை நல்ல எடுத்துக்காட்டாகும். தொடர்புடையோர் சுருங்கிய சொற்களில் நிறைவான பொருள் பொதிந்து வாழ்த்துரை செய்வதே நன்று. வாழ்த்துரை நினைவில் நிற்க வேண்டிய உரை, செய்யுள் வடிவிலும் வாழ்த்துப்பா என வழக்கிலுண்டு. முதுமையும் அனுபவமும் தெளிந்த உள்ளமும் புலமையும் வாழ்த்துரை செய்வோரின் தகுதிப்பாடாகும். வாழ்த்தப்படுவோர் அதை நினைத்து என்றும் வாழவேண்டும் என்பதே அதன் வரையறையாகும்.

39. விமர்சன உரை :

கருத்தரங்கு நிலையிலும் நூல்வெளியீட்டு நிலையிலும் இவ்வுரை ஆற்றப்படு

கிறது, குறை, நிறை, முரண்பாடு என்பவற்றை ஒழுங்குபட வகைப்படுத்தி ஆற்றப்படும் உரையென்பதால் புலமையோரால் மட்டுமே செய்யப்படுவது. காய்தல், உவத்தல் இன்றிச் செய்யப்பட வேண்டும். பிற நாடுகளில் இவ்வுரை எழுத்து நிலையிலே நூலில் இணைந்து வெளிவரும் நிலையுண்டு.

42. விருத்தியுரை :

இவ்வுரை தற்காலத்து விளக்கவுரை, வியப்புரை, விரிவுரை என்பவற்றின் பண்புகளையெல்லாம் உள்ளடக்கிய உரையாய் அமைவது. நன்னூல் இவ்வுரை பற்றிய விளக்கத்தை வருமாறு தருகிறது.

'' சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி '' (நன் : 23)

சூத்திரத்தின் பொருளை மட்டுமன்றி மேலதிகமாகத் தேவைப்படும் விளக்கங்களையும் கொடுத்து தன்னுரையாலும் பிறருரையாலும் தெளிவாய் உரைப்பது. முன்னர்க் கூறிய காண்டிகையுரை உறுப்புகளையும் கொண்டு உண்மையான பொருளைத் தெளிவுபடுத்தி ஐயமில்லாத நிலையில் அமைக்கும் உரையே விருத்தியுரை. இவ்வுரை விரிவாக அமையும் உரையாகும்.

44. வெளியீட்டுரை :

நூல்வெளியீட்டு நிகழ்வில் ஆற்றப்படும் உரை இது. வெளியீட்டின் நோக்கையும் இலக்கையும் சுட்டி நூலின் தகுதிப்பாட்டை எடுத்துக் காட்டுவது இவ்வுரையின் பண்பும் பயனுமாகும். உரை நிலையில் தகுதியும் புலமையும் பொருள் தெளிவும் உடையவரே இவ்வுரையை ஆற்றத் தகுதியுடையவராவார்.

மேற்காட்டிய விளக்கங்கள் யாவும் காலப் போக்கில் உரைவகைகள் வளர்ச்சி பெற்று வந்தவற்றை சுருக்கமாக காட்டுவனவே. பழையமரபு நிலையிலே எழுத்து நிலையிலே சிறப்புப்பாயிரம், பொதுப்பாயிரம், அவையடக்கம், பதிகம், முத்திரைக்கவி, வாழ்த்துப்பா எனச் செய்யுள் நடையிலே உரைகள் பயன்பட்டன. அவை உரை செய்வோர்க்குப் பல்துறைப்புலமை மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்த்தி நின்றன. இதனை உரைமரபுகள் என்னும் நூல்வருமாறு இக்கால உரைநடையில் தெளிவுபடுத்தியுள்ளது.

''ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக்கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற காலவறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும் இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் என்ற சமுதாய அறிவும் இத்தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும் நாட்டின் வரலாற்றறிவும் இன்ன பிறவும் இருந்தால்தான் உரையெழுதும் போது நினைவுக்கு வந்தால் தான் பொருளை முரணின்றிக் காணமுடியும்.''

இக் கூற்று பேச்சு நிலை உரைக்கும் முற்றிலும் பொருந்தும். எதிர்காலத்தில் தமிழ்மொழி உலக அரங்கிலே சிறப்புடைய ஒரு மொழியாகத் திகழ்வதற்கு இவ்வுரைகளின் பதிவுகள் துணைநிற்கும். தமிழ்மொழி அறிவூட்டல் பணியின் தொடர்ச்சியை செவ்வனே நாம் செய்வதற்கும் உரைகள் பற்றி தெளிவு பெரிதும் வேண்டப்படுவது. எனவே தற்கால உரைகள் பற்றிய உணர்வை எல்லோரும் பெற்று கருத்துரை வெளியிடும் முனைப்புப் பெறுவார்களாயின் அதுவே இக்கட்டுரை ஆக்கத்தின் பயன் எனக் கருதுகிறோம்.

உ

# பண்டைய ஈழத்தில் தாய்த்தெய்வ வழிபாடு ஒரு வரலாற்று நோக்கு

**பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்கள்**
*தலைவர், வரலாற்றுத்துறை,*
*யாழ். பல்கலைக் கழகம்.*

தாய்த்தெய்வ வழிபாடானது இன்று உலகில் நிலைத்திருக்கும் வழிபாட்டு நெறிகளில் மிகப்பழமையானது என்பது மானிடவியலாளர் கருத்தாகும். காரணம் மனித நாகரிக வளர்ச்சியில் தாய்வழிச் சமுதாய அமைப்பு முறையே ஆதியானதாகும். உலகில் இவ்வழிபாடு கற்காலந் தொடக்கம் நதிக்கரை நாகரிகங்கள் வரை பரந்திருந்தது. இதனால் இந்திய நாகரிகத்திற்கு வித்திட்ட நதிக்கரை நாகரிகமாகிய சிந்துவெளி நாகரிகத்திலும் இது கால்கொண்டிருந்தமை வியப்பன்று. சிந்துவெளி நாகரிகத்திலோ எனில் இரு படைகள் காணப்படுகின்றன. முதலாவது படை இந்நாகரிகம் முதிர்ச்சிபெற முன்னர் வளர்ச்சிபெற்ற கிராமிய கலாசாரமாகும். இதன் அம்சங்கள் தான் சிந்துவெளி நாகரிகமாகப் பிற்காலத்தில் வளர்ச்சிபெற்று முதிர்ச்சி பெற்றன. இவற்றின் தோற்றம் இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இவற்றில் மட்டுமன்றிப் பின்னர் வளர்ச்சி பெற்ற சிந்துவெளி நாகரிகத்திலும் தாய்த்தெய்வ வழிபாடு முக்கியம் பெற்றிருந்ததற்கான தொல்லியற் சான்றுகள் உள. இந்நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் தாய்த்தெய்வம் சித்திரிக்கப்பட்டுள்ளதோடு இவ்வழிபாட்டை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சுடுமண்ணினாலமைந்த பாவைகளும் இங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பாவைகள் பல்வேறு பாவனைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. எனினும் சிந்துவெளி முத்திரைகளில் இடம் பெற்றுள்ள எழுத்துக்கள் வாசிக்கப்படாத நிலையில் இவ்வழிபாடுபற்றி விரிவாக நாம் அறிய முடியாதுள்ளது.

இருந்தும் சிந்துவெளி நாகரிகத்திற்குப் பின்வந்த ஆரியரது முதல்வேதமாகிய இருக்கு வேதத்தில் தாய்த்தெய்வ வழிபாடு முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆண் தெய்வங்களுக்கே முதன்மையான இடம் அளிக்கப்பட்டது. அத்துடன் இதில் சிந்துவெளி மக்கள் மட்டுமன்றி அவர்களின் வழிபாட்டு மரபுகளும் எள்ளிநகையாடப்பட்ட நிலையும் காணப்படுகிறது. எனினும் கங்கைச் சமவெளியில் பகை உணர்வு நீங்கிச் சிந்துவெளிக் கலாச்சாரத்தினோடு இணைந்தபோது சிந்துவெளி வழிபாட்டு நெறிகள் ஆரிய வழிபாட்டில் முக்கியம் பெற்றன. சிந்துவெளி மக்களது உருவ, பூசை வழிபாடுகளோடு, தாய்த்தெய்வங்களும் முதன்மைபெற்றன. பிற்பட்ட வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் துர்க்கை, உமா, அம்பிகா, பார்வதி, இலட்சுமி, சரஸ்வதி, காளி போன்றன முக்கியம் பெற்றன. இதனால் சிந்துவெளி மக்களாகிய திராவிட மக்களது சமய நம்பிக்கைகளும் வேதங்களை யாத்த ஆரியரின் சமய நம்பிக்கைகளும் சங்கமமாகி அகில இந்திய ரீதியில் செழித்துப் பரந்த நிலை ஒன்றையே காணமுடிகிறது.

மேற்கூறிய நிலை தமிழகத்திலும் மட்டுமன்றி ஈழத்திலும் காணப்பட்டது. பழைய திராவிட சமய நம்பிக்கைகளும் மரபுகளும்

ஆரிய சமய நம்பிக்கைகளின் தாக்கத்திற்கு உள்ளாகின. துர்அதிஷ்டவசமாகத் தமிழகத்தில் சங்க இலக்கியங்கள் காணப்படுவது போல் ஈழத்தில் பழந்தமிழ் இலக்கியங்கள் காணப்படவில்லை. அத்துடன் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்தம் இங்கு கால் கொள்ள முன்னர் தமிழகத்தை ஒத்தசமய நம்பிக்கைகள் ஈழத்தில் காணப்பட்டாலுங்கூட இவற்றை இலக்கியங்களில் கோவைப் படுத்தும் மரபும் இந்துக்களிடையே காணப்படவில்லை. கிடைக்கும் தமிழ் நூல்களும் காலத்தால் பிந்தியவையே. இதனால் ஈழத்தின் பௌத்த மத வரலாற்றை எடுத்துரைக்கும் பாளி நூல்களான மகாவம்சம், தீபவம்சம் போன்ற நூல்களிலே காணப்படும் குறிப்புகள் தான் இந்துமத நம்பிக்கைகள் பற்றி அறிவதற்கு உதவும் பிரதானமான இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. இவைகூடப் பௌத்தமதக் கண்ணோட்டத்தில் யாக்கப்பட்டுள்ளதோடு பௌத்தம் சாராத இந்துமதம் போன்றவை தவறான சமய நம்பிக்கைகள் என்ற நோக்கில் இவற்றை யாத்ததால் இவற்றின் பங்களிப்பும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே உள்ளது. அதுமட்டுமன்றி ஆரியரது வடமொழி இலக்கியங்கள் எவ்வாறு ஆரியருக்கு முந்திய வழிபாட்டு நெறிகளை மிகவும் துவேஷ உணர்வுடன் குறிப்பிட்டனவோ, அவ்வாறேதான் ஈழத்துப் பாளி நூல்களிலும் பண்டைய இந்துசமயத்தைப்பொறுத்த மட்டில் இவ்வுணர்வு காணப்பட்டது என்பதை இலக்கியங்கள் அல்லாத பிற தொல்லியல் சான்றுகளாகிய சுடுமண் பானைகள் கல்வெட்டுகள், நாணயங்கள் ஆகியன உறுதி செய்கின்றன. இத்தகைய சான்றுகளை ஒருங்கிணைத்து நோக்கும்போதும், தமிழகத்தைப் போன்றே ஈழத்தின் நாகரிகத்திற்கு வித்திட்டவர்கள் இன்றைய தமிழ்-சிங்கள மொழிகளைப் பேசுவோரின் மூதாதையினரான திராவிடரே என்பதை அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துவதை அவதானிக்கும் போதும் (சிற்றம்பலம் சி. க. 2000, 2001) தமிழகப் பின்னணியில் இவற்றை அலசும் போதும் வடமொழி இந்துக்கலாச்சாரத்தின் தாக்கம் ஈழத்தின் திராவிட மக்களின் சமய நம்பிக்கைகளிலும் காணப்பட்டது உறுதியாகின்றது. இக்கட்டுரையின் கருப்பொருளாக கிறிஸ்த்து பிறப்பதற்கு முன்னருள்ள காலப் பகுதியில் நிலவிய தாய்த்தெய்வ வழிபாட்டமிசங்களே விளங்குகின்றது.

ஈழத்திலும் பௌத்தம் இங்கு கால் கொண்ட போது நிலவிய வழிபாட்டு நெறிகளில் தாய்த்தெய்வ வழிபாடும் ஒன்றாகும். (சிற்றம்பலம் சி. க. 1996). இவ்வழிபாட்டிற்குரியவர்கள் தாய்வழிச் சமுதாய அமைப்பினைப் பேணிய இன்றைய தமிழ் சிங்கள மொழிகளைப் பேசும் மக்களின் மூதாதையினர் ஆகும். இவ்வழிபாடுதான் பாளி இலக்கியங்களில் 'யக்ஷி' வழிபாடு என விளிக்கப்படுவதோடு இவ்வழிபாட்டைப் பௌத்தம் தன்னுடன் இணைத்துக் கொண்டதை எடுத்துக் காட்டும் விதத்தில் பௌத்த தாதுகோபுரங்களில் காணப்படும் யக்ஷி உருவங்கள் காணப்படுகின்றன. பொதுவாகப் பிரசார மதமாகிய பௌத்த மதம் கால் கொண்ட நாடுகளிலெல்லாம் இது கால்கொள்ளுவதற்கு முன்னர் வழக்கிலிருந்த வழிபாட்டு நெறிகளைத் தனது வழிபாட்டு நெறிகளோடு இணைத்ததன் மூலம் அம்மக்களது வழிபாட்டில் தனித்துவத்தை இழக்கச் செய்து காலகதியில் அதனை மழுங்கடிக்கச் செய்ததும் வரலாறாகும். இத்தகைய ஒரு போக்கில் எச்சமாக விளங்குவதுதான் பாளி நூல்கள் குறிப்பிடும் லக்ஷித் தெய்வங்களும் பௌத்த மத வழிபாட்டிடங்களில் காலத்தால் மறைந்து இன்று எச்சசொச்சமாக விளங்கும் யக்ஷி உருவச் சிலைகளுமாகும்.

முதலில் பௌத்த இலக்கியங்களான மகாவம்சம் போன்றவற்றில் இடம் பெற்றுள்ள லக்ஷி வழிபாடு பற்றிய சான்றுகளை ஆராய்வோம். இத்தகைய சான்றுகள் கி. மு. 4ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்ததாகக் கூறப்படும் பண்டுகாபய மன்னன் காலத்திலிருந்தே கிடைக்கின்றன. இம்மன்னன் குதிரை முகத்தினை உடைய சேத்திய என்ற யக்ஷிக்கு அரண்மனையில் கோயில் அமைத்து வழிபட்டதை மகாவம்சம் குறிப்பிடுகிறது. (M. V. X. 86) இத்தகைய குதிரை முகத்தினை

யுடைய யக்ஷி உருவங்கள் இந்தியாவி லுள்ள பௌத்த மதக் கலைப்பீடங்களாகிய பாருட், சாஞ்சி, புத்தகாயா ஆகிய இடங் களிற் காணப்படுகின்றன. அம்பாளின் பல் வேறு மூர்த்தங்களில் குதிரை முகத்தினை யுடைய மூர்த்தமும் ஒன்று என்பது ஈண்டு நினைவுகூரற்பாலது. இதனால் அம்பாளே பௌத்த நூல்களில் இவ்வாறு விளிக்கப் பட்டுள்ளாள் எனலாம். மேலும் பண்டு காபய மன்னன் அநுராதபுர நகரின் தெற்கு வாசலில் 'சித்த' என்ற யக்ஷிக்கும், மேற்கு வாசலில் 'பச்சிமராஜினி' என்ற யக்ஷிக் கும் வழிபாட்டிடங்கள் அமைத்த செய்தி மகாவம்சத்திலும் (M. V. X. *85-90*) உண்டு. தாய்த்தெய்வங்களாகிய மேற்கூறிய தெய் வங்கள் அநுராதபுரத்தின் காவல் தெய்வங் களாக விளங்கியிருக்கலாம். காரணம் நகர் களின் காவல் தெய்வங்களாகத் தாய்த் தெய்வங்கள் விளங்கியதைச் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற நூல்கள் எடுத்தி யம்புகின்றன. இத்தகைய காவல்தெய்வங் களில் துர்க்கை முன்னணியில் இருந்ததைச் சிலப்பதிகாரம் எடுத்தியம்புகின்றன. துர்க்கை மதுராபதித் தேவதை எனச் சிலப் பதிகாரத்தின் 23வது காதையில் விளிக்கப் படுகிறாள். இந்நூலின் இன்னோரிடத்தில் இம் மதுராபதித்தேவதை மகாலஷ்மி, மகா சரஸ்வதி, மகாதுர்க்கை ஆகிய தெய்வங்க ளின் அம்சங்களை உடையவளாகக் குறிக் கப்பட்டுள்ளதைப் பின்வரும் செய்யுள் எடுத் தியம்புகின்றது. (சிலப்பதிகாரம் - மதுரைக் காண்டம்) அஃதாவது

மாமகளு நாமகளு மாமயிடற் செற்றுகந்த
கோ மகளுந் தாம்படைத்தகொற்றத்தாள்-நாம
முதிரா முலை குறைத்தான்முன்னரே வந்தாள்
மதுரா பதி என்னு மாது.

சிலப்பதிகாரத்தைப் போன்றே மார்க்கண் டேய புராணமும் துர்க்கையைச் சரஸ்வதி, லஷ்மி ஆகிய தெய்வங்களுடன் இணைத் துக் கூறுவதும் ஈண்டு நினைவு கூரற்பா லது. மணிமேகலையில் காணப்படும் சம்பா பதித் தெய்வம் பற்றிக் காணப்படும் வர்ண னையும் துர்க்கையைக் குறிப்பிடுகிறது. (Nagaswamy R. 1982: *16*) மேற்கூறிய செய்திகள் தாய்த்தெய்வங்கள் நகரின் காவல் தெய்வங்களாக தமிழகம் - ஈழம் ஆகிய பகுதிகளில் விளங்கியதை எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் இவ்வழிபாட் டின் தொன்மையை மகாவம்சம் போன்ற பாளி நூல்களில் 'யக்ஷி' வழிபாடு பற்றிக் காணப்படும் செய்திகளும் உறுதி செய்கின் றன. கால வெள்ளோட்டத்தில் தப்பிப் பிழைத்த இவற்றின் எச்சங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம், வவு னியா மாவட்டத்திலுள்ள மாமடுவ, மாத் தளை மாவட்டத்திலுள்ள இலுக்வேவ, புத்தள மாவட்டத்திலுள்ள தப்போவ மருதன் மடுவ, அரிப்பு, அம்பாறை மாவட் டத்திலுள்ள நவக்கிரிஆறு ஆகிய இடங்க ளிற் காணப்படுகின்றன (Deraniyagala P. E. P., *1960: 91-95, 1961: 249-276*) இத்தகைய சுடுமண் பாவைகள் மேலேகுறிப் பிட்ட கல்லிலமைந்த யக்ஷி உருவங்கள் போலன்றி விகாரமான தோற்றமுடை யவை. இவை மக்கள் மத்தியில் கலையுணர் வுடன் வளர்ச்சி பெறாது வழக்கிலிருந்த கிராமியக்கலை மரபைப் பிரதிபலிப்பன வாக இருக்கலாம். இத்துடன்முழுமையான உருவங்களாகச் சித்திரிக்கப்படுவதற்குப் பதிலாக இவற்றின் உடலின் அரைப்பகுதி மட்டுமே சித்திரிக்கப்பட்டுள்ளது. சில உரு வங்கள் முழுக்க முழுக்க மண்ணினாலமைய சிலவற்றின் உட்பகுதி கோறையாகவே காணப்படுகிறது. தலையலங்காரங்கள். சிலவற்றுக்குண்டு. சில பாவைகளின் உதடு கள் விகாரமாய் அமைந்துள்ளன. இவற் றின் கண்கள், மார்புகள் ஆகியன தனித் தனியாகச் செய்யப்பட்டு ஒட்டப்பட்டுக் காணப்படுகின்றன. அக்காலத்தில் வழக்கி லிருந்த கிராமியக்கலையின் எச்சங்களாக விளங்கும் இவை அக்காலத் தாய்த்தெய்வ வழிபாட்டினைப் பிரதிபலிப்பனவாகவும் அமைகின்றன எனலாம்.

மேற்கூறிய சான்றுகளுக்கு அணிசேர்ப் பனவாக அமைவது தான் ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டுகளாகிய பிராமிக் கல் வெட்டுகளாகும். இவை கிறிஸ்து பிறப்ப தற்கு முன்னாக உள்ள காலப்பகுதியைச் சேர்ந்தவை. பௌத்தம் இங்குகால்கொண்ட போது இதற்கு வழங்கப்பட்ட குகைத்தா னங்களைக் குறிக்கும் இவற்றிற் காணப்

படும் பெயர்கள் இம்மக்கள் புதிய மதத்தைக் கைக்கொள்ள முன்னர் கடைப்பிடித்த சமய நம்பிக்கைகளின் எச்சமாக விளங்குகின்றன. பொதுவாக அக்காலத்தில் தெய்வங்களின் பெயர்களை மையமாகக் கொண்டே பெயரிடும் வழக்கம் காணப்பட்டது என்பதை இவை உறுதி செய்கின்றன. இப்பெயர்களாக துர்க்கை (துக) காளி (கடி), கார்த்திகா (கதி), மீனாட்சி (மசக), கௌரி (குர), அம்பிகா (அபிக), பத்மா (பதும), லக்ஷ்மி (லஸி), ஸிரி (திரு) ஆகியன இவற்றுள் இடம்பெற்றுள்ளன. துர்க்கை என்ற பெயருடன் காணப்படும் கல்வெட்டொன்று மாத்தளை மாவட்டத்திலுள்ள என்டேர கலவில் (Paranavitana, S, *1185*) கிடைத்துள்ளது. இது உபாசகனாகிய துகவின் குகை பற்றிக் கூறுகிறது. உபாசகன் என்றால் பௌத்தமத விசுவாசி எனப்பொருள் படும். இதனால் இக்கல்வெட்டை வழங்கியோன் முன்பொருகால் துர்க்கையின் பக்தனாக விளங்கியமை இதிலிருந்து தெரிகிறது. துர்க்கை என்றால் ஆபத்திலிருந்து பாதுகாப்பவள் எனப்பொருள்படும். இப்பெயர் ஆரியர் திராவிட கலாசாரத்தோடு சங்கமித்த காலப்பகுதியை எடுத்தியம்பும் பிற்பட்ட வேத இலக்கியங்களில் காணப்படுவதால் இத்தெய்வம் ஆரியருக்கு முன்னர் வழிபாட்டிலிருந்த ஆரியமயமாக்கப்பட்ட தெய்வம் என்பது பொருளாகும். இத்துர்க்கை தான் சங்க இலக்கியங்களில் கொற்றவை என விளிக்கப்படுகிறாள். காரணம் கொற்றவையும் துர்க்கை போன்று கானமர்ச் செல்வியே எனச் சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய அகநானூறு (345) குறிக்கிறது. கொற்றி என்றால் வெற்றி எனப் பொருள்படும். இதனால் வெற்றித் தெய்வமே இவளாகும். திருமுருகாற்றுப் படையில் (258) முருகன் 'வெற்றிவேல் போர்க் கொற்றவைச் சிறுவ' என அழைக்கப்படுகிறான். கொற்றவை பற்றிய சான்றுகள் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படாவிட்டாலுங்கூட முருக வழிபாட்டை எடுத்தியம்பும் எச்சங்களான முருகனது வேல் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னருக்கு காலப்பகுதியைச் சேர்ந்த குடியிருப்புகளில் மட்டுமன்றி நாணயங்களிலும் பிராமிக் கல்வெட்டுகளில் பல்வேறு நாமங்களுடனும் முருகன் அழைக்கப்பட்டுள்ளதால் முருகனது தாயாகிய கொற்றவையின் வழிபாடும் அக்காலத்தில் இங்கு நிலவியிருந்தது எனலாம். மணமாகாத நிலையிற் கருவுற்று மகப்பேறும் மரபு மிகப் பண்டைய மரபாகும். இத்தகைய ஒரு பழைய மரபின் பிரதிபலிப்பே கொற்றவை - முருகன் பற்றிய ஐதீகமாகும். 'பழையோள்' 'கானமர் செல்வி' ஆகியன இவளின் பிற நாமங்களாகும்.

துர்க்கை, கொற்றவை ஆகிய தெய்வங்களின் பண்பைப் பெற்றவளே காளியுமாகும். இக்கல்வெட்டுகளில் இரு இடங்களில் வரும் 'கடி' என்ற குறிப்புகாளியையே குறிக்கிறது என இவற்றைப் பதிப்பித்த பரணவிதானா கருதுகிறார். (Paranavitana. S. *1970*) இவற்றுள் முதலாவது கல்வெட்டு அநுராதபுர மாவட்டத்திலுள்ள பில்லாவெகல என்ற இடத்தில் உள்ளது. (Paranavitana, S, *1970: 1118*) இதில் காளியின் வழிபாட்டிற்குரியவள் எனப்பொருள் தரும் 'கடி' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. மாத்தளை மாவட்டத்திலுள்ள மற்றைய கல்வெட்டில் (Paranavitana S. *1970; 867*) 'பருமக கடிய புத' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. பருமகன் என்ற விருதினை உடைய காளியின் பத்தனின் மகன் என்பது இதன் பொருளாகும். காளியும் துர்க்கைகொற்றவை போன்று எந்தவொரு ஆண் தெய்வத்துடனும் இணைந்திருக்கவில்லை. பின்னர்தான் இவள் சிவனுடன் இணைக்கப்பட்டாள். சுடலை ஆண்டியாகிய சிவன் போன்று இவள் உறையும் இடமும் சுடுகாடே. இக்காளியை மணிமேகலை விந்தியாவாசினி, மயானவாசினி எனக் குறிப்பது காளி கொற்றவை, துர்க்கை ஆகிய தெய்வங்களுக்கிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. சிலப்பதிகாரம் கொற்றவையின் பிற நாமங்களாக அமரி, குமரி, கௌரி, சமரி, ஐயை, சூலி, நீலி, சங்கரி, சுந்தரி, கலைமகள், செல்வி, விண்ணோர்பாவை, வானநாடி ஆகியனவற்றைக் குறிப்பிடுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் கௌரிபற்றிப் பிராமிக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள குறிப்பு அவதானிக்கத்தக்கது. அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள சிதுல்பவுவ என்ற இடத்தில் கிடைத்துள்ள இதில் கௌரி 'குர' என விளிக்கப்பட்டுள்ளாள். (Paranavitana S. *1970: 606*) இதன் வாசகம் 'உபஸிக குரய லெணெ' என்பதாகும். இதன் பொருள் பௌத்த மத விசுவாசியாகிய கௌரியின் குகை ஆகும்.

கார்த்திகைப் பெண்களின் வழிபாட்டை உறுதிசெய்யும் இரு கல்வெட்டுகள் முறையே மிகுந்தலை, கொசவகந்வ ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. (Paranavitana. S. *1970 : 4, 193* ) கார்த்திகா என்ற நாமந்தான் இவற்றுள் 'கிதக', 'கதி' என இடம் பெற்றுள்ளது எனப் பரணவிதானா கருதுகிறார். மிகுந்தலைக் கல்வெட்டு கார்த்திகைத் தெய்வத்தினை வழிபடுபவளின் குகை என்ற பொருளைத்தரும் வாசகத்தினைக் கொண்டுள்ளது. கார்த்திகாவின் மற்றொருவடிவந்தான் 'கிருத்திகா' ஆகும். இதன் மருவுதலே 'கிதக' ஆகும் எனப் பரணவிதானா கருதுவது பொருத்தமாகத் தெரிகிறது. கொசவகந்தவிலுள்ள மற்றொரு கல்வெட்டுத் தேவர்களுக்குப் பிரியமான மகாராஜகமணி அபயவினது அழகிய மனைவியாகி 'கதி' பற்றிக்கூறுகிறது. ஆரியரது கலாசாரப் படர்க்கைக்கு முன்னர் வழிபாட்டிலிருந்த பெண் தெய்வங்களின் வரிசையில் கார்த்திகைப் பெண்களும் இடம் பெறுகின்றனர் எனலாம். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட கார்த்திகேயன் வழிபாடுகூட இதிகாச காலத்திற்றான் வைதீக பௌராணிக மதத்திற் புகுந்தது. முருகனுக்கும் இப்பெண்களுக்கும் உடைய தொடர்பு கொற்றவைக்கும் முருகனுக்குமுள்ள தொடர்பு போன்றதாகும். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் கன்னித் தெய்வங்கள் இக்கார்த்திகைத் தெய்வங்களை நினைவூட்டுகின்றன. 'சப்த மாத்திரிகைகள்' (ஏழு கன்னியர்களின்) வழிபாட்டிற்கும் கார்த்திகைப் பெண்களின் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாம்.

பிராமிக் கல்வெட்டுகளில் ஈரிடங்களில் மீனாட்சி பற்றிய குறிப்புண்டு. அங்கயற்கண்ணியின் வடமொழி வடிவமே மீனாட்சியாகும். 'மசக' என இக்கல்வெட்டுகளில் இடம்பெறும் வடிவம் 'மற்சியாக்ஷி' என்ற வடமொழி வடிவத்தின் பிராகிருத வடிவம் என்பது பரணவிதானாவின் கருத்தாகும். இவ்விரு கல்வெட்டுகளும் மாத்தளை மாவட்டத்திலுள்ள தம்புல்லவில் உள. (Paranavitana. S *1970: 855, 857*) முதலாவது கல்வெட்டில் 'உபஸிக மசகய லெணெ' என்ற குறிப்புள்ளது. இதன் பொருள் மசக என்ற பெயரைத் தாங்கிய பௌத்த மதப் பெண் துறவியின் குகையாகும். மற்றைய கல்வெட்டில் 'மசக ஸமணிய லெணெ' என்ற வாசகம் உளது. பெண் துறவியாகிய மசக என்ற பெயரைத் தாங்கியோளது குகை என்பதே இதன் பொருளாகும். அநுராதபுர மாவட்டத்திலுள்ள மிகுந்தலைக் கல்வெட்டில் (Paranavitana. S. *1970: 37*) 'மஉறபிக என்ற பதம் காணப்படுகிறது. மகா அம்பிகாவின் மருவுதலே இது எனக் கொள்ளப்படுகிறது. இக் கல்வெட்டுத் தீபராஜவினது மகளாகிய 'மகா அம்பிகா' வின் குகை என்பதைக் குறிப்பிடுகிறது. மகாதேவி, 'மகாசக்தி' போன்றவற்றை ஒத்த பதமே மகா அம்பிகா ஆகும். சிவனை அடைமொழியுடன் சேர்த்து மகாசிவன் எனவும் லஷ்மியை அடைமொழியுடன் சேர்த்து மகாலஷ்மி எனவும் அழைப்பதனை நோக்கும்போது இப்பதமும் அம்பிகைக்கு (அம்பாள்) உரிய பதமாக இக்கல்வெட்டில் இடம்பெற்றிருக்கலாம் எனக் கொள்ளலாம். அம்பிகா என்ற பதம்கூட ஆரியரது மிகப் பழைய வேதமாகிய இருக்கு வேதத்திற் காணப்படவில்லை. பிற்பட்ட வேதங்களில் உமை, துர்க்கை, லஷ்மி போன்ற தெய்வங்களுடன் காணப்படுவதால் இதனையும் ஆரிய வழிபாட்டு நெறிகளுக்கு முன்னர் வழக்கிலிருந்த வழிபாட்டு நெறியாகக் கொள்ளலாம்.

திரு (ஸ்ரீ) பற்றிக் காணப்படும் இரு கல்வெட்டுகள் மாத்தளை மாவட்டத்திலுள்ளன. (Paranavitana. S. *1970: 819 868* ) நெலுவகந்தவிலுள்ள முதலாவது கல்

வெட்டில் பருமகனான பகதிஸவின் மகனாகிய 'திரிபல' (ஸ்ரீபால) பற்றிய குறிப்புளது. இதன் பொருள் திருவினால் பாதுகாக்கப்படுபவன் என்பதாகும். மற்றைய கல்வெட்டின் வாசகம் 'பருமக திரிபுத' ஆகும். இதன் பொருள் பருமகன் என்ற விருதுப் பெயரைத் தாங்கிய திருவின் புதல்வன் ஆகும். ஆனால் இவ்வடிவங்களைத் 'திரி' என வாசிப்பதற்குப் பதிலாகத் 'திரு' என வாசிப்பதே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. லஷ்மியையே சங்க இலக்கியங்கள் 'மா' எனவும் அழைக்கின்றன. திருமாலின் மனைவியாக இவள் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம். செல்வத்தின் தலைவியாகிய இவளது உருவம் வீட்டு வாசல் நிலைகளில் தீட்டப்பட்டிருந்ததை நெடுநல்வாடை (88–89) 'ஓங்கு நிலை வாயிற்றிரு நிலை பெற்ற தீதுதீர் சிறப்பு, என்ற அடிகளாற் குறிப்பிடுகிறது.

தாய்த்தெய்வத்தின் உருவம் பொறித்த நாணயங்கள் பலவும் ஈழத்தின் பலபாகங்களிலும் கிடைத்துள்ளன. (Sitrampalam S. K 1992: 51–58) நீள்சதுர வடிவிலான இவை பல்வேறு உலோகங்களில் அமைந்துள்ளன.எனினும் நாணயங்களின் அமைப்பு அளவு, எடை ஆகியவற்றுள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை கந்தரோடை, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, பூநகரி, முல்லைத்தீவு, அநுராதபுரம், சிலாபம், திஸ்ஸமகாராம (அக்குறுகொட), நிந்தவூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இந் நாணயங்களில் தாய்த்தெய்வம் பலவாறு பல்வேறு கோலங்களில் சித்திரிக்கப்பட்டாலும் இவற்றில் பிரசித்தமாக விளங்குவது கஜலஷ்மி உருவமாகும். இவற்றின் தோற்றம் கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய இரண்டாம் நூற்றாண்டாகும். இவற்றின் முன் பக்கத்தில் தாமரையிலுள்ள லஷ்மி உருவமும் பின்பக்கத்தில் தண்டுடன் கூடிய சுவஸ்திகாவும் உள. லஷ்மியின் பாதத்திலுள்ள தாமரை மலரிலிருந்து இரு தண்டுகள் லஷ்மியின் இரு பக்கங்களிலும் மேலெழுந்து தோள்வரை சென்று தாமரை மலர் பூத்துக் காணப்பட, இவற்றின் மேல் இரு யானைகள் தும்பிக்கையால் இத்தெய்வத்திற்கு அபிஷேகம் செய்வது போல் சித்திரிக்கப்பட்டுளது. சில சமயம் இத்தெய்வத்தின் பாதங்கள் நிலை கொண்டுள்ள தாமரை மலரிலிருந்து தாமரை மலருடன் கூடிய சில தண்டுகள் வெளிக்கிளம்புவதும் சித்திரிக்கப்பட்டுள்ளது. எனினும் அநுராதபுரத்திற் கிடைத்துள்ள நாணயங்களில் யானைக்குப் பதிலாகப் புள்ளிகளும், நிந்தாவூரிற்காணப்படும் நாணயங்களில் இத்தெய்வத்தின் பக்கத்திலே சில குறியீடுகளும் காணப்படுகின்றன. (சிற்றம்பலம் சி. க. 1993)

யானையுடன் காட்சி தரும்பெண் தெய்வம் பொறிக்கப்பட்ட நாணயங்களை கஜலஷ்மி நாணயங்கள் எனலாம். இவை ஸ்ரீ சூக்தத்தில் லஷ்மி பற்றி வரும் வர்ணனையைப் பெருமளவுக்கு ஒத்துள்ள (சிவசாமி வி. 1974) தாய்த்தெய்வத்தின் கலை அம்சம் கூட வேறுபட்டுக் காணப்படுகிறது. பெரும்பாலான நாணயங்களில் தாமரை மலரில் நிற்கும் தாய்த்தெய்வத்தின் இரு கரங்கள் பாதத்திலிருந்து தோள்வரை செல்லும் தாமரைத் தண்டினைப் பிடித்தவாறு சித்திரிக்கப்பட்டுளது. இத் தெய்வம் ஆடையற்ற நிலையிற் சித்திரிக்கப்பட்டாலும், சில நாணயங்களில் ஆடை அணிந்த நிலையும் உண்டு. தெய்வத்தின் தோற்றத்திற் கூட வேறுபாடுகள் உள. சிலவற்றுள் தட்டையான மார்பும் அகன்ற இடையும் காணப்பட இன்னுஞ் சிலவற்றுள் திரண்ட மார்பும், ஒடுங்கிய இடையும் காணப்படுகிறது. பொதுவாக இத்தெய்வம் நேராக நிற்கும் பாவனையிற் காணப்பட்டாலும் சிலவற்றில் இடது அல்லது வலது பக்கம் திரும்பியவாறும் காட்சி தருகிறது. சில நாணயங்களில் ஒரு சில ஆபரணங்களுடன் இத்தெய்வம் காணப்பட இன்னுஞ் சிலவற்றுள் இத்தெய்வம் காதணி, கைவளையல், காற்சலங்கை போன்றவற்றை அணிந்தும் உளது. (புஷ்பரட்ணம். பரமு 2001)

கஜலஷ்மி உருவத்தில் காணப்படும் யானை கூட மலைவளத்தின் சின்னம் என்ற ஐதீகம் உண்டு. இது மேலும் லஷ்மியின் செழுமைத் தத்துவத்தை உணர்த்துகிறது எனலாம். அத்துடன் யானையும் அரச பலத்தின் சின்னம்கூட அரசனுக்கு யானைப்

படை அதிக பலத்தினைக் கொடுப்பதால் பலமான அவனது ஆட்சி நாட்டிற்கு நல் வாழ்வையும் வளத்தையும் அளிக்கிறது எனலாம். இத்தகைய வளம், பலம், செழுமை ஆகியவற்றின் சின்னமே கஜலஷ்மி மூர்த்தமாகும். இத்தகைய கஜலஷ்மியின் உருவங்கள் கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட இந்தியப் பௌத்த கலைப்பீடங்களாகிய பாரூட், சாஞ்சி, புத்த காயா ஆகிய இடங்களிலுள்ள தோரணங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது அவதானிக்கத் தக்கது. சங்க நூல்களாகிய நெடுநல்வாடை (88-99) மதுரைக்காஞ்சி (353) ஆகியவற்றில் வீடுகளின் நிலைகளில் இவை பொறிக்கப்பட்டுள்ளமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஈழத்தின் பழைய தாதுகோபுரங்களிலுள்ள யக்ஷி உருவங்கள் சில தாமரை மலருடன் காட்சி தருவதும் இவ்வழிபாட்டின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். அபயகிரி விகாரையில் கையிற் தாமரை மலருடன் காட்சி தரும் யக்ஷி உருவமொன்றுண்டு (Paranavitana S. *1971*, Plate *9*) இவ்வாறே அபயகிரித் தாதுகோபுரத்திற் காணப்படும் யக்ஷி உருவங்கள் தாமரை மலருடன் காட்சியளிப்பதும் குறிப்பிடத் தக்கது. இவை கி. பி. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவாகும் Paranavitana. S., (1971, Plates, 4, 9, 12). இவற்றுள் சேதவனத் தாதுகோபுரத்தில் தாமரை மலரைக் கையிலேந்திக் காணப்படும் உருவம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

தாய்த் தெய்வம் பொதுவாக நிற்கும் நிலையில் சித்திரிக்கப்பட்டாலும் கூடச் சில நாணயங்களில் இருக்கும் நிலையிலும் இது சித்திரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக அநுராதபுரத்திற் காணப்படும் ஏழு நாணயங்களில் இருந்த நிலையில் இத்தெய்வம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதில் இதன் இடது கால் மடிந்தும், வலதுகால் தொங்க விடப்பட்டுமுள்ளதான பாவனை காணப்படுகிறது. இதன் ஒரு கை தொடையைத் தொட மற்றைய கை தோள் அளவு உயர்ந்து மலருடன் காணப்படுகிறது. தலை முடி விரிந்த நிலையில் இத்தெய்வம் சில நாணயங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது (Parker. H., 1984: 482-485) அநுராதபுரத்திற் கிடைத்த வட்ட வடிவிலமைந்த செப்பு நாணயங்களில் தாய்த் தெய்வம் பலவாறு சித்திரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று நிற்கும், இருக்கும் நிலையிலுள்ள ஆண் பெண் தெய்வங்களும் அநுராதபுர நாணயங்களில். காணப்படுகின்றன. (Parker. H. H., *482 - 487*), இவற்றுள் சித்திரிக்கப்படும் தாய்த் தெய்வம் சூலத்துடன் காட்சி தருவதால் இதனைத் துர்க்கை அல்லது காளியின் மூர்த்தமாகவும் கொள்ளலாம். இவ்வுருவங்கள் வழக்கமாக வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை ஆசனத்தில் மடித்து இருந்தவாறே இந் நாணயங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது ஈண்டு அவதானிக்கத்தக்கது.

இன்னும் சில நாணயங்களில் லஷ்மி நாணயங்களிற் காணப்படும் தாமரைத் தண்டிற்குப் பதிலாக வேல், சூலம், குத்து விளக்கு ஆகியனவும் காணப்படுகின்றன. இவ்வாறே பெண்தெய்வ உருவம் பொறித்த நாணயங்களின் பின் புறத்தில் வழக்கமாகத் தண்டுடன் கூடிய சுவஸ்திகா காணப்பட்டாலும் எல்லா நாணயங்களிலும் இச் சின்னம் மட்டும் பொறிக்கப்படவில்லை (புஷ்பரட்ணம் பரமு 2001 : 95). பூநகரிப் பகுதியிலுள்ள மண்ணித்தலையில் கிடைத்துள்ள நாணயத்தில் சுவஸ்திகாவுக்குப் பதிலாக வேலியிட்ட மரமும், நிந்தவூரிலுள்ள நாணயத்தில் சுவஸ்திகாவுடன் வேறு எட்டுச் சின்னங்களும் காணப்படுகின்றன. இச்சின்னங்களில் கொடிக்கம்பம், மத்தளம் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவ்வாறே பூநகரிப் பகுதியிலுள்ள ஈழவூர், மண்ணித் தலை ஆகிய இடங்களிற் கிடைத்த சில நாணயங்களில் சுவஸ்திகாவுடன் பூரண கும்பம், சிவலிங்கம், சக்கரம், விளக்கு ஆகியவற்றுடன் சில குறியீடுகளும் உள. கந்தரோடை, முல்லைத்தீவு போன்ற இடங்களிலுள்ள நாணயங்களில் சேவல், வேல், மயில், நந்தி பாதம் போன்ற போன்ற சின்னங்களும் உள. கந்தரோடையிற் கிடைத்த நாணயமொன்றின் பின் புறத்தில் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா

வுக்கு வலப்புறமாக ஸ்ரீவத்ஷாவும், இடப் புறமாகக் காளையும் காணப்படுகின்றது.

மேற்கூறிய நாணயங்களிற் சித்திரிக்கப் படும் சின்னங்கள் மட்டுமன்றிப் பௌத்தம் இங்கு கால்கொள்ள முன்னர் வழக்கிலிருந்த இந்து மதத்தின் எச்சங்களை உணர்த்து வனவாக மக்கள் வாழ் இருப்பிடங்களிற் கிடைத்துள்ள பானை ஓடுகளிலுள்ள குறியீடுகளும், பிராமிக் கல்வெட்டுகளி லுள்ள குறியீடுகளும் விளங்குகின்றன. மட்பாண்டக் குறியீடுகளில் மனித உருவம் குறியீடாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது ஆண் அல்லது பெண் தெய்வமாகவும் இருக் கலாம். இவற்றுள் உள்ள குறியீடு மனித உருவத்தை உருவகப்படுத்திச் சித்திரிக்கப் பட்டுள்ளது போல் நடுக்கோடும் மேலும் கீழுமாக இரு கோடுகளும் முறையே கை, கால் போன்றனவற்றைச் சித்திரிப்பனவாய் அமைந்துள்ளன. சில சமயம் இக்கோடு கள் நேர்க்கோடுகளாகவும் சில சமயம் கைகால்களின் மடிப்புத் தன்மையை எடுத் துக் காட்டும் விதமாகச் செங்குத்தாக நடுவில் வளைந்தும் காணப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் புத்தள மாவட் டத்திலுள்ள பொம்பரிப்பிலுள்ள பானை ஓடுகளிற் காணப்பட்டாலுங்கூட அநுராத புரத்திற் கிடைத்த பானை ஓடுகளிலும் இவை உள. ( Sitrampalam S. K , *1980* figs, *46 - 48* ). பிராமிக் கல்வெட்டுகளிலும் இத்தகைய குறியீடுகள் பூரணமாகாத நிலையிற் காணப்படுகின்றன. (parana-vitana. S. *1970* xxvi : *40 - 41* ) இப்பானை ஓடுகளிலும் பிராமிக் கல்வெட்டுகளிலும் காணப்படும் 'சக' என்ற பொருளைத் தரும் சிலுவை போன்ற அடையாளம்கூடத் தெய்வத்தின் குறியீடெனப் பொருள்படும். பானை ஓடுகளில் இக்குறியீடு வளர்ச்சி யடையாத நிலையிற் காணப்பட்டாலுங் கூடப் பிராமிக் கல்வெட்டுகளில் இது வளர்ச்சியடைந்த நிலையில் உளது. இக் குறியீடுகளில் பாவைகள் போன்ற நிலை யிற் காட்சி தரும் இரு குறியீடுகள் குறிப் பிடத்தக்கவை. முதலாவது குறியீட்டில் தலை, கை, கால்கள் சித்திரிக்கப்படா விட்டாலுங்கூட, மற்றைய குறியீட்டில் இவை தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன (Paranavitana. S., *1970*, xxvi : *12, 19*). தெய்வங்களைச் சிற்பங்களாக வடித்தெடுக் கப்படு முன்னருள்ள நிலையையே இவை குறிக்கின்றன எனலாம். முருகனது ஆயுத மாகிய வேல் தாய்த் தெய்வங்களின் நாண யங்களிற் சித்திரிக்கப்பட்டுள்ளது போல் பானை ஓடுகளிலும் பிராமிக் கல்வெட்டு களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளதும் அவதா னிக்கத்தக்கது. அநுராதபுரத்திலும் ஈழத் தின் பிற பகுதிகளிலுமுள்ள பானை ஓடு களில் இது காணப்படுவதோடு இருதலைச் சூலமும் குறியீடாகப் பிராமிக் கல்வெட்டு களில் உளது, முருகனது வேலானது கந்த ரோடை, பொம்பரிப்பு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போதும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முத்தலைச் சூலங்கள் பரவலாக இப் பானை ஓடுகளிற் காணப்படுகின்றன. ஆனைக்கோட்டையில் கிடைத்த முத்திரை யில் இக்குறியீடுகள் இரண்டு உள. இக் குறியீடுகளிற் காணப்படும் சூலம் முதலில் தனியான ஒரு வழிபாட்டு முறையாக இருந்தது போல் தெரிகிறது. பின்னர் ஒருதலைச் சூலம் முருகனுடனும், முத் தலைச் சூலம் சிவனுடனும் இணைக்கப் பட்டன எனலாம். சிவவணக்கத்தோடு தொடர்புடைய நந்தியினது பாதம் கூடக் குறியீடாகப் பிராமிக் கல்வெட்டுகளில் சித்திரிக்கப்பட்டுள்ளது (Paranavitana. S. *1970* : xxvi : *18, 21a, 21b*). இவற்றில் குறியீடு காணப்படும் ஒரு கல்வெட்டில் நதிக (நந்தி) என்ற பெயரும் காணப்படு கிறது. திருமாலின் ஆயுதமாகிய சக்கரம் மட்டுமன்றி ஸ்ரீ வத்ஷவும் குறியீடாகப் பிராமிக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள் ளது. பிரமாவுடன் தொடர்புடைய அங்கு சமும் இவற்றில் குறியீடாகக் காணப்படு கின்றது. (Paranavitana. S , *1970* : xxvi: *20, 23, 35, 36*).

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இந்தியாவைப் போன்று ஈழத்திலும் தாய்த் தெய்வ வழிபாடானது மிக நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்

ளது எனலாம். இவ்வழிபாடு பற்றி அறிவ தற்குரிய இந்து சமயம் சம்பந்தமான இலக்கியங்கள் காணப்படாததால் ஈழத்துப் பௌத்த நூல்களை மையமாகக்கொண்டே ஆராய்வது தவிர்க்க முடியாததாகி உள் ளது. பௌத்த மதக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட இவற்றுள் இத்தெய்வங்கள் ஏளனமான விதத்தில் 'யக்ஷிகள்' என அழைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை உண்மையிலே இந்துக்கள் மத்தியில் வழக் கிலிருந்த தாய்த் தெய்வங்களின் பல்வேறு மூர்த்தங்களையே குறிக்கின்றன என்பதை நாடெங்கிலும் கிடைத்துள்ள சுடுமண் பாவைகள் உறுதி செய்கின்றன. இவை தரும் சான்றுகளையே பிராமிக் கல்வெட் டுகளில் பௌத்த மதத்தைச் சார்ந்தோர் தமது பழைய சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையிற் சூடிய பெயர்கள் எடுத்துக் காட்டுகின்றன. தாய்த் தெய்வத் தின் பல்வேறு மூர்த்தங்களை எடுத்தியம் பும் இப்பெயர்கள் பல வடமொழி நாமத் துடன் காணப்படுவதானது வடமொழிக் கலாசாரத்தின் தாக்கம் தமிழகத்தில் ஏற் பட்டது போன்று ஈழத்திலும் ஏற்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வழிபாட்டின் தொன்மையை மேலும் நாணயங்கள் உறுதி செய்கின்றன.

ஆரம்பத்தில் தாய்த்தெய்வ வழிபாடு தனித்துவ வழிபாடாகக் காணப்பட்டா லுங்கூட காலகதியில் மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரமா ஆகியோரின் தேவியராக மட்டுமன்றி முருகன் போன் றோரின் தேவியராகவும் சங்கமித்தமை தெரிகிறது. மேற்கூறிய வழிபாடுகள் ஈழத் தில் நன்கு வேரூன்றி இருந்ததை சிவன், பிரமா, விஷ்ணு, முருகன் போன்றோருக் குரிய பல்வேறு நாமங்கள் நாடெங்கணும் உள்ள பிராமிக் கல்வெட்டுகளில் காணப் படுவது எடுத்தியம்புகிறது (சிற்றம்பலம் சி. க. 1996). அத்துடன் சிவனுக்குரிய வாகனமாகிய எருதும் கிறீஸ்து பிறப்ப தற்கு முன்னருள்ள காலப் பகுதிக்குரிய நாணயங்களிலும் காணப்படுவதும் அவ தானிக்கத்தக்கது. தாய்த் தெய்வ வழி பாட்டை தமிழக - அகில இந்தியப் பின்ன ணியில் நோக்கும் போது பௌத்தம் இங்கு கி. மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கால்கொள்ள முன்னர் இவ்வழிபாடு தனித் தும், இந்துக் கடவுளரின் தேவியர் என்ற நிலையிலும் ஈழத்தில் பேணப்பட்டு வந்தமை தெரிகிறது.

---

## உசாவியவை :


அகநானூறு (பதிப்பு) சோமசுந்தரனார். பொ. வெ, (சென்னை) 1973.

சிற்றம்பலம் சி. க. யாழ்ப்பாணம் – தொன்மை வரலாறு. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு. (திருநெல்வேலி) 1993.

சிற்றம்பலம் சி. க. ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம் 1. (கி. பி. 500 வரை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி, 1996.

சிற்றம்பலம் சி. க. பண்டைய ஈழத்தில் தமிழர் – ஒரு பன்முகப்பார்வை – பேரா சிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை, 16-10-2000 யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு.

சிற்றம்பலம் சி. க. பாவலர் துரையப்பாபிள்ளையும் யாழ்ப்பாண வரலாற்று நோக்கும் – ஒரு மீள் பார்வை, அமரர் தெ. து. ஜயரத்தினம் நினைவுப் பேருரை 29-10-2001 மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

சிலப்பதிகாரம் (பதிப்பு) சாமிநாதையர் உ. வே. (சென்னை) 1927

சிவசாமி வி. யாழ்ப்பாணக் காசுகள் – நான்காவது அனைத்துலகத் தமிழா ராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள் (யாழ்ப்பாணம்) 1974.

பத்துப்பாட்டு – மூலமும் நச்சினார்க்கினியருரையும் (பதிப்பு) சாமிநாதையர் உ. வே. (சென்னை) 1950.

புஷ்பரட்ணம் பரமு 'இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள் பவானி பதிப்பகம் (யாழ்ப்பாணம்) 2001.

மணிமேகலை (பதிப்பு) சோமசுந்தரனார் பொ. வே. (சென்னை) 1971.

Deraniyagala P. E P. 'The Maradanmaduva - Tabbova Culture of Ceylon' Spolia Zeylanica, Vol. 29 Part I, 1960.

Deranniyagala, P. E. P. Some New Records of the Tabbova Maradanmaduva Culture of Ceylon 'Spolia Zeylanica, Vol. 29. Part 11 1961.

Mahavamsa (ed) Geiger W. (Colombo) 1960.

Nagaswamy, R. Tantric cult of South India (Delhi), 1982.

Paranavitana S. Inscriptions of Ceylon Vol. I (Colombo) 1970.

Parker H. Ancient Ceylon, Reprint (New Delhi) 1984.

Sitrampalam S, K. The Megalithic Culture of Sri Lanka, unpublished Ph, D. Thesis, University of Poona, 1980.

Sitrampalam S. K. A note on the Lakshmi Plagues of Sri Lanka. A paper presented at the fifth Annual conference of the Numismatic society of Tamil Nadu 1971.

அநுபந்தம்

## சைவநெறி பாடப்புத்தகம் ஆண்டு 11

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம்

### அ. அமைவிடம் :

யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கு நோக்கிக் காங்கேசன்துறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையிற் காங்கேசன்துறைக்குத் தெற்கில் ஏறத்தாழ ஐந்து கிலோமீற்றர் தொலைவிலே தெல்லிப்பழை என்னும் கிராமம் உள்ளது. அங்கமைந்துள்ள ஆலயம் துர்க்கை அம்மன் ஆலயமாகும். இது நெடுஞ்சாலையைப் பார்த்தவாறு அமைந்துள்ளது.

### ஆ. மூர்த்தி விசேடம் :

துர்க்கை அம்பாள் ஆலய ஆரம்பமும் மூர்த்தியின் சிறப்பும் பற்றி பின்வரும் கதை மூலம் அறியமுடிகின்றது. அக்கிராமத்திற் கதிர்காமர் என்னுஞ் சைவப்பெரியார் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார். அவர் ஒருநாள் காங்கேசன் துறையிலிருந்து தோணியிற் புறப்பட்டுச் சென்று வேதாரணியத்தை அடைந்தார். பின்னர் அங்கிருந்து காசிக்குச் சென்றார். அங்கு அவருக்கு ஞானகுரு ஒருவர் வாய்க்கப் பெற்றார். அந்த ஞானகுரு, தேவி உபாசகர். தம் குருவின் வழியைப் பின்பற்றி கதிர்காமரும் தேவி உபாசகராயினார். இந்தியாவிலுள்ள அறுபத்து நான்கு சக்தி பீடங்களுட் கீர்த்தி பெற்றது சொப்பனேஸ்வரி ஆலயம். துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிவுற்றுத் திகழ்கின்றாள். அங்கு வழிபாடு செய்யும் அடியார்கள் தாம்பாளங்களில் ஸ்ரீ சக்கரம் வைத்துப் பூசை செய்தல் அக்கோயிலுக்கான சிறப்பு அம்சமாகும். இக்கோயிலைத் தரிசிக்கும்பொருட்டு கதிர்காமரும் வேதாரணியத்தில் இருந்து இங்கு புறப்பட்டு வந்தார். இங்கு அவர் ஆலயமரபிற்கு அமைய ஸ்ரீசக்கரம் அமைத்துப் பூசை செய்து வந்தார்.

இவ்வாறாகப் பத்து ஆண்டுகள் கழிந்த பின்னர் அவர் தாம் தேவி பூசை செய்த ஸ்ரீசக்கரத்தையும் அப்பூசையிற் பயன்படுத்திய தீர்த்தக் கெண்டியையும் எடுத்துக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டார். கடல் வழியாக வந்த கதிர்காமர் காங்கேசன் துறையில் இறங்கினார். பின்னர், கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடினார். அப் புண்ணிய தலத்திலே தான் கொணர்ந்த ஸ்ரீ சக்கரத்துக்குப் பூசை செய்தார். இதுவே இலங்கையிற் செய்த முதலாவது ஸ்ரீசக்கர பூசையாகும்.

பின்னர் அங்கிருந்து கால்நடையாக உழுகுடைப்பதி என்னும் இடத்தை அடைந்தார். மிகுந்த வெய்யிலும் உடல் தளர்ச்சியும் அவரை வாட்டின. எனவே, மேலும் நடக்க முடியாத காரணத்தினால் அவர் அங்கு நின்ற இலுப்பை மரம் ஒன்றின் நிழலிற் படுத்து உறங்கினார். அப்பொழுது துர்க்காதேவி கதிர்காமருக்குக் கனவிலே காட்சி கொடுத்து, இந்தியாவிலிருந்து கொணர்ந்த புனிதப் பொருள்களை அவ்விடத்திலேயே தாபித்து வழிபாடு செய்யுமாறு கூறி மறைந்தருளினாள். அம்மனின் திருவருட் காட்சியைப் பெற்ற மகிழ்ச்சியில் கதிர்காமர் அவ்வாறே செய்தார். அவ்வாறு அவர் ஸ்ரீ சக்கரம் தாபித்த புண்ணிய வழிபாட்டிடமே தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம்.

இவ்வாலயம் எண்ணிறைந்த அடியார்கள் தரிசிக்கும் பெருங்கோயிலாகவும் அவர்கள் தம் கொடிய வினைகளை அறுத்து அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெறுகின்ற அம்மன் கோயிலாகவும் திகழ்கின்றது. இவ்வாலயத்தின் தலவிருட்ச மாக இலுப்பை விளங்குகின்றது.

## இ. தற்கால வரலாறு :

துர்க்கையம்மன் ஆலயத்திற் கும்பாபிஷேகங்கள் பல நடைபெற்றுள்ளன. அவற் றுள் 1865ஆம் ஆண்டு, 1981ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகங்கள் குறிப்பிடத்தக்கவை.

## ஈ. தீர்த்தச் சிறப்பு :

வரட்சி மிகுந்த பாறாங்கற்கள் நிறைந்த இடத்தில் அகலமாகவும் ஆழமாகவும் நிலத்தை அகழ்ந்து இக்கோயிலுக்கான தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டது. இதற் கான திருப்பணிகள் 1981-11-14ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டுக்காலத் துள் நிறைவேறியமை அம்பாளின் அற்புதச் செயல் எனலாம். இந்தக் கேணியில் முதன்முதலாக 1982-09-01 அன்று தீர்த்தோற்சவம் நடைபெற்றது. இத்தீர்த்தக் கேணி ''துர்க்கா புஷ்கரணி'' என வழங்கப்படுகின்றது.

## உ. பூசைகளும் விழாக்களும் :

அதிகாலை நாலரை மணிக்குத் தெல்லிப்பழை துர்க்கை ஆலயத்தில் திருப்பள்ளி எழுச்சியுடன் பூசைகள் ஆரம்பமாகும்.

இக்கோயிலின் மகோற்சவம் 1968ஆம் ஆண்டு தொடக்கம் ஆவணிமாதத்திலே திருவோண நட்சத்திரத்திலே தீர்த்த உற்சவம் நடைபெறுவதற்கு ஏற்ற வகையிலே பன்னிரண்டு தினங்கள் நடைபெறும். பௌர்ணமி, மகாசிவராத்திரி, மாசிமகம், மணவாளக்கோலம், நவராத்திரி, கார்த்திகைத் திருவிளக்கு முதலிய விசேட தினங் களில் விசேட பூசைகளும் விழாக்களும் நடைபெறும்.

பெண்கள் பலர் இக்கோயிலிற் கேதாரகௌரி நோன்பிருந்து பயனடைந்துள் ளனர். முக்கியமாகக் கன்னிப்பெண்கள் பலர் ஒன்பது வாரங்கள் ஆசாரமாய் இருந்து செவ்வாய் நோன்பு அனுட்டித்து பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊ. சமூகப் பணிகள் :

நம் சமயத்திற் சமூக சிந்தனை, சீரான நிருவாகம், கூட்டு முயற்சி முதலியவற் றுக்கு எடுத்துக் காட்டாகத் துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் விளங்குகின்றது. இங்கு நடைபெறுகின்ற மிகச் சிறந்த சமூக சேவை துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்னும் நிறுவனமாகும், பெற்றோரை இழந்த, ஆதரவு அற்ற ஐந்து வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளை ஆதரித்து, உணவூட்டி, கல்வி புகட்டிப் பராமரித்து வருகின்ற இந்த நிலையம் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் 1982இல் ஆரம்பிக்கப்பட்டது. அன்னபூரணி மண்டபம், நூலகம், அச்சகம் முதலிய பல்வேறு சேவை நிலையங்கள் இக்கோயிலின் நிருவாகத்தில் நடை பெறுகின்றன.

Dr S K[illegible]gasabai
DEng (SWL A[illegible] (B'HAM)
BSc Eng [illegible] (CEY)
PEng (APEO) LMIEEE (USA)

Dr. J. Ranganathan
BEng (SWL'A) MSc (B'HAM)
BSc Eng (LOND) BSc (Cey)
PEng (APEO) LMIEEE (USA)

Cover Printed by: GURU, Thirunelvely & NG